வானிலை
கூ.வெ. 32 °C
கு.வெ. 23 °C
தெளிவான
காலநிலை

# உதயன்

சுடர் 30 | கதிர் 138 | வள்ளுவர் ஆண்டு 2046 | பங்குனி 30, திங்கட்கிழமை 13.04.2015

## ஐக்கியத்தையும் சமாதானத்தையும் பலப்படுத்துவோம்

### புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



கொழும்பு, ஏப்.13
" இன வேறுபாடுகளின்றி இலங்கையர்களாக ஒன்றிணைந்து புத்தாண்டைக் கொண்டாடுவதும் உறவினர்களை சந்திக்கச் செல்தல் போன்ற புத்தாண்டுப் பாரம்பரியங்களில் பங்கு பற்றுவதும் எல்லோர் மத்தியிலும் ஐக்கிய த்தையும் சமாதானத்தையும் பலப்படுத்த உதவும்.
எல்லா இலங்கையர்களும் மகிழ்ச்சியுடன்

பக்.24

# பரிந்துரைகளை செயற்படுத்துவதில் ஆணைக் குழுக்கள் தோல்வி கண்டுள்ளன

### நம்பிக்கை இடைவெளி உள்ளது என ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பப்லோ டி கிரேய்ப் கூறுகின்றார்



கொழும்பு, ஏப்.13
இலங்கை விசாரணை ஆணைக்குழுக்கள் குறித்து நம்பிக்கை இடைவெளி உள்ளது. சில ஆணைக்குழுக்கள் பரந்தளவிலான பரிந்துரைகளுடன் பயனுள்ள அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. வேறு சில அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படவில்லை. போதுமான பரிந்துரைகளைச் செய்வதில் அல்லது செயற்படுத்துவதில் அவை தோல்வி கண்டுள்ளன.– இவ் வாறு ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர்

பக்.24

## இறுதி அறிக்கை வந்தபின் முடிவு

### அதுவரை குடிதண்ணீர் விநியோகம் தொடரும்: முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12
வடக்கு மாகாண குடிதண்ணீர் பாவனை குறித்த பிரச்சினையில் எவ்வாறான நடவடிக்கை மேற்கொள்வது என்பது தொடர்பில், நிபுணர் குழுவிடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது என்று தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் இறுதி அறிக்கை வரும் வரையில் குடிதண்ணீர் விநியோகம் தொடரும் என்றும் குறிப்பிட்டார்.
சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் முடிவில், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பக்.24

## ஊடகங்களுக்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13
யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல், வடக்கு மாகாண முதலமைச்சரால் அழைக்கப்பட்ட கலந்துரையாடல் அல்ல. அதனை வடக்கு மாகாண ஆளுநரே ஒழுங்கமைத்திருந்தார். இதன் காரணமாகவே ஊடகங்களை கலந்துரையாடலுக்கு அனுமதிக்கவில்லை. – இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற குடிதண்ணீர் தொடர்பிலான

பக்.24

## இன ஒற்றுமையை உறுதிசெய்யும் ஆண்டாகட்டும்

### பிரதமர் ரணில் புத்தாண்டு வாழ்த்து

கொழும்பு, ஏப்.13
சமாதானம் மற்றும் மகிழ்ச்சி நிறைந்த சௌபாக்கியம் மிக்க புத்தாண்டாக அமையப் பிரார்த்திக்கின்றேன்.
இது வசந்த காலம். இன,மத பேதமின்றி நாம் அனைவரும் இலங்கையர் என்ற மனோநிலையில் சூரிய திருநாளைச் கொண்டாடும் எழில்மிகு சந்தர்ப்பம் இதுவேயாகும்.
சிங்கள, தமிழ்

பக்.24

உள்ளே....

[illegible]
கடித்தால்
இரண்டு
லட்சம் ரூபா
*பக்கம் 12*

சுனாமி
அச்சத்தில்
யப்பான்
மக்கள்
*பக்கம் 13*



ஹைதராபாத்
இன்று
கதி
கலங்குமாம்!
*பக்கம் 27*

## மறைமுக நிகழ்ச்சிநிரல் இலங்கையில் இல்லை

### சீனப் பிரதித் தூதுவர் ரென் பகியாங் தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.13
இலங்கையில் தமக்கு எந்தவிதமான மறைமுக நிகழ்ச்சி நிரலும் இல்லை என்று கூறியுள்ளார் சீனாவின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் ரென் பகியாங்.
"புதிய அரசு பதவிக்கு வந்ததன் பிற்பாடு இலங்கையில் சீனா

பக்.24

## தமிழர் சுயாட்சியுடன் வாழும் நிலைமை ஏற்பட வேண்டும்

### புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.13
கடந்த காலங்களில் கொடிய ஆட்சியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், தமது சொந்த நிலத்தில் போதிய சுயாட்சி அதிகாரங்களைப் பெற்று சுதந்திரமாக – கௌரவமாக – நிரந்தரமாக வாழும் நிலை வரவேண்டும் என்று சித்திரைப் புத்தாண்டில் நாம் பிரார்த்திக்கின்றோம். அதுவரை நாம் ஓயாது போராடுவோம் என்றும் சபதம் எடுத்துக் கொள்கின்றோம்." – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்

பக்.24

## ஹைஏஸ் வாகனம் மோதி ஒருவர் சாவு

தென்மராட்சி, ஏப்.13
வீதியைக் கடக்க முயன்ற ஓட்டோ சாரதியை எதிர்த்திசையில் வேகமாக வந்த ஹைஏஸ் வாகனம் மோதியதில் ஓட்டோச் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.
இந்தச்சம்பவம்நேற்றுஅதிகாலை 5 மணியளவில் கொடிகாமம் நகர்ப்பகுதியில் நடந்துள்ளது.
வரணி – இயற்றாலையைச் சேர்ந்த முத்துவேலு அகிலேஸ்வரன் (வயது – 34) என்பவரே உயிரிழந்தவராவார்.
கொழும்பிலிருந்து வந்த பஸ்ஸிலிருந்து இறங்கியவர்களுக்காக வீதியின் மறுபக்கத்தில் நின்ற ஓட்டோவை எடுத்து

பக்.24

## ஒபாமாவும் விரைவில் இலங்கைக்கு வரலாம்!

### நம்பிக்கை வெளியிடுகிறது வெளிவிவகார அமைச்சு

கொழும்பு, ஏப்.13
எதிர்வரும் மாதம் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அதற்கு மேலதிகமாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் இலங்கைக்கு வருவதற்கான வாய்ப்புகள் உண்டு என்று வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதுரகம் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்குத் தகவல் அனுப்பியுள்ளது என்று கூறப் படுகின்றது.
அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி கூடிய விரைவில் இலங்கைக்குப் பயணம் மேற்

பக்.24

தமிழ்த் தலைமைகளுக்கு ஒன்றுமையில்லையேல் மீட்சி இல்லை *பக்கம் 17*

நாளை மலர்கின்றது
மன்மத ஆண்டு
விவரங்கள் 3 ஆம் பக்கத்தில்

## பயங்கரவாத தடைச் சட்டம் குறித்து இப்போது ஆலோசிக்கப்படவில்லை

### அரசு கூறுகின்றது

கொழும்பு, ஏப்.13
பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் தற்போது அரசு எந்தவொரு கலந்துரையாடலையும் மேற்கொள்ளாது என்று தெரிவித்துள்ள இலங்கை நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ 19 ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பின்னரே அது குறித்து ஆலோசிக்கப் படும் என்று கூறியுள்ளார்.
இப்போது முதன்மையாக உள்ள விடயம் 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவது மட்டுமே. அதனை நாடாளுமன்றில் நிறைவேற்றுவது குறித்தே நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். – என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பக்.24



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வவுனியாவில் வியாபார நடவடிக்கைகள் களை கட்டியுள்ளன. வவுனியா நகரில் உடுபுடைவைகள், பட்டாசுகள் என்பவற்றை சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரை ஆர்வத்துடன் வாங்கி புத்தாண்டை வரவேற்கத் தயராகி வருகின்றனர்.

# விலை அதிகரித்து விற்பனை; 88 பேருக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம், ஏப். 13

காலாவதியான பொருள்கள் மற்றும் பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்த 56 பேருக்கு எதிராகக் கடந்த மாதம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மாதம் 32 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது– இவ்வாறு பாவனையாளர் அதிகார சபையின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் த.வசந்தசேகரன் தெரிவித்தார்.

பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் கடந்த மாதம் 15 பேருக்கும், காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த 28 பேருக்கு எதிராகவும், நிறை குறைந்த பாண் உற்பத்தி செய்து விற்பனை செய்த வெதுப்பகங்கள் 2 இற்கு எதிராகவும், பொருள்களில் உள்ள சேர்மானங்கள் தொடர்பான பட்டியல் (லேபிள்) இல்லாமல் விற்பனை செய்த குற்றச்சாட்டில் 11 பேருக்கும் எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மாதம் இதுவரையான காலத்தில் காலாவதியான பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் 13 பேருக்கு எதிராகவும்,அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்த குற்றச்சாட்டில் 8 பேருக்கு எதிராகவும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத 9 பேருக்கு எதிராகவும், கொள்வனவு செய்யப் படும் பொருள்களுடன் வழங்கப் படும் இலவச பொருள்களை வழங் காத2 பேருக்கு எதிராகவும் வழக்கு கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற–4)

# வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தவறிவிட்டது அரசு

## இலங்கையைத் தளமாகக் கொண்ட ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு கூறுகின்றது

கொழும்பு, ஏப்.13

தமது ஆட்சிக்காலத்தில் முன்னெடுக் கப்படும் என்று மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் பலவற்றை இலங்கையின் புதிய அரசு நிறைவேற்றத் தவறிவிட்டது. குறிப்பாக ஊழல் மோசடிகள் தொடர்பில் கடந்த 50 நாள்களுக்குள் மக்கள் எதிர்பார்த்த மட்டத்திலான செயற்பாடுகளை புதிய அரசாங்கம் முன்னெடுக்கவில்லை – இவ்வாறு தெரிவித்துள்ளது இலங்கையைத் தளமாகக் கொண்ட ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு. 100 நாள் வேலைத்திட்டத்தின் கடந்துவிட்ட 50 நாள்களுக்குள் அரசின் செயற்பாடுகள் மீதான முன்னேற்றம் குறித்து இந்த அமைப்பு மேற்கொண்ட கருத்துக் கணிப்பின்மூலமே மேற்படி முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டுள்ளது. தாம் எதிர்பார்த்த மட்டத்தில் செயற் பாடுகளை முன்னெடுப்பதற்கு அரசு தவறியுள்ளதாக கருத்துக் கணிப்பில் பங்குபற்றிய 62 வீதமானவர்கள் தெரிவித்துள்ளனர் என்று அந்த அமைப்பு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, அரசால் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் ஓரளவு போதுமானதாக உள்ளதென கருத்துக்கணிப்பில் பங்கேற்ற 32 வீதமானவர்கள் தெரிவித்துள்ளனர். ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதற்கான பொறிமுறைகளை வலுவூட்டுவதற்கு அரசு முன்னெடுக்கின்ற முயற்சிகள் குறித்து திருப்தி அடைவதாக 48 வீதமானவர்கள் கருதுகின்றனர். அத்துடன் இந்த செயற்பாடுகள் குறித்து 43 வீதமானவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். மேலும் ஊழல் மோர்சடிகள் தொடர்பில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் திருப்திகரமானவை என 6 வீதமானவர்கள் குறிப்பிட்டுள்ளனர் எனவும் ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சட்ட ஆட்சியை நடைமுறைப்படுத்துவதில் மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் அது போதுமானதாக இல்லை என வடக்கு, கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் கருதுகின்றனர் என இலங்கை ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பு தெரிவித்துள்ளது. இது தவிர, அமைச்சரவையில் ஊழல் புரிந்தவர்கள் இருக்கின்றனர் என்று நூற்றுக்கு 45 வீதமானோர் கூறியுள்ளனர் எனவும் இலங்கை ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷனல் அமைப்பின் அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ற)

# வர்த்தக நிலைய காணியில் துப்பாக்கி ரவைகள் மீட்பு

பளை, ஏப்.13

இயக்கச்சி சந்தியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் காணிக்குள் ஆயிரக்கணக்கான துப்பாக்கி ரவைகள் மீட் கப்பட்டுள்ளன.

வர்த்தக நிலைய பின்பக்கக் காணியில் நேற்று முன்தினம் துப்புரவுப் பணியில் ஈடுபட்ட வேலையாள்கள் குப்பையைப் புதைப்பதற்கு குழிவெட்டிய போது துப்பாக்கி ரவைகள் காணப்பட்டதை அடுத்து படையினருக்கு தகவல் கொடுத்தனர்.

அதை அடுத்து அங்கு வந்த படையினரால் சுமார் ஆறு அடி ஆழத்துக்கு வெட்டி பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தரவைகள் மீட்கப்பட்டன. வர்த்தக நிலையத்தில் காணப் பட்ட எண்ணெய் பீப்பா ஒன்று நிறைந்து வழியும் அளவுக்கு ரவைகள் மீட்கப்பட்டன.

பி.ப. 2 மணி தொடங்கி இரவு 7 மணி வரை ரவைகள் தோண்டி எடுக்கப்பட்டன என்று நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இரு பகுதியினரின் கட்டுப்பாட்டிலும் அந்தப் பிரதேசம் இருந்ததால் எந்தத் தரப்பினரால் இவை புதைக்கப்பட்டது என்பது தெரியாது என்றும் தெரிவித் தனர். (வ–9)

# கடல் ஆமைகளுடன் இருவர் கைது



யாழ்ப்பாணம்,ஏப்.13

சட்டவிரோதமாக இரண்டு கடலாமைகளைப் பிடித்து வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆமையுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுளள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.பாசையூரில் நேற்றுக் காலை அவர்கள் கடலாமைகளை சந்தையில் வைத்து விற்பனை செய்ய முற்பட்டபோது பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அவற்றை மீட்டதுடன் இரண்டு பேரையும் கைது செய்தனர்.

பின்னர் கடலாமைகள் கடலில் விடப்பட்டன. அவற்றைப் பிடித்தவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்கவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ற–4)

# நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி சுகாதாரத் தொண்டர்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், ஏப்.13

ஊரடங்குச் சட்டத்தின் போதும் கடமையாற்றியிருந்த தமக்கு நிரந்தர நியமனம் கிடைக்காமல் விட்டமைக்கு யாழ்.பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரனே காரணம் என சுகாதார தொண்டர்கள் குற்றஞ்சாட்டினார்கள். நிரந்தர நியமனம் வழங்கக் கோரி சுகாதார தொண்டர்கள் நேற்று ஞாயிற்றுக் கிழமை யாழ். மாவட்ட செயலகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

16 வருடங்களாக சுகாதார தொண்டர்களாகக் கடமையாற்றிய தமக்கு இதுவரையில் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. அண்மையில் வடக்கு மாகாண சபை யால் வழங்கப்பட்ட நிரந்தர நியமனத்தில் வீட்டில் இருந்தவர் களுக்கும், ஒருநாள் கூடக் கடமையாற்றாதவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தமக்கு இன்னும் நிரந்தர நியமனம் வழங்கப் படவில்லை என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினார் கள்.

"16 வருடங்கள் தம்மை ஏமாற்றியது போதும்", "உண்ணாவிரதம் இருந்தாலா எமக்கு நிரந்தர நியமனம் வழங்குவீர்கள்?" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர். (ற–106)

# 19 ஆவது திருத்தச் சட்டத்தால் பிரதமர் அதிகாரம் அதிகரிக்காது

## பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.13

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களில் திருத்தங்களை மேற்கொள்வது மற்றும் தேர்தல் முறை சீர்த்திருத்தத்துக்கும் இடையில் முக்கியமான தொடர்புகள் இருக்கும் என்பதை நம்பமுடியாது என பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பீ. பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார்.

தேர்தல் முறை சீர்த்திருத்தத்தை துரிதமாக முன்வைக்க முடியுமாயின் அதனையும் நிறைவேற்ற முடியும். எவ்வாறாயினும் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பின்னர், குறித்த திருத்தச் சட்டத்தில் பந்திகள் நீக்கப்பட்டன.

இந்த அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தால், பிரதமரின் அதிகாரம் வலுவடையும் நிலைமை காணப்படவில்லை – என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)



மறைந்த அஸ்கிரிய பீடத்தின் மஹாநாயக்கர் அதி வணக்கத்துக்குரிய உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரரின் பூதவுடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை அக்கினியுடன் சங்கமமானது.

சிங்கப்பூர், மவுண்ட் எலிசபெத் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், தனது 85ஆவது வயதில் அவர் காலமானார். அவரது இறுதி கிரியைகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித்தலைவர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் நாடாளுமன்ற, மாகாண சபை, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# நாளை மலர்கிறது மன்மத ஆண்டு

**வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம் மன்மத வருஷ வருஷப் பிறப்புக் கருமம்**

கலியுகாதி சுத்ததினம் 1868661, நாடி 15விநாடி 43, தற்பரை 45க்குச் சரியான மன்மத வருஷ சித்திரை மீ 1 (14.04.2015) செவ்வாய்க்கிழமை பகல் நாடி 15 விநாடி 44 (மணி 12.23) இல் அபரபக்க தசமித் திதியில், அவிட்ட நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் சுபம் நாமயோகத்தில், விட்டிக் கரணத்தில், கடக லக்கினத்தில், கடக நவாம்சத்தில், குரு காலவோரையில், சுக்கிரன் சூக்கும வோரையில், தாமத குணவேளையில் நட்சத்திர பட்சியாகிய மயில் நடைத்தொழிலும் சூக்கும பட்சி நடைத்தொழிலும் செய்யுங் காலத்தில் இப்புதிய மன்மத வருஷம் பிறக்கின்றது. அன்று முற்பகல் நாடி 5 விநாடி 44 (மணி 8.23)முதல் அன்று பிற்பகல் நாடி 25 விநாடி 44 மணி (மணி 4.23) வரை விஷு புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் விளாவிலையும், காலில் கடப்பமிலையும் வைத்து ஸ்நானஞ்செய்து வெண்மை, சிவப்பு நிறமுள்ள பட்டாடை ஆயினும் வெண்மை, சிவப்புக்கரை அமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து பவளம், முத்து இழைத்த ஆபரணம் அணிந்து, சுகந்த சந்தனம் பூசி, நறுமலர்சூடி விக்கினேஸ்வரர் முதலிய குலதெய் வழிபாடு செய்து, சூரியனுக்குப் பொங்கல் பூசைகள் செய்து குரு, பெற்றார் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசிபெற்று, பந்து மித்திரர்களுடன் அளவளாவி, அறுசுவை அமைந்த உண்டிகளுடன் வேம்பம்பூ, பொரிக்கறி, கசப்பு என்பவை சேர்த்தருந்தி தாம்பூலம் தரித்து, கண்ணாடி, தீபம், நிறைகுடம் முதலிய மங்கலப் பொருள்களைத் தரிசித்து புதிய வருஷ பலாபலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து அரியதவற்றாற் பெற்ற மானிடப்பிறவியிற் செயற்பாலனவற்றை இனிது சிந்தித்து மங்களகரமாக வாழக்கடவர்.

**மருத்து நீர் :-** தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்திலிட்டு காய்ச்சிக்கொள்க.

**சங்கிரம தோஷ நட்சத்திரங்கள் :-** மிருகசீரிடம், திருவாதிரை, புநர்பூசம் 1ஆம், 2ஆம், 3ஆம் கால்கள், சித்திரை, உத்தராடம் 2ஆம், 3ஆம், 4 ஆம் கால்கள், திருவோணம், அவிட்டம் இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ்செய்து இயன்ற தானதருமங்களைச்செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்யக்கடவர்.

**திருக்கணித பஞ்சாங்கத்தின் பிரகாரம் மன்மத வருஷப்பிறப்புக் கருமம்**

மன்மத வருஷம் சித்திரை மாதம் 1 ஆம் திகதி (14.04.2015) செவ்வாய்க்கிழமை பகல் உதயாதி நாழிகை 19-22 மணி பிற்பகல் 1.47 இல் மன்மத என்னும் பெயருடைய புது வருஷம் பிறக்கிறது. அன்று நட்சத்திரம் அவிட்டம் 2 ஆம் கால், திதி அபரபட்ச தசமி. இது 60 வருட சுற்றுவட்டத்தில் 29 ஆவது வருஷமாகும். அன்று காலை நாழிகை 9.22 (மணி காலை 9.47) முதல் மாலை நாழிகை 29.22(மணி மாலை 5.47) வரை மேடசங்கிரமண புண்ணிய காலம் எனப்படும். வருஷம் பிறக்கும் போது உதயலக்கினம் "கடகம்" ஆகும்.

இப் புண்ணிய காலத்தில் சகலரும் சங்கற்ப பூர்வமாக மருத்துநீர் தேய்த்து தலையில் கடப்பமிலையும், காலில் வேப்பமிலையும் வைத்து ஸ்நானஞ் செய்து, செந்நிறப் பட்டாயினும், அல்லது சிவப்புக்கரை வைத்த வெள்ளைப் புது வஸ்திரமாயினுந் தரித்து, பவளம் சேர்த்திழைக்கப் பெற்ற ஆபரணங்களை அணிந்து, நித்திய கர்மானுஷ்டானம் முடித்து, கண்ணாடி, தீபம், பூரண கும்பம் முதலிய மங்கலப் பொருள்களைத் தரிசித்து, விநாயகர் முதலிய இஷ்டகுல தெய்வங்களைத் தரிசனங்கள் செய்து, தத்தம் இல்லங்களில் சூரியனுக்கு பொங்கல், பூஜை, வழிபாடுகள் செய்து குரு, பெற்றோர் முதலிய பெரியோர்களை வணங்கி அவர்கள் ஆசிபெற்று, பிதிர் விரதானுசாரிகள் சிராத்தம் தர்ப்பணம் என்பன செய்து விருந்தினர், நண்பர்களை வரவேற்று உபசரித்து சுற்றத்தினருடனிருந்து, வேப்பம்பூ, புளியோதரை முதலியவற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போஜனஞ் செய்து, தாம்பூலமருந்தி, சுகந்த சந்தன புஷ்பாதிகளை அணிந்து புது வருடத்தில் ஆற்றக்கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து புதுப்பஞ்சாங்க பலன்களைக் கேட்டு, மங்களகரமாக வாழ்வார்களாக.

**சங்கிரமதோஷ நட்சத்திரங்கள்-** மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், சித்திரை, உத்தராடம் 2ஆம், 3ஆம், 4ஆம் கால்கள், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி 1ஆம்,2ஆம்,ஆம் கால்கள்.

**மருத்துநீர்-**தாழம்பூ, தாதுமாதுளம்பூ, தாமரைப்பூ, துளசி, வில்வம், அறுகு, பால், கோமயம், கோசலம்,கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், மஞ்சள், சுக்கு, திற்பலி ஆகியவற்றை சுத்த ஜலத்தில் இட்டுக் காய்ச்சிய கஷாயமாகும். பூவகை கிடையாவிடின் அவைகளின் இலை, பட்டை, வேர், கிழங்க் யாதாயினும் உபயோகிக்கலாம்.

# எதிர்க்கட்சித் தலைவராக அனுரகுமாரவுக்கே தகுதி

## மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.13

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவுக்கு வழங்க வேண்டும் என அந்த கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்துள்ளார்.

வாராந்த பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"எதிர்க்கட்சித் தலைவர் பதவி எமது கட்சியின் தலைவர் தோழர் அனுர குமார திஸாநாயக்கவுக்கே உரித்தானது. ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்றத்தில் உள்ள ஏனைய உறுப்பினர்கள் அமைதியாக இருந்த போதும், அனுரகுமார திஸாநாயக்கவே மக்களின் பிரச்சினைகளைப் பற்றி பேசினார். ஊடகங்கள் வாயிலாக அரசுக்கு எதிராக அவர் குரல் கொடுத்தார். எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷவுடன் கோப்பி அருந்திக்கொண்டு அண்ணன், தம்பி போல் இருந்தாரே தவிர மக்களுக்காக எதனையும் செய்யவில்லை. ரணில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற தனது பணியை சரியாக நிறைவேற்றவில்லை."- என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

"நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் நாங்களே மக்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுத்தோம். ரணில், ரத்ன தேரர், சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் மக்களுக்காக குரல் கொடுக்கவில்லை. அதே போல் நிமல் சிறிபால டி சில்வா எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு எந்த வகையிலும் பொருத்தமற்றவர்.

இது தவறான முன்னுதாரணம். சம்பிரதாயபூர்வமாகவே எதிர்க்கட்சித் தலைவர் நியமிக்கப்படுகின்றார். சட்டதிட்டங்களுக்கு அமைய எதிர்க்கட்சி தலைவர் நியமிக்கப்படுவதில்லை. இதற்காக நாடாளுமன்றத்தில் நிலையியல் கட்டளைச் சட்டங்கள் இல்லை. அரசுடன் சம்பந்தப்பட்டவர்களை எதிர்க் கட்சித் தலைவர் பதவிக்கு நியமிப்பது தவறானது.

அந்த அடிப்படையில், தினேஷ் குணவர்த்தனவும் அந்தப் பதவிக்கு தகுதியற்றவர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாக கூறப்படும் அந்த ஆவணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. எதிர்க்கட் சிகள் இணைந்து எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்ய வேண்டும்.

அப்படி நியமிக்கப்படும் நபரை ஏற்றுக்கொள்ள நாங்கள் தயாராக இருக்கின்றோம். நிமல் சிறிபால டி சில்வா, தினேஷ் குணவர்தன போன்றவர்களை ஜே.வி.பி ஏற்றுக் கொள்ளாது."- என்றும் அவர் கூறியுள்ளார். (ற)

# அரியாலை கிழக்கு பகுதியில் மீன்பிடி வலைகள் தீக்கிரை

கொழும்புத்துறை, ஏப்.13

அரியாலை கிழக்கு, முனைப் பகுதியில் தீ பரவியமை காரணமாக அங்கு வைக்கப்பட் டிருந்த கடற்றொழில் வலைகள் மற்றும் உபகரணங்கள் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளன.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது. குருநகர் மற்றும் பாஷையூரைச் சேர்ந்த மீன வர்களின் 2 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட வலைகள், மற்றும் உபகரணங்கள் எரிந்து சாம்பராகியுள்ளன.

குருநகர், பாஷையூரிலிருந்து முனைப் பகுதிக்குச் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் தமது உபகரணங்களை அந்தப் பகுதியில் உள்ள பாதுகாப்பான இடங்களில் வைத்துவிட்டு வருவது வழமையாகும்.

இந்தநிலையில் அந்தப்பகுதியில் பற்றைகள், வயல்நிலங்களுக்கு மூட்டிய தீ பரவி வலைகள் வைக்கப்பட்டிருந்த இடத்தையும் எரித்தமையால் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவித்தனர். (வ-135)



கிளிநொச்சி, இரணைமடுச்சந்தியை அண்டிய பகுதிகளில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மினிசூறாவளி வீசியதில் வியாபார நிலையங்களின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. (வ)

# பொற்பதியில் நாளை குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 13

கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகம் புதுவருடத் தினத்தன்று இம்முறையும் 11 ஆவது தடவையாக குருதிக்கொடை நிகழ்வை ஏற்பாடு செய்துள் ளது.

பொற்பதி அறிவாலயக் கட்டடத் தொகுதியில் நாளை செவ் வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது. புது வருடத்தை நல்ல நிகழ்வுடன் ஆரம்பித்தல் எனும் தொனிப்பொருளில் 2005 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிகழ்வு இடம்பெறுகிறது. ஒவ்வொரு தடவையும் சுமார் 50 பேர் வரையில் குருதிக் கொடை வழங்கவுள்ளனர். நாளையதினம் அனைவரையும் கலந்து கொண்டு குருதிக் கொடை செய்யுமாறு கழகத்தி னர் கேட்டுள்ளனர். (வ-4)

# தடம்புரண்டது படி வாகனம் ஒருவர் காயம்

பளை, ஏப்.13

வேகமாகச் சென்ற படி வாகனம் வீதியை விட்டு விலகி தடம் புரண்டதில் அதில் பயணித்த ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் மாலை இயக்கச்சிக்கும் ஆனையிறவுக்கும் இடையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் புத்தாண்டு வியாபாரத்துக்காக உடுபுடை வைகள் கொண்டு வந்து, கடை விரித்துவிட்டு மேலும் உடு புடைவைகள் எடுத்து வரச் சென்ற வேளையில் ஆணி உடைந்ததில் தடம்புரண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவ்வழியே சென்ற வாக னத்தில் பயணித்தவர்கள் வாகனத்தை நிமிர்த்தி காயமடைந் தவரை கிளிநொச்சி மருத்துவ மனைக்கு கொண்டுசென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## கைதடி இல்ல முதியோருக்கு இலைக்கஞ்சி

யாழ்ப்பாணம், ஏப். 13

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படும் என்று இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.

நாவற்குழி கந்தையா கன கம்மா ஞாபகார்த்த நிதியத்தின் உதவியுடன் இந்த இலைக்கஞ்சி வழங்கப்படும். நாளை செவ்வாய்க்கிழமை இந்தத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படும்.

இலைக்கஞ்சி ஒவ்வொரு மாதத்திலும் ஒரு நாள் முதியோர்களுக்கு தொடர்ந்து வழங்கப்படும்.

முதியோர்களுக்கான சத்துணவு வழங்கும் திட்டத்தின்கீழ் இலைக்கஞ்சியும் வழங்கும் திட்டம் தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அவர்மேலும்குறிப்பிட்டார். (வ–17)

# ஆளணி குறைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனை

## வெளிநோயாளர் பிரிவில் நோயாளர்கள் காத்திருக்கும் அவலம்




தென்மராட்சி,ஏப். 13

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையால் வெளிநோயளர் பிரிவில் சிகிச்சை பெற வருவோர் நீண்ட நேரம்காத்திருக்கவேண்டியுள்ளது.

ஆறு மாதங்களுக்கு முன்னர் வெளிநோயாளர் பிரிவுக்குச் செல்லும் நோயாளர் 12 தொடக்கம் 15 நிமிடங்களுக்குள் சிகிச்சை பெற்று வெளியே வரக்கூடியதாக இருந்ததாகவும் தற்போது 60 தொடக்கம் 90 நிமிடங்கள் வரை செல்வதாகவும் நோயாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மருத்துவ மனை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்ட போது,

'மருத்துவமனைக்கு தினமும் 500 தொடக்கம் 600 வரையான நோயாளர்கள் வருகை தருகின்றனர். முன்னர் வெளி நோயாளர் பிரிவில் நான்கு மருத்துவர்களும் அவசர சிகிச்சைப் பிரிவு, அனுமதிப்பிரிவு ஆகியவற்றுக்கு தனித்தனி மருத்துவர்களும் பணியாற்றியுள்ளனர். அத்து டன் ஊசி போடும் அறையில் 2 தாதிய உத்தியோகத்தர்களும் மருந்து கொடுக்கும் பிரிவில் 3 உத்தியோகத்தர்களும் பணியாற்றியுள்ளனர். மருத்துவமனையில் மருத்துவர் உட்பட 2 தாதிய உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப் பட்டு பதிலீடு செய்யப்பட்டவர்கள் இன்னமும் வந்து கடமைகளைப் பொறுப்பேற்காததால் உள்ள உத்தியோகத்தர்களை வைத்து சமாளிப்பதால் நோயாளர்களுக்கு காலதாமதம் ஏற்படுகிறது.

வெளிநோயாளர் பிரிவில் கடமையாற்றும் 2 மருத்து வர்களே அவசர சிகிச்சைப் பிரிவு, மற்றும் அனுமதிப்பிரிவுகளையும் கவனித்து வருகின்றனர்.

விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் தாதிய உத்தியோகத்தர் பற்றாக்குறையால் விடுதி நோயாளர்கள், கிளினிக் நோயாளர்கள் போன்றோரின் பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களே வெளிநோயார்கள் பிரிவு, ஊசி போடும் அறையிலும் கடமையாற்ற வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனை காலாண்டு புள்ளி விவ்ரங்களின் பிரகாரம் கடந்த மாதம் (மார்ச்) 12 ஆயிரத்து 454 நோயாளர்கள் மருத்துவமனை வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும், 910 பேர் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், 2 ஆயிரம் நோயாளர்கள் காயங்களுக்கும், புண்களுக்கும் மருந்து கட்டியதாகவும், 675 பேருக்கு ஊசி மருந்து ஏற்றப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆளணிப் பற்றாக்குறை இருந்த போதிலும் கடமையாற்றும் ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றுவதாகவும் தெரிவிக் கப்பட்டது. (வ–9)

## மன்னார் நற்கருணைநாதர் ஆலயத் திறப்பு வியாழனன்று



மன்னார், ஏப்.13

மன்னார் ஜோசப்வாஸ் நகர் கிராமத்தில் அமைக்கப்பட்டு வரும் நற்கருணை நாதர் ஆலய திறப்பு விழா மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்பு ஆண்டகையின் 75 ஆவது பிறந்த தினமாகிய எதிர்வரும் 16 ஆம் திகதி, வியாழக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட வுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு இறை பிரசன்னத்தில் வடக்கு,கிழக்கு மறை மாவட்ட ஆயர்கள் ஒன்றிணைந்து அபிஷேகம் செய்து கூட்டுத்திருப் பலி ஒப்புக்கொடுக்கப்பட உள்ளது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகைதலைமையில் யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், திருகோணமலை மறை மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை ஆகியோர் இணைந்து ஆலயத்தை திறந்து வைத்து . திருப்பலியை ஒப்புக்கொடுக்க வுள்ளனர். (வ)

## ஒளிபெற்றது சிறீநகர் கிராமம்



வவுனியா, ஏப்.13

சிறீநகர் கிராமத்தின் வீதி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. வட மாகாண சபையின் உறுப்பினர் மருத்துவ கலாநிதி சி.சிவமோகனின் நிதி ஒதுக்கீட்டில் அவை அமைக்கப்பட்டுள்ளன. கடந்த புதன்கிழமை நடைபெற்ற நிகழ்வில் அவர் கலந்து கொண்டு மக்கள் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வில் வீதி விளக்கு சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் போது அவர் உரை நிகழ்த்திய போது;


"மேற்படி கிராமத்தில் கடந்த கால போர்ச் சூழலில் சிக்குண்ட மக்கள் இன்னும் உதவிகள் இன்றி அல்லல் பட்டு வருகின்றார்கள். மழை வெள்ளம் தடுப்பணையும் மீறி கிராமத்தை ஊடறுத்து வருகின்றது. எனவே உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த மக்களை இந்த வெள்ளத்தில் இருந்து காப்பாற்ற முன்வர வேண்டும்.

குறித்த கிராமத்துக்குத் தேவையான அனைத்தையும் தீர்த்து தருவதற்காக தான் முன் நிற்பதாக உறுதியளித்தார். (வ)

## வரணியில் கைது செய்யப்பட்ட நால்வரும் விடுவிக்கப்பட்டனர்

தென்மராட்சி.ஏப்.13

கொடிகாமம் பொலிஸாரால் கடந்த மாதம் 23ஆம் திகதி இரவு வேளையில் வரணிப் பிரதேசத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 4பேரும் கடந்த செவ்வாய்க் கிழமை விடுவிக்கப்பட்டனர்.



குறித்த நால்வரும் சாவகச்சேரி நீதிமன்றில் பாரப்படுத்தப் பட்ட சமயம் நீதிமன்றின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தனர். குறித்த நபர்களுக்கும் வரணிப் பிரதேசத்தில் இடம்பெற்ற பணம், நகைக் களவு போன்ற சம்பவம் தொடர்பில் எதுவித தொடர்பும் இல்லை என்று நீதிமன்றம் கருதியமையால் இவர்கள் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன்பாதுகாப்பில்இருந்தகுறித்த நபர்கள் பயணித்த வாகனத்தையும் உரிமையாளரிடம் கையளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி வரணிப் பிரதேசத்தில் இடம் பெற்ற பணம், நகைகள் என்பன இரவு வேளையில் இனம் தெரியாத நபர்களால் கத்தி முனையில் வைத்து கொள்ளையிடப்பட்ட சம்பவத்தை அடுத்து மறுநாள் குறித்த இரவு வேளை அந்தப் பகுதியால் பயணித்த சமயம் பிரதேச விழிப்புக் குழுவினரால் பிடிக்கப்பட்டு அவர்கள் பயணித்த வாகனத்துடன் கொடிகாமம் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ–122)

## முருங்கன் மருத்துவமனை குறைபாடுகள் தீர்க்கப்படும்

### வட மாகாண போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு



மன்னார், ஏப்.13

மன்னார் முருங்கன் மருத்துவமனை குறைபாடுகளை விரை வில் நிவர்த்தி செய்ய மாகாண மற்றும் மத்திய சுகாதார அமைச்சர்களுடன் விசேட சந்திப்பை நிகழ்த்தவுள்ளதாகத் தெரிவித்தார் வடக்கு மாகாண போக்குவரத்து மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன்.

குறித்த மருத்துவமனைக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை திடீர் பயணம் மேற்கொண்ட அவர் அங்குள்ள குறைகள் மற்றும் ஊழியர் பற்றாக்குறை, அங்கு வருகின்ற நோயாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் மருத்துவ அதிகாரி வைத்தியர் பிரசன்னா சிங்கராயருடன் கலந்துரையாடியதுடன் விடுதிகளையும் நேரடியாகப் பார்வையிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், விரைவில் மாகாண மற்றும் மத்திய சுகாதார அமைச்சர்களுக்கு இந்தப் பிரச்சினை தொடர்பில் தெரிவித்து, உடனடி தீர்வுவழங்க தான் ஆவன செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார். இதன் போது வட மாகாணசபையின் மன்னார் மாவட்ட உறுப்பினர் ரிப்கான் பதியுதீனும் உடன் சென்றிருந்தார். (வ–56)



## சாவகச்சேரி சங்க பணியாளருக்கு விசேட கொடுப்பனவு

தென்மராட்சி, ஏப்.13

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பணியாளர்களுக்கு 30 வீத சம்பள உயர்வுடன் விசேட கொடுப்பனவாக 5 ஆயிரத்து 850ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. மார்ச் மாதம் வரையான மூன்று மாதங்களுக்குரிய 30வீத சம்பள அதி கரிப்பு நிலுவையுடன் விசேட கொடுப்பனவும் வழங் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. (வ–9)

# அரசியல் பணி செய்வதற்கு இளைஞர் முன்வர வேண்டும்

## வினோநோகராதலிங்கம் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஏப்.13

மக்களை அணிதிரட்டவும், தலைமை தாங்கவும் கூடிய சக்தியும் பலமும் இன்றைய இளைஞர் சமுதாயத்திடம் அதிகம் உள்ளது. சுயநல அரசியல் வாதிகளின் கைகளால் கறைபடிந்து கொண்டிருக்கும் தூய்மையான அரசியலை உங்களைப் போன்ற இளைஞர்களினால்தான் காப்பற்ற முடியும். – இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா பிரதேச இளைஞர் சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

"சில சுயநல அரசியல் வாதிகளின் நடவடிக்கைகளினாலும், போக்குகளாலும் நீங்கள் அரசியலில் ஈடுபடுவதை தவிர்த்திருக்கலாம். கடந்த காலங்களில் தமிழ் இளைஞர்கள் அரசியலில் பிரவேசிக்கும் போது அரசு சந்தேகம் கொண்ட ஒரு நிலைமை இருந்தது. ஒரு காலத்தில் துப்பாக்கி கலாசாரம் மேலோங்கி இருந்தது. சாதாரண இளைஞர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்தது. அதனால் நீங்கள் அரசியலில் ஈடுபட அச்சப்பட்டீர்கள். இன்று அந்த நிலமை மாறியிருக்கின்றது.

நீங்கள் தேர்தலிலும், அரசியலிலும் ஈடுபட நாம் வாய்ப்புக்கள் வழங்க தயாராக இருக்கின்றோம். நேர்மையான, உண்மையான அரசியல் பணி செய்ய நீங்கள் தயாராக வேண்டும். ஒரு சில அரசியல் வாதிகள் செய்கின்ற தவறுகளால் ஒட்டு மொத்த அரசியல்வாதிகளும் விமர்சிக்கப்படுகின்றார்கள். சமூக, சமுதாய பணிகளில் நீங்கள் வெற்றி கொண்டால் அரசியல் பணிகளிலும் உங்களால் வெற்றி கொள்ள முடியும். எமது மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றங்களை உங்களினால் கொண்டு வர முடியும்.

அண்மைய அரசியல் மாற்றத்தில் இளைஞர்களின் பங்களிப்பு இதற்கு எடுத்துக்காட்டானதாக அமைந்துள்ளது. அரசியலோடு சமூக, பொருளாதார கல்வி போன்ற விடயங்களிலும் இளைய சமுதாயம் புரட்சிகர சிந்தனைகளுடன் போராட முன்வர வேண்டும்"– என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# மஹிந்த என்ற கற்பாறையுடன் மோதியதால் பயன் கிடைத்தது

## கூறுகிறார் பொன்சேகா

கொழும்பு, ஏப். 13

மஹிந்த என்ற கற்பாறை மீது மோதி தலையை உடைத்துக்கொள்ள வேண்டாம் என்று பலர் எனக்குப் புத்திமதி கூறியுள்ளனர். ஆனால் அதன் பலாபலன் தற்போது கிடைத்துள்ளது என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கண்டி பௌத்த இளைஞர் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அபிவிருத்தி ரீதியாக இந்த நாட்டை முன்னேற்றுவதற்கான எந்த ஒரு திட்டமும் கொள்கையும் தற்போதைய அரசுக்குக் கிடையாது. அரசு பதவி யேற்று மூன்று மாதங்கள் கடந்து விட்டபோதும் விவசாய கைத் தொழில் கடற்றொழில் தொடர்பான துறைகளில் அபிவிருத்தி ஏற்படுத்தப்படவில்லை. முன்னைய அர சைப் போன்றே வினைத்திறனற்ற வயிற்றுப்பிழைப்பை மைய மாகக் கொண்ட அரசாகவே உள்ளது.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது அரசின் தலையாய கடமையாகும். அவ்வாறு நிறைவேற்றாவிட்டால் அது நாட்டுக்குச் செய்யும் துரோகமா கும்.

பிரபலமான இரு கட்சிகளையும் சேர்ந்த ஊழல் பேர் வழிகள் தேர் தல் திணைக்களத்தில் செல்வாக்குச் செலுத்தாமல் இருப்பார்களாயின் நியாயமான ஒரு தேர்தலை எதிர் காலத்தில் எதிர்பார்க்க முடியும். தேர்தல் திணைக்களத்தில் நேர்மையாக இயங்கக் கூடிய ஒரு சூழல் மிகச் சிரமத்துக்கு மத்தியில் ஏற்படுத்தப்பட்டது.

2012 மே மாதம் 21ஆம் திகதி நான் சிறையிலிருந்து விடுதலையான போது இவ்வாறான ஒரு சூழ்நிலை காணப்படவில்லை. என்னுடன் ஏழு எட்டுப் பேர் அளவில் தான் இணைந்திருந்தனர். எனக்கு எதுவித பலமும் இல்லாத போதும் 2015 ஆம் ஆண்டுடன் மஹிந்த ஆட்சிக்கு முடிவு கட்டுவோம் என்று கூறினேன். அப்போது சிலர் என்னிடம் கூறினார்கள் கற்பாறையுடன் மோதி தலையை உடைக்க வேண்டாம் என்று. என்னைப் பார்த்து பித்தன என்று கூடக் கூறினர். ஆனால் அன்று நான் எதிர்பார்த்தது இன்று நடந்துள்ளது.

நாம் பொதுமக்களுடன் நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களது எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும். அப்போது தான் உண்மையான மனிதாபிமானமுள்ள அரசியல்வாதியாகலாம்– என்றார். (த)

# சேற்றை பூசுகிறார் சம்பிக்க

## ரிரான் அலஸ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 13

ராடா நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி தொடர்பில் என்னை தொடர்புபடுத்தி எனக்குச் சேறு பூசி, எனக்கு எதிராகச் சூழ்ச்சிகளை ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவே மேற்கொள்கின்றார் – என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஊழலுக்கு எதிரான முன்னணி என்னும் பெயரில் முன்னணியை அமைத்து, அந்த முன்னணியின் ஊடாக பொலிஸ் தலைமையகத்துக்கு ஆவணங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இது என் மீது சேறு பூசுவதற்கும் என்னைப் பழிவாங்குவதற்குமான நடவடிக்கையாகும்.

எதற்கும் நான் தலைகுனிபவன் அல்ல என்பதைச் சம்பிக்கவுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன். எனக்கு பாடம் கற்பிப்பதற்கு அவருக்கு முடியாது. நான் இதனைக் கொண்டுசெல்லவேண்டிய இறுதி இடத்துக்கு கொண்டு சென்று போராடுவேன். அவருடைய வீட்டில் வேலை செய்கின்ற பையன் போல இருக்கின்ற நிஷாந்த வர்ணசிங்கவையே அவர், பயன்படுத்திகொண்டிருக்கின்றார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். . (த)

# 12 வருடங்களில் முடியாததை குறுகிய காலத்தில் செய்தோம்

## ரவி கருணாநாயக்க பெருமிதம்

கொழும்பு, ஏப். 13

கடந்த 12 வருடங்களால் செய்ய முடியாததை நல்லாட்சி அரசு குறுகிய காலத்தில் செய்துள்ளதாக நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த அரசு பெருந்தெருக்கள் அமைக்க 200 கோடி ஒதுக்கியிருந்த போது நாட்டுக்கு முக்கியமான கல்வி மற்றும் சுகாதாரத் துறைக்கு அந்தளவு நிதி ஒதுக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த அரசு நிதியை வீண் செலவு செய்ததாகவும் அந்த வீண்செலவுகளைத் தவிர்த்து மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

அத்தியாவசிய பொருள்களின் விலையைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கியுள்ளதாகவும் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

எதிர்காலத்திலும் மோசடிகளை ஒழித்து, மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என அமைச்சர் கூறினார். (த)

# பொதுமக்களுக்கு 'ஹைபை' காட்டியது மஹிந்த அரசு

## அமைச்சர் கயந்த கருணாதிலக்க கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.13

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு தனது பலத்தை (hifi) காட்டியதாகவும் தற்போதைய நல்லாட்சி அரசு இலவசவைபை மற்றும் சலுகைக்கு மேல் சலுகைகளை வழங்கி மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தி வருவதாகவும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சரின் அழைப்பின் பேரில் எல்பிட்டிய பிரதேசத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வைபை வலயத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதேவேளை கர்ப்பிணி தாய்மாருக்கு போஷாக்கு பொதியை வழங்கும் நிகழ்வும் எல்பிட்டிய மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. (ற)

# மைத்திரியால் முடியாவிடின் ரணில் பொறுப்பேற்கட்டும்

## கூறுகிறார் ஞானசார தேரர்

கொழும்பு, ஏப். 13

நாட்டில் பல தலைவர்கள் இருக்கின்றார்கள். மைத்திரியால் முடியாவிட்டால் நாட்டின் அதிகாரத்தை ரணில் பொறுப்பேற்கவேண்டுமென பொதுபல சேனா இயகத்தின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

நாடு பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாகவும், எதிரிப் படைகளின் தாக்குதல்களை கட்டுப்படுத்த யாரும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாட்டில் உள்ள பிரச்சினைகளை மாத்திரமே 100 நாள் வேலைத் திட்டத்தின் கீழ் அமைந்த நாள்களில் பேசப்பட்டிருந்தது. எனினும் அபிவிருத்திகள் எதுவும் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் முன் னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு 'கூ' சத்தமிட்டது குறித்து நாட்டின் குடிமகன் என்ற ரீதியில் கவலையடைவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் தலைவர் ஒருவருக்கு 'கூ' சத்தமிடும் நிலை சமூகத்தில் ஏற்பட்டிருப்பது கவலைக்குரிய விடயமாகும். ஜனாதிபதித் தேர்தலின்போது மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கே அதிகாரத்தை வழங்கினார்கள். சந்திரிகாவுக்கு அல்ல.

முன்னாள் ஜனாதிபதியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆலோசகராக நியமித்தவர்களே இவ்வாறான நிலைக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# ஆந்திராவில் தமிழர்கள் கொல்லப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாதது

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, ஏப்.13

ஈழத்தில் இனப்படுகொலை இடம்பெற்ற போதும் ஈழத்தமிழர்கள் மீது வன்முறைகள், தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்படும்போதும் அத்தகைய மனித உரிமை மீறல்களுக்கு எதிராக தங்களது கண்டனத்தையும் அனுதாபத்தையும் வெளிப்படுத்தி, தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்காக தங்களது உடல்களையே தீயில் கருக்கிய தமிழகத்து உறவுகள். ஒப்பற்ற உயிர்த் தியாகங்களை செய்துள்ள எமது உறவுகள், ஆந்திராவில் படுகொலை செய்யப்பட்டுள்ளமை ஆறாத வலியையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது– இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

ஆந்திரா வனப்பகுதியில் இருபது தமிழ் தொழிலாளர்கள் வனத்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகளால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளமையைக் கண்டித்து நேற்று வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ் தொழிலாளர்களின் வறுமையை காரணம் காட்டி, அவர்களை 'என்ன தொழிலுக்காக கூட்டிச் செல்லுகின்றோம்' என்றுகூடக் ... விரோத தொழில்களில் ஈடுபட பணிக்கப்படுகின்றனர். –இவ்வாறு அழைத்துச் செல்லப்படும் தமிழ் தொழிலாளர்கள், 'தாங்கள் இன்ன தொழிலுக்காக தான் அழைத்து வரப்பட்டுள்ளோம்' என்பதை உணர்ந்து சுதாகரித்துக்கொண்டதும் அவர்களை வெளியுலகத் தொடர்புகள் ஏதுமற்று அச்சுறுத்தி தடுத்து வைப்பதும், விசயமறிந்த தொழிலாளர்கள் எதிர்க்கேள்வி கேட்டால் அவர்களை தாக்குவதும், கொலை செய்வதும், ஆந்திர வனத்துறை – காவல்துறையினரிடம் சிக்க வைப்பதும் நடைமுறையில் உள்ளது.

... பாதிக்கப்படுவதும் படுகொலை செய்யப்படுவதும் தமிழர்களே. சர்வதேச உழைப்பாளர்கள் தினம் (மே–01) அண்மித்துக் கொண்டிருக்கும் வேளையில், ஆந்திர வனத்துறை மற்றும் காவல்துறையினரால் நிகழ்த்தப்பட்டுள்ள இந்தப் படுகொலையானது கண்டனத்துக்குரியது. தெரிந்தே திட்டமிட்டு ஒரு இனத்தின் மீது நிகழ்த்தப்பட்ட படுகொலை, தாக்குதல் சம்பவமாகவே இதை நோக்க முடிகின்றது.

சமூகவிரோத முதலாளிகள், தேச வளச்சுரண்டல் வியாபாரிகள் தண்டிக்கப்பட வேண்டும். தொழிலாளர் படுகொலைகள் தொடர்ந்தும் நடை... தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

தொழிலாளர்களை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், தமிழக மக்களுக்கும் ஈழத் தமிழர்களின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளும் அதேவேளை, அவர்களின் உரிமைகள் மீது நாட்டம் கொண்ட ஜனநாயகவாதிகளும் மனித உரிமை அமைப்புகளும் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நா... உறுதுணையாக இ... பதையும் ... கின்...



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** வீண் விரயங்களும் செலவுகளும் குறையத் தொடங்கும். உற்றார், உறவினர், நண்பர்களும் உங்களின் தன்னம்பிக்கையை கூட்டுவார்கள். உடல் ஆரோக்கியத்தில் சிறு பாதிப்பு ஏற்படும்.

**இடபம்:** சுபகாரியங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டாகும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். வழக்குகள் முடிவதற்குச் சற்று காலதாமதமாகலாம்.

**மிதுனம்:** வெளிவட்டாரத்தில் உங்கள் பெயர், புகழ் வளரத் தொடங்கும். புதிய பொறுப்புகளையும் தவிர்க்க முடியாது. எவரையும் பகைத்துக் கொள்ளாமல் பக்குவமாய் பேசுவது நல்லது.

**கடகம்:** நீண்டநாளாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த உங்கள் விண்ணப்பம் அரசால் சாதகமாக முடிவெடுக்கப்பட்டு வருமானம் வரத் தொடங்கும். உடல் ஆரோக்கியத்தில் எந்த பாதிப்பும் ஏற்படாது.

**சிங்கம்:** பகைமை பாராட்டுபவர்களையும் உங்கள் வசப்படுத்திக் கொள்வீர்கள். கஷ்டங்களிலிருந்து கற்றுக் கொண்ட அனுபவங்களை தக்க சமயத்தில் பயன்படுத்திக் கொள்வீர்கள்.

**கன்னி:** உங்களுக்குக்கீழ் வேலை செய்பவர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பார்கள். அதிகமான பயணங்களால் அலைச்சல் ஏற்பட்டாலும் உழைப்புக்கு அதிகமாகவே பயன் கிடைக்கும்.

**துலாம்:** உங்களின்கற்பனைபயங்களுக்கும்விடைகொடுக்கும் காலகட்டமாக இது அமைகிறது என்றால் மிகையாகாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமை அதிகரித்தாலும் அவற்றைச் செய்வனே செய்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** சக ஊழியர்கள் உங்களுக்கு நேசக்கரம் நீட்டுவார்கள். ஆனாலும் பயணங்களால் அனுகூலமான திருப்பங்களைக் காணமுடியாது. அதேநேரம் பயணங்களைத் தவிர்க்கவும் முடியாது.

**தனுசு:** கொடுக்கல் வாங்கல் விடயங்கள் சீராக இருந்தாலும் கூடுதல் அக்கறையோடு வியாபாரம் செய்யவும். நண்பர்களிடம் கவனமாக இருக்கவும். போட்டிகளுக்கு ஏற்றவாறு விலையை நிர்ணயித்து பொருள்களை விற்பனைசெய்வீர்கள்.

**மகரம்:** உங்கள் செயல்களை மேலிடத்தின் அனுமதி பெற்ற பின்பே நடைமுறைப்படுத்தவும். சக ஊழியர்களை அனுசரித்து நடந்து கொள்ளவும். உங்களின் இரகசியத் திட்டங்கள் அனைத்தும் வெற்றிப்பாதையை நோக்கி இட்டுச்செல்லும்.

**கும்பம்:** அதிக முயற்சிகளுக்குப் பிறகே புதிய ஒப்பந்தங்களைப் பெறுவார்கள். சக கலைஞர்களின் அபிமானத்தைப் பெறுவார்கள். அவர்களின் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மீனம்:** உங்களின் கோரிக்கைகளை குடும்பத்தில் அனைவரும் ஏற்றுக்கொள்வார்கள். புதிய ஆடை அணிகலன்களை வாங்கி மகிழ்வீர்கள். ஆன்மிகச் சுற்றுலா சென்று வருவதற்கான வாய்ப்புகள் உண்டாகும்.





# கல்லறைகள் மீட்பு

...ரு நாட்டின் உள்ள பள்ளத்தாக்கில் சுமார் ஆயிரத்து 200 வருட பழைமையான கல்லறைகள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இந்த கல்லறைகளில் கைகால்கள் அகற்றப்பட்ட நூற்றுக்கணக்கான குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் சடலங்கள் புதைக்கப்பட்டிருந்தன. இங்கு எடுக்கப்பட்ட ஒரு கல்லறையில் சுமார் 400 தனிமைப்படுத்தப்பட்ட மனித உடல் பாகங்கள் உள்ளன.

# நெருப்புக் குழி

சீனாவின் சிங்யாங் பகுதியில் சுமார் 3 அடி அகலத்தில் மர்மமான முறையில் ஆழமான குழி ஒன்று உள்ளது. இதில் தொடர்ந்து நெருப்பை கக்கி வரும் தீ சுவாலைகளால், அந்தப் பகுதி முழுவதும் வழக்கத்துக்கு மாறாக அதிக வெப்பமுடன் காணப்படுகிறது.



தீக்குழியிலிருந்து வெளிவரும் வெப்பம் சுமார் 792 டிகிரி செல்சியஸாக உள்ளதால், அதற்கு அருகில்வைக்கப்படும்பொருளை எளிதில் தீப்பிடிக்க வைக்கிறது. அதேபோல், வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்வதால், குழியின் ஆழத்தை கணக்கிட பூகோள விஞ்ஞானிகளால் அருகில் செல்ல முடியவில்லை.



விவசாயத்துக்கு மழை
இல்லை என்று
கவலைப்பட
யாரும் இல்லை;
கிரிக்கெட்
நடக்கும்போது மழை
வந்திட்டால் என்று
கவலைப்படுகிறாங்க.

I like



# எனக்கு முத்தம் கொடுக்கணுமா?

பரபரப்புக்கு பெயர் பெற்றவர் கவர்ச்சி நடிகை பூணம் பாண்டே. கடந்த 2011 உலகக் கிண்ண கிரிக்கெட்டின் போது இந்திய உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றினால் மைதானத்தில் நிர்வாணமாக ஓடுவேன் என்று உச்சக்கட்ட பரபரப்பையும் ஏற்படுத்தியவர்.

தற்போது மீண்டும் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறார். தனது அதிகாரப்பூர்வ டுவிட்டரில், என்னைத் கட்டிப் பிடிக்கணுமா? எனக்கு முத்தம் கொடுக்க வேண்டுமா? என்னுடன் நடனம் ஆடவேண்டுமா? என்னை தொட வேண்டுமா? என்னை எது வேண்டுமானாலும் செய்ய வேண்டுமா? உங்களுக்காக ஒரு வாய்ப்பு காத்திருக்கிறது என்று பதிவு செய்துள்ளார்.

பூணம் பாண்டே இவ்வாறு அறிவிப்பதற்குக் காரணம், தற்போது ஒரு புதிய படத்தில் நடிக்கவிருக்கிறார். இந்தப் படத்துக்கான கதாநாயகன் தேர்வு நடைபெற்று வருகிறது. இதை பிரபலப்படுத்தவே பூணம் பாண்டே தனது டுவிட்டரில் இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

... பாண்டேவை கட்டிப்பிடித்து, முத்தம் கொடுத்து, ...ப் போகும் நபர் யார் என்பதை பொறுத் ...ண்டும்.

# ரிலாக்ஸா வாசியுங்க...



கணவன் குடித்துவிட்டு, இரவு நேரம் தாழ்த்தி வீடு திரும்பினான்.
மனைவி கதவைத் திறக்க மாட்டாள் என்று தெரிந்ததால், ஒரு தந்திரம் செய்தான்.
கதவைத் தட்டிவிட்டு, 'அழகான பொண்ணுக்கு அழகான பரிசு கொண்டு வந்திருக்கிறேன்' என்றான்.
மனைவி கதவைத் திறந்துவிட்டு, 'அழகான பரிசு எங்கே?' என்று கேட்டாள்.
கணவன் கேட்டான்,
'அழகான பொண்ணு எங்கே?'
அப்புறம் கேட்கவா வேணும்,
சேகர் செத்தான்டா...

cmyk

# சட்டம், ஒழுங்கை குலைக்கவா செய்தியாளர்களுக்கு மிரட்டல்

## யாழ். பல்கலை ஆசிரியர் சங்கத் தலைவர் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.13
இலங்கையில் குறிப்பாக வடக்கு-கிழக்கில் நடந்த, நடக்கின்ற அநீதிகளுக்கு எதிராக தமது உயிர்களைப் பணயம் வைத்துப் போராடுகின்ற ஊடக வியலாளர்கள் இன்று பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. செய்தி சேகரிக்கச் சென்ற ஊடக வியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளார்கள். இது மீண்டும் வடபகுதியில் சட்டம், ஒழுங்கு அற்ற நிலை தோன்றுவதற்கான ஆயத்தமோ என எண்ணத் தோன்றுகிறது.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அ.இராசகுமாரன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

செய்திகள் தவறானவையாக இருந்தால் சட்டபடி மட்டுமே நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டத்துக்குப் புறம்பான எந்த நடவடிக்கையும் எமது நாட்டுக்குப் பாதகமாகவே அமையும்.

ஊடகவியலாளர் சுதந்திரமாக தமது செய்திகளை வெளியிட அனைத்துத் தரப்பினரும் உதவ வேண்டும்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் உடனடி நடவடிக்க்கை எடுத்து, இவ்வாறான செயல்கள் இனிமேலும் நடைபெறாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

எம்மக்கள் மாற்றத்துக்காகவும் நல்லாட்சிக்காகவுமே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தார்கள். ஆனால் இன்று நிலைமை எதிர்மறையாகவே தோன்றுகிறது. இது எமது நாட்டில் அமைதி நிலவுவதற்குக் குந்தகமாக அமையலாம். ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

ஊடகநண்பர்களே! நீங்கள் தொடர்ந்தும் துணிவுடனும் நேர்மையுடனும் எமது சமூகத்துக்காகக் குரல் கொடுங்கள். மக்கள் என்றும் உங்களுடன் இருப்பார்கள் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு நடத்த தீர்மானித்திருப்பது வரவேற்கத்தக்க விடயம். மக்களின் முழுமையான ஆதரவுடன் ஒரு திருத்தம் வருமாயின் அதுவே பலமான தொரு சட்டமாக அமையும். அதற் கான சந்தர்ப்பத்தை அரசு ஏற்படுத்தியிருப்பது ஆரோக்கியமானதாக அமையும்.

உண்மையான ஜனநாயகம் இந்த அரசின் செயற்பாடுகள் மூலம் வெளிப்பட வேண்டும் என்று எதிர் பார்க்கின்ற நிலையில் அதற்கான ஒருசில அறிகுறிகள் வெளியாகி யுள்ளன. இவ்வாறான செயற் பாடுகள் தொடர்ந்தும் அமைய வேண்டும். மக்கள் ஆட்சியை ஜனாதிபதி வெளிப்படுத்துகின்றார் என்பதில் சந்தேகம் இல்லை - என்றார். (த)

## சுற்றாடல் அதிகார சபை அதிகாரி சாவகச்சேரி மருத்துவமனைக்கு

தென்மராட்சி, ஏப்.13
மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உயர் அதிகாரிகள் கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி மருத்துவமனைக்கு பயணம் செய்து, அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டுள்ளார்கள்.

கடந்த டிசெம்பர் மாதம் பயணம் செய்த குழுவினர் மருத்துவ மனையில் காணப்பட்ட குறை பாடுகளை நிவர்த்தி செய்யுமாறு அறிவித்து விட்டுச் சென்றுள்ளார்கள்.

முன்னர் அறிவிக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் நிவர்த்தி செய்யப்பட்டனவா என்பதைப் பார்வையிட வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த முறை வந்தபோது மருத்துவமனை எரியூட்டி மற்றும் கழிவு நீர் தொடர்பாக அறிக்கையிட்டதாகவும் தெரிவித்துள்ளார்கள். (வ-9)

## ஒருங்கிணைப்பு புத்தாண்டு விழா

தென்மராட்சி, ஏப்.13
சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய (புலுட்டையல் பிள்ளையார்) இளைஞர் குழுவின் ஒருங்கிணைப்பு புத்தாண்டு விழா நாளை மாலை 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

பூநகரி மத்திய கல்லூரி ஆசிரியர் சி.இளந்திரையன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் க.கந்தசாமியும் கௌரவ விருந்தினர்களாக சாவச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி க.கிருபா சக்தி ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

ஆலய தர்மகர்த்தாவால் ஆலய அறநெறிப் பாடசாலை ஆசிரியை, முன்பள்ளி ஆசிரியை ஆகியோருக்கும் மாதாந்தச் சம்பளம் வழங்கும் செயற்றிட்டமும், ஆலயத்தில் இயங்கும் நூலகத்துக்கு தினமும் பத்திரிகைவழங்கும்செயற்றிட்டமும் ஆரம்பித்து வைக்கப்படும். (வ-9)

# ஆளணி வளங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கல்வியியற் கல்லூரிகள் தரமுயர்த்தப்படும்

## யாழ். பீடாதிபதி அமிர்தலிங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப் 13
நாடளாவிய ரீதியில் 18 தேசிய கல்வியியற் கல்லூரிகள் இயங்குகின்றன. இவ்வாண்டு கல்விக் கல்லூரிக்குத் தேவையான பௌதிக வளங்கள், ஆளணி வளங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, தரமுயர்த்தப் படுகின்றன என்று, யாழ்.தேசிய கல்வியியற் கல் லூரியின் பீடாதிபதி ச.அமிர்த லிங்கம் தெரிவித்தார்.

கல்வி அமைச்சால் வயம்ப தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற கல்வியியற் கல்லூரி தின விழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அங்கு கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில்;

'தரமான கல்விக்கு தரமான ஆசிரியர்கள் அவசியம். தேசிய கல்வியியற்கல்லூரி ஆரம்பமானது ஆசிரியர் கல்விச் செயற்பாடுகளுக்கு ஒரு திருப்புமுனை. தேசிய கல்வியியற் கல்லூரி உருவாக்கத்துக்குக் காரணம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களை ஆசிரிய தொழிலுக்கு தொழிற் பயிற்சியின் பின்னரே சேவைக்கு அனுப்ப வேண்டும் என்ற அடிப்படையில் ஆரம்பிக்கப் பட்டது. இதனூடாக தரமான கல்விக்கு தரமான ஆசிரியர்கள் உருவாக்கப்படுகின்றனர்.

இவ்வளவு காலமும் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு வழங் கப்பட்டு வந்த கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டத்துக்குப் பதிலாக கல்விமாணிப் பட்டம் வழங்கி பல்கலைக்கழக அந்தஸ்துள்ள நிறுவனமாக கல்லூரிகளை மாற்றியமைக்கும் திட்டமும் தற்போது கல்வி அமைச்சால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இவ்வகையில் 2015 தேசிய கல்வியியற் கல்லூரி ஆண்டு பிரகடனத்தில் பௌதிக ஆளணி வள மேம்பாடு, தரமேம்பாடு, கற்றல் கற்பித்தல் மேம்பாடு ஒழுக்க விழுமிய மேம்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

மேலும் கல்வி முறையில் மாற்றம், சிறந்த வாண்மைத்துவ ஆசிரிய உருவாக்கம், புதிய கல்விப் போக்கை அறிந்து நடைமுறைப் படுத்தல், அர்ப்பணிப்புடன் செயற்படல், உற்பத்தித்திறன் மேம்பாடு, சூழல் மேம்பாடு பாடசாலையும் சமூகமும் ஆகிய தலைப்புக்களில் விருத்திச் செயலாற்றுகைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பயிலுநர்களுக்கான வதிவிட வசதிகள், தரமான உணவு, ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குதல் என்ற வகையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளின் தரத்தை உயர்த்தி, அதன்மூலம் வெளியேறும் ஆசிரிய பயிலுநர்கள் பாடசாலைக்குப் பொருத்தமான வாண்மையுள்ள அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களாக செயலாற்ற சூழ் நிலைகளை அமைக்க வேண்டும்' என்றார். (வ-10)

## பனைமரம் வீழ்ந்து முறிந்தது கால்

பனைமரம் தறிக்கும்போது அதன் அடிப்பகுதி அருகில் நின்றவரின் காலில் மீது வீழ்ந்ததில் கால் எலும்பு துண்டு துண்டாக உடைந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை மிருசுவில் பகுதியில் இடம்பெற்றது. வயாவிளான் சுதந்திரபுரத்தைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் சுரேஷ் (வயது - 28) என்பவரே பாதிக்கப்பட்டவராவார்.

வாகனத்தில் சாவகச்சேரி ஆதார மருத் துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட குறித்த நபர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## மோ.சைக்கிளில் பயணித்தவர் தூக்கிவீசப்பட்டார்

தென்மராட்சி, ஏப்.13
வீதியில் காணப்பட்ட குழிக்காக வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிளை திடீரென நிறுத்த முயன்றவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மட்டுவிலில் இடம்பெற்றது. காயங்களுக்கு இலக்கான மட்டுவில் வடக்கைச் சேர்ந்த வேலாயுதம் சந்திரசேகரம் (வயது - 45) என்பவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-9)

## கந்தபுராணபடிப்பு இறுதி நாள்

நீர்வேலி கந்தசுவாமி கோயில் மகோற்சவத்தை முன்னிட்டு நடைபெற்ற கந்தப்புராண படிப்பின் இறுதி நாள் இன்று திங்கட்கிழமை மகேஸ்வர பூசை (அன்னதானம்) நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். அன்னதானத்துக்கு முன்னர் முருகப் பெருமானுக்கு விசேட அபிஷேகம் ஆராதனை பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. (வ-11)




பாராட்டி வாழ்த்துகின்றோம்
அ.ஸ்ரீரஞ்சன் (ஸ்ரீமாஸ்ரர்)
க.பொ.த.(சா/த) 2ஆம் மொழி சிங்களப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொள்வதற்கு எங்களுக்கு வழிகாட்டியாக திகழ்ந்த யாழின் 2 ஆம் மொழி சிங்களத்தின் முன்னணி ஆசானாக திகழும் எமது ஆசிரியர் ஸ்ரீ மாஸ்ரர் அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
சிந்தியடைந்த மாணவர்கள்
பராசசிங்கம் ஜீவநந்தா

நாளை புத்தாண்டு நன்னாளில் தேர் உலாவரும் யாழ். அத்தியடிப் பிள்ளையார் திருக்காட்சி காண வாரீர்



வசந்தமண்டபபூசை காலை 8.15 மணி.
எம்பெருமான் கோபுர வாசலில் எழுந்தருளல் காலை 9.00 மணி.
தேர் உலா ஆரம்பம் காலை 9.30 மணி.
புத்தாண்டுப் பிறப்புவிசேட பூசை பகல் 12.23 மணி.
கோயில் நிர்வாகசபை
(சீ/16920)(4.3.7)





2 ஆவது பிறந்த தின நல்வாழ்த்துக்கள்
Miss R.AGANYA (Aish)
Happy Birthay 13.04.2015
ராஜ்பவன்- சுகன்யா தம்பதியரின் செல்வப் புதல்வி அகன்யா தனது 2 ஆவது பிறந்த தினத்தை கனடா (ONTARIO CANADA) வில் உள்ள தனது இல்லத்தில் அப்பா, அம்மா, அன்புச்சகோதரி ரக்ஷன்யா மற்றும் உறவினர், நண்பர்களுடன் குதூகலமாக இன்று (13.04.2015)திங்கட்கிழமை கொண்டாடுகின்றார்.
இவர் பல்கலைகளும் கற்று பதினாறு செல்வங்களும் பெற்று பல்லாண்டுகள் சீருடனும் சிறப்புடனும் வாழ நல்லூர் முருகப் பெருமானையும், வண்.பன்றிக் கோட்டுப் பிள்ளையாரையும் வேண்டி மனமார வாழ்த்துகின்றோம்.
தாத்தா (மாணிக்கம்), அம்மம்மா (பவா), கண்ணாமாமா (UK), பிருந்தா மாமி
லாவண்யம், 614/3, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். ஸ்ரீலங்கா
(58807)(3.6.4)

# பௌத்தத்தின் காவலனாக இருந்தவாறே நல்லுறவுக்கு பங்காற்றிய அஸ்கிரியதேரர்

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.13

பௌத்த தர்மத்தின் காவலனாக உயர் அந்தஸ்தில் இருந்து கொண்டு நாட்டின் ஐக்கியம், இனங்களுக்கு இடையிலான நல்லுறவு, மீள் இணக்கப்பாடு என்பனவற்றுக்காக பெரிய பங்களிப்புச் செய்த அஸ்கிரிய பீட மகாநாயக்க உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த தேரரின் மறைவையிட்டு கவலையடைவதாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.


தேரரின் மறைவையொட்டி நல்லாட்சிக்காக தேசிய முன்னணி வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியிலேயே மேற்படி குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளமை வருமாறு:–

பல்லினத் தன்மை கொண்ட நாட்டின் சமயங்களுக்கூடாக பிரிவினையை வளர்க்க பலர் முனைந்தபோதிலும் சமயம், முரண்பாட்டுக்கான ஒரு கருவியல்ல என்பதிலும் சமயங்களுக் கூடாக ஐக்கியம், நல்லுறவு, பரஸ்பர புரிந்துணர்வு என்பன வளர்க்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்த ஒருவரே மறைந்த தேரராவார்.

நாடு பல்வேறு அரசியல் கொந்தளிப்பான நிலைமைகளைச் சந்தித்த போதெல்லாம் தனது பதவிநிலைக்கூடாக அவர்களுக்கு ஆலோசனை கூறுவதுடன், கண்டிக்கப்பட வேண்டிய விடயங்களின் போது கண்டிப்பதிலும் பொறுப்புணர்வோடு செயற்பட்ட ஒருவராகவே தேரரை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி நோக்குகின்றது.

அந்தவகையில் இலங்கையின் இன்றைய அரசியல் சூழலில் இணக்கப்பாடான சகல சமூகங்களதும் உரிமைகளை மதிக்கக்கூடியதான அரசியல் கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு ஆன்மிகத் தலைமைகள் மட்டத்தில் இருந்து கொண்டு அழுத்தமிக்க சக்தியாக செயற்பட வேண்டிய தேரரின் இழப்பையிட்டு நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஆழ்ந்த கவலையடைகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.(வ–10)

## தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு



கரணவாய், ஏப்.13

பருத்தித்துறை வியாபாரி மூலைப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பப் பெண் ஒருவரின் சடலம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

வியாபாரிமூலை பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த சுதாகரன் கவிதா (வயது–41) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். அவரது இறப்பில் சந்தேகமிருப்பதாக உறவினர்கள் தெரிவித்ததை அடுத்து இறப்பு விசாரணைகளை மேற்கொண்ட இறப்பு விசாரணை அதிகாரி ச.சிவராசா மருத்துவ பரிசோதனைகளுக்காக சடலத்தை யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கு மாறு உத்தரவிட்டார். (வ–108)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் குயிலம்மா நடனமகோற்கடம்



பிறப்பு 16.07.1939
இறப்பு 15.03.2015

கடந்த 15.03.2015 இல் சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் 31 ஆம் நாள் நினைவு நாளை (14.04.2015) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்திகரைக்கப்பட்டு, வீட்டுக்கிரியை நிகழ்வும் அந்திய கால பிரார்த்தனையும் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(58469)(4.3.7)

மதவடி, வல்வெட்டித்துறை. குடும்பத்தினர். T.P:077 395 6848



ஆண்டு ஐந்தின் நினைவில்



தளையசிங்கம் நவரத்தினராசா

(ஓய்வுபெற்ற செயலாளர்- நகரசபை, சாவகச்சேரி)

தோற்றம் 30.12.1932
மறைவு 07.10.2010

திதி: பங்குனி அபரபக்க நவமி (13.04.2015)

அன்புக்கு இலக்கணமாய் பண்பின் உறைவிடமாய்
நம் நல்வாழ்வுக்கு வழிகாட்டிய எம் அன்புத்
தந்தையே! ஆண்டு ஐந்தில் தங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பெருங்குளம், மட்டுவில் வீதி, சாவகச்சேரி. குடும்பத்தினர்.



மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12 . 02 . 1950
உதிர்வு 16 . 03 . 2012

அமரர் சுப்பிரமணியம் விக்கினேஸ்வரன்

திதி: அபரபக்க நவமி

அன்பான கணவராய் என்னை ஆசையுடன் பார்த்திட்டீர்!
தேற்றுவார் இன்றி இங்கு கலங்கித் தவிக்கின்றேன் நான்
பாசம் ஊட்டி வளர்த்தீர்களே அப்பா!
பாரினில் நாம் வாழ நல்வழி காட்டி சென்றீர்களே அப்பா!
நேசத்துடன் எம்முடன் பழகிய எம் இனிய மாமாவே!
நாம் நேர்வழியில் செல்ல வழிகாட்டிய தெய்வமே!
பேரப்பிள்ளைகளை வாய்நிறைய அழைத்த எம் தாத்தாவே!
கொஞ்சிப் பேசி மகிழ்ந்து உறவாட ஓடி வரமாட்டீரோ!
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகிறோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

கைதடி வடக்கு, கைதடி. குடும்பத்தினர்.

(58810)(4.6.3)



ஏழாம் வருட நினைவில்...

வண்ண மலராக
மலர்வு 12 . 03 . 1917



வாடிய சருகாக
உதிர்வு 31 . 03 . 2008

அமரர் மாண்புமிகு மா.வீ.ஆறுமுகம்

(பிரபல அரிசி, நெல், வர்த்தகப் பிரமுகர் - சாவகச்சேரி)

திதி: பங்குனி 30 ஆம் நாள் அபரபக்க நவமி 13.04.2015 (பங்குனி 5ஆம் திங்கள்)

அன்பும் ஆளுமையும் - உங்கள் இரு விழிகள்
கொடையும் கருணையும் - உங்கள் இரு கரங்கள்
நீங்கள் பேசும் வார்த்தைகள் - உள்ளம் குளிரும் தென்றல்
ஆன்மிகமும் பக்தியும் - உங்கள் தெய்வீக ஊற்று.
அன்பும் ஆளுமையும் மிகு உங்கள் பார்வை எங்கே?
கருணையுடன் எங்களை அரவணைத்த உங்கள் கைகள் எங்கே?
குளிர் தென்றலை ஒத்த உங்கள் பேச்சுக்கள் எங்கே?
தெய்வீக ஊற்றான உங்கள் ஆன்மிகமும் பக்தியும் எங்கே?
அவை எல்லாம் ஓய்ந்து - பன்றித்தலைச்சி அம்மன் கற்பூர சுடரொளியுடன்
சங்கமித்து ஏழு வருடங்கள் ஆனது இங்கே.

உங்கள் நினைவின் நிழலில் தொடர்ந்தும் நடைபோடுவோம்
நீங்கள் காட்டிய பாதையில் பயணத்தைத் தொடர்ந்திடுவோம்
எங்களை ஏற்றம் பெறவைத்த எமது பாசம் மிகுந்த
'அப்பு' வின் திருவடிகளை மறவாது தாள் பணிவோம்.

நன்றியுடன்...
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
ஏ.எஸ்.ஞானம் (மூத்த மகன் - கட்டக் கலை ஆலோசகர் - படவரைஞர்)

மடத்தடி றோட், கண்டி வீதி, கொடிகாமம்,



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 28.06.1942
மறைவு 14.03.2015

திதி: மாசிமாத அபரபக்கநவமி

அமரர் பூம்பாவை சாந்தலிங்கம்

அம்மா நீ எங்கு சென்றாய்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
பார்த்திருக்க எமைவிட்டுப்
பறந்தோடிப் போனீரோ...

நேற்றுவரை இருந்தீர் உறவுகளின் கண்களிலே
ஆலமரமாய் நிழல் தந்தீர் உறவுகட்கு
பார்போற்றும் உத்தமியாய் வாழ்ந்தீர் - வையகத்தில்
அப்பாவின் நிழல் தேடி அவசரமாய்ப் போனீரோ....

உங்களின் ஆசிகள் நிழல்போல எமை வழிகாட்ட விநாயகரைவேண்டுகிறோம்.
அம்மா உங்கள் ஆத்மாசாந்தியடைய நாகபூஷணித் தாயைவேண்டுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.04.2015) திங்கட்கிழமை காலை 6.30 மணியளவில் நயினாதீவு கங்காதரணி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற உள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(58651)(45.3.7)

5ஆம் வட்டாரம், நயினாதீவு குடும்பத்தினர்.

# நல்லாட்சிக்கான தேசிய முன்னணியினருடன் அமெ.இராஜாங்கத் திணைக்களத்தினர் சந்திப்பு

கொழும்பு, ஏப்.13

அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலா ளர்கள் தொடர்பான அதிகாரி ரொசினா தமன்வெல மற்றும் இலங்கைக் கான அமெரிக்கத் தூதரக அரசி யல் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரி ஜேர்சப் செல்லர் ஆகி யோருக்கும் நல் லாட்சிக்கான தேசிய முன்ன ணியின் பொதுச் செயலாளர் எம்.ஆர்.நஜா முஹம் மத் மற்றும் அதன் தேசிய அமைப் பாளர் எம்.பீ.எம்.பிர் தௌஸ் ஆகியோருக்குமிடை யிலான சந்திப்பு ஒன்று நடை பெற்றுள்ளது.

கொழும்பிலுள்ள நல்லாட்சிக் கான தேசிய முன்னணியின் தலைமையகத்தில் வியாழக் கிழமை இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ஜனாதிபதித் தேர்தலுக் குப் பின்னரான இலங்கையின் நல்லாட்சி நிலைமைகள், மீள்




இணக்கப்பாட்டிற்கான முன்னெடுப்புக்கள், ஊழல் மோசடிகள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக் கைளின் முன்னேற் றம், அது தொடர்பில் கடந்த ஒன்பது வருடங்களாக நல்லாட் சிக்கான தேசிய முன்னணி மேற் கொண்டு வரும் அரச மற்றும் சிவில் சமூகச் செயற்பாடுகள் குறித்தும் விரிவாகக் கலந்துரை யாடப்பட்டன.

இதன்போது நல்லாட்சிக்கான தேசிய முன்னணி தமக்குக் கிடைத்துள்ள மக்கள் ஆணைக் கூடாக அரசியல், சிவில் சமூகத் தளங்களில் ஊழல், மோசடி களற்ற வெளிப்படைத் தன்மை யான வகையில் முன்னெடுக் கப்படும் அபிவிருத்தி மற்றும் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டதோடு அதனை ஒரு தேசிய வேலைத் திட்டமாக முன்னெடுப்ப தற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை கள் குறித்தும் விளக்கமளிக் கப்பட்டன.

இதன்போது, இன்றைய இலங் கையின் புதிய அரசியல் சூழ்நிலையில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி போன்ற முற்போக்கான தும் நல்லாட்சி விழுமியங்களின் அடிப்படை யிலான செயற்பாடுகளை முன்னெடுக்கும் சக்திகளைத் தாம் பெரிதும் வரவேற்பதாக வும் நல்லாட்சிக்கான தேசிய முன்ன ணியின் கடந்தகால செயற்பாடுகளும் முன்னெடுப் புக்களும் தமக்கு பெரிதும் நம்பிக்கை அளிப்பதாகவும் இது கண்டு தாம் பெரிதும் மகிழ்ச்சியடைவதாகவும் அமெரிக்க இரா ஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் குறிப் பிட்டனர். (வ–10)

**விற்பனைப் பிரதிநிதி தேவை**

பல்தேசிய நிறுவனம் ஒன்றுக்கு விற்பனைத் துறை யில் 2 வருட அனுபவம் வாய்ந்த விற்பனை பிரதிநிதி தேவை. சுயவிவரக்கோவையை 20.04.2015 ஆம் திகதிக்கு கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்
இல.591, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 300 0299 (58816) (45.7.3)

**மேசன் வேலை/ஆள் தேவை**

கிளிநொச்சி நகரப் பகுதியில் வேலை செய்வதற்கு மேசன் ஆள் தேவை.
தொடர்பு: 077 156 9844 (57071)(4.3.7)

**வேலையாள் தேவை**

ஆங்கிலம் எழுத, வாசிக்க, பேசத் தெரிந்த கணினி அறிவுடையவர் தேவை. (58790) (4.3.7)
Go-ram@hotmail.com

**கணிதம் / விஞ்ஞானம் O/L**

6ஆம் வகுப்பில் இருந்து G.C.E O/L வரை தமிழ்/ ஆங்கில மொழிகளில் ஆங்கில மொழி மூல விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரினால் மிகச் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படுகின்றது. தனிப்பட்ட முறையி லும் பிரபல கல்லூரிகளில் மிகச் சிறப்பாகக் கற்பித்து சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆசிரியர்.
R.Balasubramaniyam B.Sc
42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.
பெற்றோர் சந்திப்பு நாள்.
தொடர்பு: 077 242 3400, 077 887 1217, 077 517 8727

**வீடு விற்பனைக்கு**

நல்லூர் கோயில் சுற்றுச் சூழலில் நல்லூர் பிர தேசசெயலத்துக்கு முன்பாக 555/19, பருத் தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 793 3929 (58819) (45.7.3)

# நெடுந்தீவு மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்




யாழ்ப்பாணம், ஏப்.13

நாங்கள் இயக்கத்தினரால் நெடுந்தீவு பிரதேசத்துக்கு உட்பட்ட மாணவர் களுக்கான ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் அண்மையில் யாழ்ப்பாணம் இளைஞர் சேவைகள் மண்டபத்தில் வைத்து கையளிக்கப்பட்டன.

நெடுந்தீவு பிரதேச இளைஞர் சேவைகள் அதிகாரி ஜானின் வேண்டுகோளுக்கு இணங்க கற்றல் உபகரணங்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட உத்தியோகத்தர் ஐ.தபேந்திரன், மாவட்ட உதவி உத்தியோகத்தர் சி.வினோதினி ஆகியோரிடம் நாங்கள் இயக்கத்தின் செயற்பாட்டாளர்களான. சி.அனுசன், க.கயூரன் ஆகியோர் கையளித்தனர். (வ–21)

## அராலி மத்தி சன சமூக நிலைய பவள விழா நிகழ்வு

அராலி, ஏப்.13

அராலி மத்தி சனசமூக நிலையத்தின் பவள விழா நிகழ்வு தொடர்ச்சியாக 3 நாள்கள் இடம்பெற்று வருகின்றது. நேற்று ஆரம்பித்த நிகழ்வு இன்றும் நாளை யும் நடைபெறவுள்ளது.

இதில் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு சனசமூக நிலையத்தின் சிறுவர் அணித் தலைவர் ம.உதயதாசன் தலை மையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட்டு. மத்திய கல்லூ ரியின் ஓய்வு பெற்ற அதிபர் வி.சிவஞானபோதன், கௌரவ விருந்தினர்களாக வேள்ட் விசன் அபிவிருத்திக் குழுத் தலைவர் வி.ஆதித்தன், கிராம உத்தியோகத்தர் ச. அசோகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். நாளை சனசமூக நிலையத் தலைவர் ச.மோகனதாசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச செயலாளர் அ.சோதிநா தன், கௌரவ விருந்தினராக யாழ் சின்மி யாமிசன் ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிர சைதன்ய, யாழ். பல்கலைக்கழக விரிவுரை யாளர் ஏ.குமாரவேல் ஆகி யோரும் கலந்து கொள்ள வுள்ளனர். இதன் இறுதி நாள் நிகழ்வில் கரப்பந்தாட்டம், மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம் மற்றும் சிறு விளையாட்டுகளுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (வ–422)

**சித்தன்கேணி மாதர்சங்கப் பாலர் பாடசாலைப் பொறுப்பாசிரியர் செல்வி லீலாவதி மாரிமுத்து அவர்களின் பொன்விழா மலருக்கான விவரம் கோரல்**

செல்வி லீலாவதி மாரிமுத்து இப்பாலர் பாடசாலைப் பொறுப்பாசிரியராகச் சேவையாற்றி, ஆசிரிய சேவையின் 50 ஆண்டுகள் நிறைவு செய்ததை முன்னிட்டு, பாடசாலையின் பழைய மாணவர்கள் மற்றும் சமூக, நலன் விரும் பிகளிடமிருந்து பின்வரும் விவரங்களைத் தந்துதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

1. பொன்விழா மலருக்கான வாழ்த்துரைகள் (மிகச் சுருக்கமாக) பெயர், முகவரி, புகைப்படம் (கடவுச்சீட்டு பட அளவு), பதவி என்பனவற்றை அனுப்பிவைப்பதோடு.
2. பழைய மாணவர்களின் பெயர்கள் அடங்கிய ஆவணத் தொகுப்பிற்காக, பழைய மாணவர் கள், தங்கள் பெயர் விவரங்களுடன் கல்விகற்ற ஆண்டு, படம், குழுப்படம் இருந்தால்) அவற்றையும்.

எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதிக்கு (18.05.2015) முன்னர் கீழ்காணும் முகவரிக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மாதர் சங்க பாடசாலை
சித்தன்கேணி. தொ.பே. 021 225 1300 முகாமைத்துவக் குழு.

## சென்றல் இன்வெஸ்ட்மென்ற் அன்ட் பினான்ஸ் பிஎல்சி இன் வாடிக்கையாளர்களுக்கான ஒரு அறிவித்தல்

இலங்கை மத்திய வங்கி சென்றல் இன்வெஸ்ட்மென்ற் அன்ட் பினான்ஸ் பீஎல்சியின் கணக்கேடுகளை இற்றைப்படுத்தும் கடமையினை மேற்கொள்வதற்கு எம்/எஸ் கேபிஎம்ஜி சிறிலங்காவிற்கு அதிகாரமளித்திருக்கிறது. சென்றல் இன்வெஸ்ட்மென்ற் அன்ட் பினான்சின் வைப்புப் பொறுப்புக்களைக் கண்டறிவதற்கு பின்வரும் தகவல்களைப் பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். ஆகவே, தமது வைப்பு நிலுவைகளை எம்/எஸ் கேபிஎம்ஜி நிறுவனத்திற்கு ஏற்கனவே உறுதிப்படுத்தாத சென்றல் இன்வெஸ்ட்மன்ற் அன்ட் பினான்சின் வைப்பாளர்கள் கீழே தரப்பட்டுள்ளவாறான மாதிரிப் படிவத்தினை நிரப்பி எம்/எஸ் கேபிஎம்ஜி, 32-ஏ, சேர் மொகமட் மாகான் மார்கார் மாவத்தை, கொழும்பு 3, இலங்கை, என்ற முகவரிக்கு நிறுவனத்தின் கவனத்திற்காக 2015.04.24 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அஞ்சல் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சென்றல் இன்வெஸ்ட்மென்ற் அன்ட் பினான்ஸ் பீஎல்சி இல் வைப்புச் செய்யப்பட்ட வைப்புக்கள்

| | | |
|---|---|---|
| 1. வைப்பாளர்கள்/ கூட்டு வைப்பாளர்களின் முழுப்பெயர் | | |
| 2. தேசிய அடையாள அட்டை இலக்கம்/ வியாபார அடையாள இலக்கம் | | |
| 3. முகவரி | | |
| 4. தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம் | செல்லிடத்தொலைபேசி<br>வதிவிட தொலைபேசி | |
| | 2014.03.31 இல் உள்ளவாறு | 2014.09.31 இல் உள்ளவாறு |
| 5. நிலையான வைப்பின் இலக்கம் | | |
| 6. முதலீடு செய்யப்பட்ட தொகை (ரூ.) | | |
| 7. முதலீடு செய்யப்பட்ட திகதி | | |
| 8. முதிர்ச்சித் திகதி | | |
| 9. ஆண்டொன்றிற்கு வட்டி வீதம் | | |
| 10. பெறத்தக்க வட்டி (ரூ.) | | |
| 11. உங்கள் பதிவேடுகளின்படி மேற்குறிப்பிட்ட திகதியில் மேற்குறிப்பிட்ட கம்பனியிடமிருந்து வரவேண்டிய தொகை ரூ. | | |

மேலே என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

திகதி ---------------- வைப்பாளரின் கையொப்பம் ----------------

(தயவுசெய்து சென்றல் இன்வெஸ்ட்மென்ற் அன்ட் பினான்ஸ் இனால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்கள்/ சான்றிதழ்கள் அல்லது வேறு ஏதேனும் உறுதிப்படுத்தும் ஆவணங்களின் பிரதிகளை இணைக்கவும்)

வெளியிடுபவர்: இலங்கை மத்திய வங்கி
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
தொலைபேசி - 0112477229/ 0112477504

## அதிபர் சேவையின் மூன்றாம் வகுப்பு; 4,431 வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பு

கல்வி அமைச்சின் கீழுள்ள இலங்கை அதிபர் சேவையின் 3ஆம் வகுப்பில் உள்ள 4431 வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான போட்டி பரீட்சை இடம்பெற வுள்ளது. இலங்கை ஆசிரியர் சேவையில் 5வருடங்கள் திருப்திகரமான சேவையாற்றி வரும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழக பட்டத்துடன் கல்வி டிப்ளோமா அல்லது ஆசிரிய பயிற்சிச் சான்றிதழ் அல்லது தேசிய போதனா சான்றிதழ் அல்லது தேசிய கல்வி நிறுவக கல்வி மாணிப் பட்டம் அல்லது தேசிய போதனாவியல் டிப் ளோமா சான்றிதழ் அல்லது ஆசிரிய பயிற்சிச் சான்றிதழ் பெற்ற 6 வருட அனுபவம் உள்ள ஆசிரியர்கள் விண்ணப் பிக்கலாம். மேற்கூறப்பட்ட கல்வி மற்றும் தொழில் தகை மைகள் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் திஙமன்று பூரணப்படுத்தி யிருத்தல் அவசியம். விண்ணப்பமுடிவுத் திகதி 2015.05.11 ஆகும். மேலதிக விவரங்களை 2015ஏப்ரல் மாதம்10ஆம் திகதி வர்த்த மானியில் பர்வையிடலாம். ஆசிரிய சேவையில் உள்ள ஒருவர் இலங்கை அதிபர் சேவையில் உள்ளீர்ப்புச் செய் யப்படுவதற்கான போட்டிப் பரீட்சைக்கு தமது சேவைக் காலத்தில் மூன்று தடவைகள் மட்டும் தோற்றலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

# சுன்னாகப் பகுதி கிணற்று நீர் மக்கள் பாவனைக்கு ஏற்றதல்ல

### உறுதிப்படுத்தியது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

கொழும்பு, ஏப். 13

சுன்னாகப் பிரதேசத்திலுள்ள கிணறுகளில் கழிவு எண்ணெயும் கிறீஸும் கலந்துள்ளது. இதனை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிபுணர் குழு உறுதிப்படுத்தியுள்ளது. எனவே அந்தப் பகுதியில் உள்ள கிணற்று நீரை மக்கள் பருக வேண்டாம் என்று நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம்பகுதிகளிலுள்ள நொதேர்ன் பவர் நிறுவனத்தின் கழிவு எண்ணெய் கலப்பது தொடர்பாக விசேட கூற்றொன்றை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முன் வைத்தார். இதன்போதே அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இதுதொடர்பில் தொடர்ந்து தெரிவிக்கையில்;

'சுன்னாகம் பிரதேச கிணறுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் 73 வீதமானவற்றில் கழிவு எண்ணெயும் கிறீஸும் கலந்துள்ளமையை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிபுணர் குழு உறுதிப் படுத்தியுள்ளது. நொதேர்ன் பவர் நிறுவனம் அமைந்துள்ள இடத்திலிருந்து 2.5 கிலோ மீற்றர் சுற்றுவட்டத்தில் இந்தப் பாதிப்பு உள்ளது. இதனால்தான் அந்தப் பகுதி மக்களுக்கு பவுஸர்களில் குடி தண்ணீர் விநியோகிக்கப்படுகின்றது. இதற்கான செலவை மின்சார சபையிடம் தான் நாம் அறவிட வேண்டும். ஏனெனில் அவர்களால்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது. அவர்கள் வழங்க மறுத்தால் வழக்குத் தொடர்வது தொடர்பில் நாம் நடவடிக்கை எடுப்போம். எமது ஆய்வில் அந்தப் பகுதியிலுள்ள சகல கிணறுகளையும் உள்வாங் கவுள்ளோம். கழிவு எண்ணெய் கலந்துள்ளதாகக் கூறப்பட்ட கிணறுகளில் 73 வீதமான கிணறுகளில் கழிவு எண்ணெயுடன் கிறீஸ் படிமங்கள் கலந்திருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிபுணர்குழுவின் ஆய்வுமுறை வேறு. வடக்கு மாகாண சபை யின் நிபுணர் குழுவின் ஆய்வு முறை வேறு. மத்திய அரசின் நிபுணர் குழு கழிவு எண்ணெய் கலந்திருப்பதை உறுதி செய்துள்ளது. ஆனால் வடக்கு மாகாண சபை நிபுணர்குழு அறிக்கை வெளியிட்டுள்ள தாகக் கூறப்படுகின்ற நிலையில் அதனை எனக்கு அனுப்புமாறு நான் கோரியிருந்தேன். ஆனால் இதுவரை என் கண்ணில் கூட 'அந்த அறிக்கை காண்பிக்கப்படவில்லை' என்றார். (வ–10)

## காரைநகரில் வறிய மாணவருக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



காரைநகர், ஏப்.13

காரைநகர் பிரதேச வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகர ணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் காரைநகர், மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்ட இந்து கலாசார மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், வடகடல் நிறுவனத் தலைவரும் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரனின் சகோதரருமான தியாகராசா பரமேஸ்வரன் ஆகியோர் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கினர்.

வடகடல் நிறுவனத்தின் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள தி.பரமேஸ்வரன் தனது முதல் மாத சம்பளத்தில் காரைநகர் பிரதேச வறிய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள் வழங்கியதுடன் தொடர்ந்தும் மாதாந்த சம்பளத்தை வறிய மாணவர்களின் கற்றல் செயற்பாடு மற்றும் தர்ம காரியங்களுக்குப் பயன்படுத்தப்போவதாகத் தெரிவித்தார்.

நிகழ்வின் முன்னதாக யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி அமைச்சருக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார். (வ–250)

## பன்னிரு திருமுறை முற்றோதல் பிற்போடல்

யாழ்ப்பாணம், ஏப். 13

நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளை யார் ஆலயத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி தொடக்கம் 48 நாள்கள் நடைபெறவிருந்த பன்னிரு திருமுறை முற்றோதல் ஞானவேள்வி ஆலய ஆதீன கர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாருமான மணிக்குருக்களின் மறைவை அடுத்து, பிற்போடப்பட்டுள்ளது. முற்றோதல் ஞானவேள்வி மீண்டும் ஆரம்பிக்கும் தினம் பின்னர் அறிவிக்கப்படும் என்று ஆலய ஓதுவார் மூர்த்தி களில் ஒருவரும் அகில இலங்கைத் திருமுறைமன்ற அமைப்பாளருமான சி.கிருஷ்ண மூர்த்தி தெரிவித்தார். (வ–10)

## இளைஞர்கள் இருவர் விபத்தில் காயம்

ஆவரங்கால் வல்லை பிரதான வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற விபத்தில் மோட் டார் சைக்கிளில் பிரயாணம் செய்த உடுப்பிட்டி, நாவலடியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வல்லைச்சந்தியில் இருந்து ஆவரங்கால் சந்தியை நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரென வீதியில் நிறுத்தப்பட்டதால் பின்னால்வந்து கொண்டிருந்த கார் மோட்டார் சைக்கிளை மோதித்தள்ளியது. இதில் மணியம் லோகேஸ்வரன் (வயது–23), பேபிராசா கிரிசாந்தன்(வயது–21) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் அச்சுவேலி பிரதேச மருத்துவமனைக்கு சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

அதே பகுதியில் கடந்த மாதம் ஓட்டோ–மினிபஸ் மோதிக்கொண்ட விபத்தில் இருவர் உயிரிழந்தது குறிப் பிடத்தக்கது.

ஆவரங்கால் – வல்லைச்சந்தி இடையே மிக வேகமான முறையில் வாகனங்கள் செல்வதும் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அதிக விபத்துக்கள் அண்மைக் காலமாக இடம்பெற்றுவருகின்றமை தவிர்க்க முடியாத ஒன்றாக தற்போது மாறியுள்ளது. (வ–11)



## மரண அறிவித்தல்கள்

### இராசா அருமைநாயகம்



ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா அருமைநாயகம் (கிளி) நேற்று (12.04.2015) ஞாயிற்றுக்கிழமை இறை பதம் அடைந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா -பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - நல்லபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், நாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், யோகராசா, செல்வமணியம், குணசிங்கம், புஸ்பராணி மற்றும் யோகநாதன் (சுவிஸ்), இந்திராணி (துரையப்பா வித்தியாலய - ஆசிரியர்), விஜயகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்சினி, அப்பன், அரவிந்தன் ஆகியோரின் தந்தையும், ராதா கிருஷ்ணன், சுமனா ஆகியோரின் மாமனும், ஜனனிகா, ரம்யா, டிலக்ஷிகா, சந்தோஸ், கபில்ராஜ், விபிஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2015) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

76/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். 077 612 0471

தகவல் :
மனைவி, பிள்ளைகள்.
(58812) (45.3.7)

### முருகேசு குமாரசாமி (இராசதுரை)

(முன்னாள் ஆசிரியர் பரு.வேலாயுதம் பாடசாலை)

நெல்லண்டைதும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் நியூ செம்மணி றோட், கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு குமாரசாமி 12.04.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நேசமணியின் அன்புக் கணவரும் மகிந்தனின் (ஆஸ்திரேலியா) அன்புத் தந்தையும், தெய்வயானையின் அன்பு மாமனும், கரன், றெபேக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

145, நியூ செம்மணி வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (58808) (45.7.3)

தகவல்: ச.சிறிவிவேகானந்தராசா
(ஆனந்தர் மருமகன்)
T.P. 024 205 1649

### திருமதி நாகரத்தினம் கந்தையா



மானிப்பாய் வட-கிழக்கு, ஆனந்தாவீதியைப் பிறப்பிடமாகவும், இல.30, கோயில் வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் கந்தையா நேற்று (12.04.2015) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கண்ணாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னு தம்பதியரின் அன்பு மருமகளும், கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தியாகராசாவின் அன்புச் சகோதரியும், தெய்வகுலரத்தினம் (ஓய்வு நிலை நிர்வாக உத்தியோகத்தர் - தீவகக் கல்விவலயம்), நாகசுலோஜனா ஆகியோரின் தாயும், காலஞ்சென்றவர்களான வசுந்திரா நீலோசனி, லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி காயத்திரி - ஜெயகோபி (சிங்கப்பூர்), மதன்ராஜ் (பொறியியல் பீட phd மாணவன்- கன்பரா பல்கலைக்கழகம் ஆஸ்திரேலியா), பிரார்த்தனா (சம்பத் வங்கி உத்தியோகத்தர் - கிளிநொச்சி), பாரதி (வெளிவாரிபட்டப்படிப்புகள் நிறுவன இறுதியாண்டு மாணவி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.04.2015) திங்கட்கிழமை நடைபெற்று, காலை 9.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30, கோயில் வீதி
ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல் :
க.தெய்வகுலரத்தினம் (மகன்),
தொ.பே. 077 359 7014
(58812) (45.3.7)

### சபிண்டிகரண அழைப்பு



கடந்த 14.03.2015
சனிக்கிழமை
சிவபதமெய்திய
எமது குடும்பத் தலைவர்
அமரர்
வைத்திலிங்கம்
சோமசுந்தரம்
அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எமது இல்லத்தில்

இன்று (13.04.2015) திங்கள் பகல் 12.00 மணியளவில் 17/19, நல்லூர் வடக்கு, நல்லூரில் நிகழும். இந்நிகழ்விலும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இல.17/19 நல்லூர்வடக்கு, நல்லூர். குடும்பத்தினர்.
(58811)(3.7.4)




'எமது மனிதநேயத்திற்குரிய நல்லொழுக்க பண்புகளை இனிவரும் சந்ததியினருக்கும் பரிமாற்றுவோம்'

ஸ்ரீ லங்கா ரெலிகொம் இடமிருந்து இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!



# இந்திய மீனவர் 25 பேர் பங்களாதேஷில் கைது

டாக்கா,ஏப்.13
பங்களாதேஷ் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 25 பேரை அந்த நாட்டுக் கடற்படையினர் நேற்றுக் கைது செய்துள்ளனர். பங்களாதேஷ் கடல் எல்லைக்குட்பட்ட மோங்லா கடற்பகுதியில் 90 கடல் மைல் தூரத்துக்கு அத்துமீறி மீன்பிடித்ததாக 2 படகுகளில் சென்ற மேற்கு வங்காளப் பகுதியைச் சேர்ந்த இந்திய மீனவர்களே கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். (14)

# மோடியின் பிரான்ஸ் பயணம் வெற்றி

## முக்கிய ஒப்பந்தங்களும் கைச்சாத்து






பாரிஸ்,ஏப்.13
பிரான்ஸ் நாட்டில் சுற்றுப் பயணத்துக்கு மேற்கொண்ட பிரதமர் நரேந்திர மோடி லில்லே பகுதியில் அமைக்கப்பட்டுள்ள முதல் உலகப் போரில் வீரச்சாவடைந்த இந்திய வீரர்களின் நினைவிடத்தில் நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தினார். 1914 ஆம் ஆண்டு தொடக்கம்; 1918 ஆண்டு வரை நடந்த முதல் உலகப் போரின் போது பிரெஞ்சுப் படைகளுக்கு ஆதரவாகப் போரிட்ட சுமார் 10 ஆயிரம் இந்திய இராணுவ வீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். பிரான்ஸில் உள்ள நியூ சாப்பேல் பகுதியில் அவர்களுக்கு நினைவிடம் அமைத்து சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டும் வருகின்றது. அந்த நினைவிடத்துக்கு சென்ற பிரதமர் மோடி முதல் உலகப் போரில் வீரச்சாவடைந்த இந்திய வீரர்களுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இந்தியப் பிரதமர் ஒருவர் அந்த நினைவிடத்துக்கு வந்தது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

**17 ஒப்பந்தங்கள் கைச்சாத்து**

பிரதமர் நரேந்திர மோடியின் பிரான்ஸ் சுற்றுப்பயணத்தில், இந்தியா–பிரான்ஸ் இடையே 17 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்காய்ஸ் ஹோலண்டேயுடனான முக்கிய சந்திப்பும் நடைபெற்றது. சைனி நதியில் படகில் சென்று, பாரிஸின் அழகை ரசித்தபடி இரு நாடுகளின் தலைவர்களும் பேச்சுக்களை நடத்தினர். அதன்போது 17 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. நீண்டகாலமாக உடன்படிக்கை ஏற்படாமல் இருந்த ரபேல் போர் விமான ஒப்பந்தத்தில் முடிவும் எட்டப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, பிரான்சிடமிருந்து இந்தியா 36 ரபேல் விமானங்களை வாங்க இரு நாட்டுதலைவர்களிடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. மகாராஷ்டிரா மாநிலம் ஜெய்த்தாப்பூரில் 6 அணு உலைகளை அமைப்பது, இந்தியா–பிரான்ஸின் கூட்டுத் தயாரிப்பிலான செயற்கைக் கோளிடமிருந்து தகவல்களைப் பெறுதல், பொருளாதாரத்துறை மேம்பாடு, தகவல் பரிமாற்றம், ஆயுள்வேத மருத்துவம், சுற்றுலா, அறிவியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளுக்கான ஒப்பந்தங்களும் கையெழுத்தாகியுள்ளன.

**மோடியிடம் பிரான்ஸ் உறுதி**

ஏர் பஸ் விமானங்களை இந்தியாவில் தயாரிப்போம் என்று பிரதமர் மோடியிடம் பிரான்ஸ் நிறுவனம் உறுதியளித்ததுள்ளது. மேக் இன் இந்தியா (இந்தியாவில் தயாரிப்போம்) என்ற திட்டத்தின் கீழ் இந்தியாவில் தொழில் தொடங்க வருமாறு, தொழில் அதிபர்களுக்கு அழைப்பு விடுப்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி 3 நாடுகளுக்குச் சுற்றுப்பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

முதற்கட்டமாக பிரான்ஸுக்கு பயணத்தை ஆரம்பித்துள்ள மோடி நேற்று முன்தினம் பிரான்ஸ் நாட்டின் டூலூஸ் நகரில் அமைந்துள்ள, பிரசித்தி பெற்ற ஏர்பஸ் விமானத் தொழிற்சாலையை பார்வையிட்டார். அதன் போது ஏர் பஸ் குழும நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரி டாம் என்டர்ஸ், சர்வதேச செயற்பாடுகளில் இந்தியா ஏற்கனவே முக்கிய பங்கு வகிக்கிறது. அந்த வகையில் இந்தியாவில், இந்தியாவுக்காகவும், உலகத்துக்காகவும் (ஏர் பஸ்) தயாரிப்பைத் தொடங்குவதற்கு தயாராக இருக்கின் றோம் என உறுதியளித்துள்ளார். இந்தியாவில் ஏர்பஸ் நிறுவனம் அவுட் சோர்ஸ் வகையில் (அயலக ஒப்பந்த சேவை அமர்த்துதல்) 400 மில்லியன் டொலர் முதலீடு செய்து வந்தது. அந்த முதலீட்டை 5 வருடங்களில்; 2 பில்லியன் டொலர் அளவுக்கு உயர்த்துவதற்கு திட்டமிட்டுள்ளது என்று பிரதமர் மோடியின் ஏர்பஸ் விமான நிறுவன பயணம் குறித்து, வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் சையத் அக்பருதீன் தெரிவித்துள்ளார்.

**மோடி காட்டம்**

ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர் பதவி என்பது இந்தியாவின் உரிமை என்று பிரதமர் மோடி காட்டமாக தெரிவித்துள்ளார். பிரான்ஸ் நாட்டுக்குச் சென்றுள்ள பிரதமர் மோடி பாரிஸ் நகரில் நேற்று முன்தினம் நடந்த கூட்டமொன்றில் உரை நிகழ்த்தும் போதே அவர் அதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கும்போது; பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் பதவி கேட்டு கெஞ்சிய காலம் முடிந்துவிட்டது. உலக அமைதிக்காக இந்தியா ஆற்றியுள்ள பங்குக்காக நிரந்தர உறுப்பினர் பதவியை கேட்கும் உரிமை இந்தியாவுக்கு உள்ளது. நிரந்தர உறுப்பினர் பதவி கொடுப்பதன் மூலம் மகாத்மா காந்தியையும், புத்தரையும் உலகுக்கு கொடுத்த இந்திய நாட்டுக்கு நன்றி செலுத்த நல்ல வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள முடியும். இதுவரை நாம் பிறநாடுகளைக்கைப்பற்றுவதற்காக ஒரு முறை கூட போர் புரிந்தது இல்லை. இந்தியா அமைதியை விரும்பும் நாடு. ஐ.நா. தனது 70 ஆவது ஆண்டு தொடக்க விழாவை கொண்டாட இருக்கும் நிலையில் இந்தியாவுக்கு நிரந்தர உறுப்பினர் பதவி கொடுப்பதை பற்றி அது நல்ல முடிவை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இந்தியா எப்போதும் தியாகத்துக்கும், ஆன்மிகத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. இதை உலக நாடுகள் புரிந்து கொண்டு, இந்தியாவின் மீதான அவர்களின் பார்வையை மாற்றிக்கொள்ள வேண்டும்எனவும்தெரிவித்துள்ளார்.

**இந்தியாவில் 2 பில்லியன் யூரோ முதலீடு**

இந்தியாவில் 2 பில்லியன் யூரோ முதலீடு செய்யப்படும் என்றும் பிரான்ஸ் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதி பிராங் காய்ஸ் ஹோலண்டே, அணு சக்தி துறையில் இரு நாடுகளும் இணைந்து செயற்படும் வகையில் ஜெய்பூர் அணு உலை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

ஐ.நாவில் இந்தியா நிரந்தர உறுப்பினர் ஆவதற்கு பிரான்ஸ் முழு ஆதரவு அளிக்கும். இந்தியாவும் பிரான்ஸும் இணைந்து உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கு தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. மேலும், முக்கியமாக இந்தியாவில் 3 ஸ்மார்ட் நகரங்கள் அமைக்கப்படும் என்றும்–2 பில்லியன் யூரோ அளவுக்கு முதலீடும் செய்யப்படும் எனவும்–அறிவித்துள்ளார். (14)

# மறைந்தபோதும் முகம் சிதையாத புத்த துறவி



பீஜிங்,ஏப்.13
சீனாவைச் சேர்ந்த புத்த துறவியான வூ யுங்கிங், 17 வருடங்களுக்கு முன்னர் மறைந்தபோதும் அவரது உடல் இன்று வரை கண்ணாடிப் பேழையில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மத்திய சீனாவின் அன்யாங் நகரில் உள்ள லிங்குவான் புத்த விகாரையில், தவக்கோலத்தில் அமர்ந்த நிலையில் உள்ள துறவி யூ யுங்கிங் தங்க அங்கியும், மணிகளும் அணிந்துள்ளார். அவரது முகத்தில் உள்ள தசைகளும், தலைமுடி மற்றும் தாடியும் இப்போதும் எந்த வித சேதமுமின்றி அப்படியேயுள்ளது. அது மட்டுமல்லாமல் அவர் தற்போது 102 வயதுடன் வாழ்ந்து கொண்டிருப்பதாகவே அவரது பக்தர்கள் நம்புகின்றனர். யுங்கிங்குக்கு 15 வயதிருக்கும்போது அவரது பெற்றோர் மரணமடைந்ததாக ஆவணங்கள் கூறுகின்றன. அதனைத் தொடர்ந்து துறவியாக முடிவு செய்த அவர், யுங்கிங், ஷான்க்சி யனான் குயிங் ஹவா விகாரைக்கு சென்றுள்ளார். அங்கேயே இறுதி வரை இருந்த அவர், கடந்த 1998 ஆம் ஆண்டில் உயிரிழந்தார். அதனையடுத்து தங்களது குருவின் உடலை பாதுகாக்க நினைத்த அவரது சீடர்கள், அவரது உடலை தாமரை நிலையில் வைத்து பெரிய பீங்கான் குவளையில் அடைத்து, லிங்குவான் விகாரைக்குக் கொண்டு சென்று கண்ணாடி பேழையில் வைத்துள்ளனர். 17 வருடங்களாக கண்ணாடிப் பேழைக்குள் இருக்கும் யுங்கின் முகம், இன்றும் சிதையாமல் இருப்பதைக்காணவரும்சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (14)

# நாய் கடித்தால் 2 லட்சம் ரூபா

உத்தரகாண்டில் யாரையாவது நாய் கடித்தால் அவர்களுக்கு தலா 2 லட்சம் ரூபா வரை நஷ்டஈடு கோரலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரகாண்ட் மாநிலத்தின் நைனிடால் நகரில் மட்டும் கடந்த 3 வருடங்களில் நான்காயிரம் பேரை நாய் கடித்துவிட்டதாக உயர் நீதிமன்றத்துக்கு தொடர்ந்து முறைப்பாடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதனையடுத்து உயர்நீதிமன்றத்தால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நாய் கடித்துச் சிறிய அளவில் காயமடைந்தால் ஒரு லட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும், படுகாயமடைந்தால் 2 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த 2 லட்சம் ரூபா நஷ்ட ஈட்டுத் தொகையை இரண்டாகப் பகிர்ந்து முதல் பாதித் தொகையை, நாய் கடித்த நகராட்சி நிர்வாகமும், இரண்டாவது பாதித் தொகையை மாநில அரசும், நாய் மற்றும் குரங்கு கடிக்குள்ளானவருக்கு வழங்கவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (14)

# அசிற் வீச்சால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச மருத்துவம்; உச்சநீதிமன்றம் உத்தரவு

டில்லி,ஏப்.13
அசிற் வீச்சால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச சிகிச்சை அளிக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அசிற் வீச்சால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தனியார் மருத்துவமனைகள் இலவச சிகிச்சை அளிக்க வேண்டும். மேலும் அசிற் வீச்சால் பாதிக்கப்பட்டவர் முதன் முதலாக எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறாரோ, அந்த மருத்துவமனை நிர்வாகம் அவர் அசிற் வீச்சால் பாதிக்கப்பட்டவர் என அவருக்கு ஒரு சான்றிதழ் அல்லது ஆவணத்தை வழங்க வேண்டும். அந்த ஆவணத்தை வைத்து நாட்டில் உள்ள எந்தத் தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளிலும், தங்களது காயங்களுக்கு எப்போது வேண்டுமானாலும் சிகிச்சை பெற்றுக் கொள்ள உதவ வேண்டும். அசிற் வீச்சால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்து, சிகிச்சை கட்டணம், அதிக செலவாகும் மறுசீரமைப்பு உள்ளிட்ட அனைத்து வகை உயர் சிகிச்சைகளையும் நாட்டில் உள்ள அனைத்து தனியார் மருத்துவமனைகளும் இலவசமாக வழங்கிட வேண்டும். இந்த உத்தரவை உடனடியாக அனைத்து மாநில அரசுகளுக்கும் மற்றும் உப பிரதேச அரசுகளுக்கும் இந்திய மருத்துவ சபை அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சுனாமி அச்சத்தில் ஜப்பான் மக்கள்



டோக்கியோ,ஏப்.13

ஜப்பானியக் கடற்கரையில் 156 திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியதால், 2011 ஆம் ஆண்டில்; நிகழ்ந்ததைப்போன்று மீண்டும் சுனாமிப் பேரழிவு நிகழும் என்று அந்த நாட்டு மக்கள் பெரும் அச்சம் அடைந்துள்ளனர்.

அந்த நாட்டில் கடந்த 2011 ஆம் ஆண்டு, கடலுக்குள் ஏற்பட்ட நில நடுக்கத்தால் சுனாமிப் பேரலை எழுந்தது. அதன் போது 19 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு பூகம்பம் மற்றும் சுனாமி ஏற்படுவதற்கு 6 நாள்களுக்கு முன்னர், 50 திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியிருந்தன. அதேபோன்று தற்போதும் 150இற்கும் மேற்பட்ட திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியுள்ளதால், 2011 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆபத்து தங்களை சூழ்ந்துவிடுமோ? என மக்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.

2011 ஆம் ஆண்டில் நிகழ்ந்த நில நடுக்கம் மற்றும் சுனாமி தாக்கத்தால் புகுஷிமா அணு உலையில் கதிர்வீச்சு ஆபத்தும் ஏற்பட்டது. அந்த நாட்டுக் கடற்கரையில் பிணமாக் ஒதுங்கிய திமிங்கிலங்களைப் பார்வையிட்ட விஞ்ஞானிகள் கூறுகையில்; கரை ஒதுங்கிய திமிங்கிலங்கள் அனைத்தும் புற்றுநோய் உள்ளிட்ட எந்தவித நோயாலும் பாதிக்கப்படவில்லை. எனவே திமிங்கிலங்கள் உயிரிழக்க காரணம் என்ன என்பதை பற்றி ஆராய்ந்து வருகின்றோம் என்றனர். எனினும் திமிங்கிலம் கரை ஒதுங்கியதால் சுனாமி ஏற்படும் என யாரும் அச்சப்படதேவையில்லை என்று–உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (14)

## அமெ.எம்.பிக்கு இந்து முறைப்படி திருமணம்



வொஷிங்டன்,ஏப்.13

அமெரிக்க நாடாளுமன்ற பெண் உறுப்பினர் ஒருவர் இந்து முறைப்படி திருமணம் செய்து கொண்டுள்ளார். அமெரிக்காவின் 50 ஆவது மாகாணம் ஹவாய் தீவுகள். அந்த மாகாணத்துக்கான அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளவர் 33 வயதாகும் துளசி கப்பார்ட். அவருக்கும் அவருடைய காதலரான ஆப்ரகாம் வில்லியம் ஸுக்கும் நேற்றுமுன்தினம் ஹவாய் தீவில் மிகவும் எளிமையான முறையில் இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றது.

வேதங்கள் முழங்க அவர்களுடைய திருமணத்தில் அனைவருக்கும் சைவ உணவே பரி மாறப்பட்டது. துளசி கப்பார்ட் குடும்பத்தினரின் இந்து கலாசாரம் மிகவும் பிரபலமான ஒன்று. ஹவாய் பகுதியைச் சேர்ந்த அமெரிக்க தம்பதி கரோல் மற்றும் மைக் கப்பார்ட். அவர்களுக்கு 5 குழந்தைகள் பிறந்தன. அமெரிக்காவில் பிறந்து வளர்ந்த கப்பார்ட் தம்பதியினர், அமெரிக்காவில் பிரபலமடைந்த கிருஷ்ண பக்தி மார்க்கத்தால் ஈர்க்கப்பட்டு அதை ஏற்றுக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து சைவ சமயத்துக்கு மாறிய அவர்கள் இந்துக்களாகவே வாழ்ந்தனர். தங்களுடைய் குழந்தைகளுக்கும் கிருஷ்ண பக்தி மார்க்கத்துக்கு தொடர்புடைய பக்தி, ஜெய், ஆர்யன், துளசி, பிருந்தாவன் பெயர்களையே சூட்டினர். இந்துக்களாக மதம் மாறிய அவர்கள் இந்துக்களாகவே வாழ்ந்து வருகின்றனர். அதில் 33 வயதாகும் துளசி, அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றியுள்ளார். அதைத் தவிர தீவிர அரசியலிலும் ஈடுபட்டார். ஹவாய் மாகாணத் தேர்தலில் வென்றார். பின்னர் அமெரிக்க நாடாளுமன்றத் தேர்தலில் ஹவாய் மாகாணத்துக்காக தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவியேற்பின் போது பகவத் கீதை புத்தகத்தின் மீது உறுதி எடுத்துக் கொண்டார். (14)

## சுட்டு கொல்லப்பட்ட கறுப்பினத்தவருக்கு நூற்றுக்கணக்கானவர்கள் இறுதி அஞ்சலி



கலிப்போர்னியா,ஏப்.13

அமெரிக்கப் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட கறுப்பினத்தவரான வால்டர் ஸ்காட்க்கு மழையையும் பொருட்படுத்தாமல் நூற்றுக்கணக்கானவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளார்கள்.

தெற்கு கரோலினாவில் உள்ள வடக்கு சார்லஸ்டன் பகுதியில் நான்கு பிள்ளைகளுக்கு தந்தையான 50 வயது வால்டர்ஸ்காட்டை, ரோந்து பொலிஸ் அதிகாரியான 33 வயது மைக்கேல் ஸ்லேகர் தடுத்து நிறுத்தினார். அவரிடம் இருந்து தப்பித்து ஓடிய வால்டை குருவி சுடுவது போல் முதுகில் ஐந்து முறை சரமாரியாக சுட்டுத் தள்ளினார். அதில் சம்பவ இடத்திலேயே வால்டர் ஸ்காட் உயிரிழந்தார்.

அமெரிக்காவில் கறுப்பினத்தவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டு வருவது தொடர் கதையாகி வரும் நிலையில், தற்போது மேலும் ஒருவர் பொலிஸ் அதிகாரி ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டது அந்த நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வால்டர் ஸ்காட்டின் இறுதிச் சடங்குகள் நேற்றுமுன்தினம் அங்குள்ள தேவாலயத்தில் நடைபெற்றது. அதில் அவருடைய குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

வால்டர் ஸ்காட்டின் உடல் அமெரிக்கக் கொடியால் மூடப்பட்டிருந்தது. மேலும் அவருக்கு மிகவும் பிடித்த கால் பந்து அணியின் சின்னம் உள்ள கொடியும் உடல் அருகே வைக்கப்பட்டிருந்தது. இது அங்கு இருந்தவர்களைக் கண்கலங்க வைத்தது. (14)

# பாகிஸ்தானில் 20 தொழிலாளர் துடிக்க துடிக்க சுட்டுக் கொலை





இஸ்லாமாபாத்,ஏப்.13

பாகிஸ்தானில் தூங்கிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய் திடீர்த் தாக்குதல் சம்பவத்தின் போது 20 பேர் துடிக்கத் துடிக்க உயிரிழந்துள்ளனர்.

பலுசிஸ்தான் மாகாணத்தில் துர்பத் மாவட்டம் கோப்தன் பகுதியில் அணைக்கட்டு கட்டுமானப் பணி நடைபெற்று வருகின்றது. பலுசிஸ்தான் மற்றும் அண்டை மாகாணங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் அங்கு தங்கியிருந்து வேலை செய்து வருகின்றனர். இந்த நிலையில் நேற்று அதிகாலை தொழிலாளர்கள் தூங்கிக் கொண்டிருந்த போது, துப்பாக்கிகளுடன் வந்த மிகப்பெரிய கும்பலொன்று அந்த முகாமைச் சுற்றி வளைத்தது. அங்கு காவலுக்கு இருந்த பாதுகாவலர்களையும் மிரட்டி தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த அந்தக் கும்பல், உள்ளே புகுந்து தூங்கிக்கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகங்களை நடத்தினர். அதில், பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த 16 பேரும், சிந்து மாகாணத்தைச் சேர்ந்த 4 பேரும் கொல்லப்பட்டதாகவும், முகாம் பாதுகாவலர்கள் 8 பேருக்கும் எந்தப் பாதிப்பும் இல்லை என்றும்– பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. தாக்குதல் நடத்திய நபர்கள் அருகில் உள்ள மலைப் பகுதியில் பதுங்கியிருக்கலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் பொலிஸார் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். தகவல் அறிந்த பலுசிஸ்தான் மாகாண முதல்வர் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டு அந்தப் பகுதியில் உயர்மட்ட பாதுகாப்பு அளிக்கும்படி உத்தரவிட்டார். மேலும், இறந்தவர்களின் உடல்களை ஹெலிக்கொப்டர்கள் அவரவர் ஊர்களுக்கு அனுப்பி வைக்கும்படியும் உத்தரவிட்டார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு பிரதமர் நவாஸ் ஷெரிப் மற்றும் பல்வேறு தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். (14)

## வரலாற்றில் முக்கியமான சந்திப்பு 50 வருடகால பகை முடிவுக்கு




வொஷிங்டன்,ஏப்.13

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, கியூபா ஜனாதிபதி ராவூல் காஸ்ட்ரோவை சந்தித்து பேசியதன் மூலம் 50 வருட காலங்களாக இருந்த பகைமுடிவுக்குவந்துள்ளது. அமெரிக்காவை நீண்டகாலமாகவே எதிரி நாடாக கருதி வந்தது இலத்தீன் அமெரிக்க நாடான கியூபா. இந்த நிலையில் பனாமாவில் நடந்து வரும் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற் காக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா சென்றார், அதில் பங்கேற்பதற்காக கியூபா ஜனாதிபதி ராவூல் காஸ்ட்ரோவும் சென்றிருந்தார். இருவரும் கை குலுக்கி கொண்டதுடன், சந்தித்தும் பேசியுள்ளனர், அதன் மூலம் 50 வருட காலம் நீடித்த பகை முடிவுக்கு வந்துள்ளதாக உலக அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர். இதற்கு முன்னதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜான் ஹெரி, கியூபா வெளியுறவுத் துறை அமைச்சர் பெர்னோ ரோட்ரிஜியஸைச் சந்தித்து ஆலோசனை நடத்தி இருந்தார். அதனையடுத்து ஒபாமா, ராவூலை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியதன் பின்னரே, அந்தச் சந்திப்பு நடந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (14)

## 5 வருடங்களில் 209 பேர். மீது சூடு

வொஷிங்டன்,ஏப்.13

கடந்த 5 வருடங்களில் தெற்கு கரோலினாவைச் சேர்ந்த பொலிஸாரால் சுமார் 209 நபர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளதாக தற்போது அதிர்ச்சி அளிக்கும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் தெற்கு கரோலினாவைச் சேர்ந்த பொலிஸார் ஒருவர் கறுப்பின நபர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டு கொன்றதைத் தொடர்ந்து அமெரிக்க பொலிஸார் மீது தொடர் குற்றச்சாட்டுகள் எழுந்த வண்ணம் உள்ளன.

கடந்த 5 வருடங்களில்; தெற்கு கரோலினாவை சேர்ந்த பொலிஸார் சுமார் 209 நபர்களை [illegible]பாக்கியால் சுட்டுள்ளதாக தக[illegible]கள் வெளியாகியுள்ளன. அவர்க[illegible] 79 பேர், அதாவது 37.8 சத வி[illegible]கினர் உயிரிழந்துள்ளனர்.

# இயற்கையான சூழலில் அமர்ந்திருந்து அருள்பாலிக்கும் சுன்னாகம் ஐயனார்

பொ. மாதவன்,
சுன்னாகம்.

சுன்னாகத்தில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஐயனார் ஆலயம் வயலும், வயல் சார்ந்ததுமான இயற்கையான சூழலில் அமைந்துள்ளது. ஐயனாரைத் தரிசிக்கச் செல்பவர்கள் அந்த ரம்மியமான சூழலால் ஈர்க்கப்பட்டுத் தம்மையே மறந்து விடுவார்கள். மேலும் மன அமைதி இழந்தவர்கள் ஐயனாரின் பேரருளால் இழந்த மன அமைதியைத் திரும்பப் பெற்று விடுவார்கள். ஆலயச் சூழலில் வீசிக்கொண்டிருக்கும் தூய்மையான காற்று உடலை வருடும்போது கிடைக்கின்ற ஆனந்தத்துக்கு அளவே கிடையாது.

ஐயனார் ஆலயத்துக்குத் தென் திசையில் அமைந்திருக்கும் சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயம் உயர்ந்த கோபுரத்துடன் கம்பீரமாக எழுந்து நிற்கின்றது. அங்கு வீற்றிருந்து அருள்பாலிக்கும் விநாயகர் சக்தி மிகுந்தவர். ஐயனாரும் பிள்ளையாரும் அருகருகே அமர்ந்திருந்து அருளாட்சி புரிந்து கொண்டிருக்கின்றனர்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் இந்த ஆலயத்தில் மிருகபலி இடம்பெற்று வந்தது. மக்கள் மடைகள் படைத்து ஐயனாரை வணங்குவார்கள். அங்கு குவித்து வைக்கப்பட்டிருக்கும் வாழைக் குலைகள், இளநீர்க் குலைகள், காய்கறிவகைகள், பலகார வகைகள் என்பன பார்ப்பவர்களுக்கு பிரமிப்பை ஏற்படுத்தும் வகையில் காட்சி அளித்துக் கொண்டிருக்கும். காலப் போக்கில் மிருகபலி நிறுத்தப்பட்டது. தற்போது ஆகம விதிகளின் பிரகாரம் ஆலயத்தில் கிரியைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த ஆண்டு சுன்னாகம் கதிரைமலை சிவன் தேவஸ்தானத்தின் பிரதம குருமார்களில் ஒருவரான சோமஸ்கந்தக் குருக்களின் புதல்வரான உமாரமணக் குருக்கள்

> ஆலய நிர்வாகத்தினர் காலை வேளையில் தேரை இழுப்பதற்குத் திட்டமிடுகின்ற போதிலும் ஐயனாரின் விருப்பத்தின் பிரகாரம் முற்பகல் 10 மணிக்குப் பின்னரே அது நிறைவேற்றி வைக்கப் படுகின்றமை வழக்கமான நிகழ்வாகும்.

பிரதம சிவாச்சாரியாராக இருந்து கிரியைகளைச் சிறப்பாக நடத்தி வைத்தார். இதைவிட கிரியைகள் தொடர்பாக அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் மூலம் அறியாத பலவிடயங்கள் பாமர மக்களுக்கும் விளங்கக் கூடியதாக அமைந்திருந்தன.

ஐயனார் வெளிவீதி வலம்வரும் காட்சி அனைவரது நெஞ்சங்களிலும் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தி விடுகின்றன. சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தையும் தாண்டி வயல்வெளிகள் ஊடாக விஸ்தீரணமான நிலப்பரப்பில் தொண்டர்களின் உதவியுடன் பெருமான் வெளிவீதியில் வலம்வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்த காட்சி என்றுமே மறக்க முடியாத ஒன்றாகும்.

ஆலய நிர்வாகத்தினர் காலை வேளையில் தேரை இழுப்பதற்குத் திட்டமிடுகின்ற போதிலும் ஐயனாரின் விருப்பத்தின் பிரகாரம் முற்பகல் 10 மணிக்குப் பின்னரே அது நிறைவேற்றி வைக்கப்படுகின்றமை வழக்கமான நிகழ்வாகும்.

இம்முறை அதிகளவு பறவைக் காவடிகளையும் ஆலயத்தில் காண முடிந்தது. சில ஆலயங்களில் சுவாமியைக் காவிச் செல்வதற்கு ஆள்கள் கிடைக்காத அவலநிலை காணப்படுகின்றது. ஆனால் ஐயனாரின் அருளால் அந்த நிலை இந்த ஆலயத்தில் இல்லை. தொண்டர்கள் போட்டி போட்டுக்கொண்டு சுவாமியைத் தூக்கிச் செல்லும் அழகே ஒரு தனி அழகுதான்.

ஆனால் ஆலயத்துக்கு முன்பாகச் செல்லும் வீதி புனரமைக்கப்படாது மோசமான நிலையில் உள்ளமை பெரிய குறையாகும். இம்முறை ஆலய உற்சவத்தையொட்டி கிரவல் மண்கொண்டு, வீதியில் காணப்பட்ட குழிகள் செப்பனிடப் பட்டன. ஆனால் இது நிரந்தரமானதல்ல. எனவே உரிய வகையில் இந்த வீதியைச் செப்பனிட வேண்டுமென்பதே ஆலயத்துக்கு வருகை தருகின்ற அடியார்களின் பெரும் குறையாக உள்ளது.

ஐயனாரின் அருளால் இந்தக்குறை விரைவில் நீங்கிவிடுமென எதிர் பார்ப்போமாக.

# ஈசி கிளெய்ம் சேவையை அறிமுகம் செய்துள்ள ஜனசக்தி நிறுவனம்

நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை உடனடியாக வாடிக்கையாளருக்கு வழங்கும் முகமாக புரட்சிகரமான ஈசி கிளெய்ம் சேவையை ஜனசக்தி நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. இதனூடாக வாடிக்கையாளர்கள் இனிமேல் வரிசைகளில் காத்திருக்காது எந்தவொரு சம்பத் வங்கி ஏரிஎம் இயந்திரத்திலிருந்தும் தமது மோட்டார் வாகன நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

ஜனசக்தி அறிமுகப்படுத்தியுள்ள புதிய சேவையே இதுவாகும். வாடிக்கையாளருக்கு சௌகரியமானதும், தொந்தரவு அற்றதுமான சேவையை வழங்குவதே இதன் நோக்கமாகும். இந்த ஈசி கிளெய்ம் சேவை ஊடாக நஷ்டஈட்டு கொடுப்பனவு அனுமதிக்கப்பட்ட பின்னர் 24 மணித்தியாலயத்திற்குள் சம்பத் வங்கி ஏரிஎம் இயந்திரத்திலிருந்து பணத்தைப் பெறக்கூடியதாகவுள்ளது. நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை பெறுவதற்கு வங்கி கணக்கொன்றை கொண்டிருப்பதற்கான தேவையும் இனி இல்லை.

புதிய ஈசி கிளெய்ம் சேவை மிகவும் சௌகரியமிக்கது. இதற்கு முன்னர் ஜனசக்தி அலுவலகத்துக்கு சென்று வெவ்வேறாக எமது வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிட வேண்டியிருந்தது. ஆனால் தற்போது வங்கியிலிருந்து உடனடியாகப் பணத்தை பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது என வர்த்தக முகாமையாளரான ருக்ஷான் சிறியந்த பெரேரா தெரிவித்தார்.

இனிமேல் வரிசைகளில் காத்திருந்து நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை என்பதால் இச்சேவையை நான் மிகவும் விரும்புகின்றேன் என வாகன ஓட்டுநரான பி.சத்துரக்க மதுசங்க தெரிவித்தார்.

வாகனம் விபத்துக்குள்ளானவுடன் செய்ய வேண்டிய செயற்பாடுகளை மேற்கொண்டு தேவையான விவரங்களையும் பூர்த்தி செய்த பின்னர், வினைத்திறனுடன் 24 மணிநேரமும் இயங்கும் ஜனசக்தியின் வாடிக்கையாளர் சேவை அழைப்பு நிலையத்துடன் தொடர்பு கொள்வதனூடாக, மிக விரைவாக நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை உறுதி செய்து கொள்ள முடியும். இதன் பொருட்டு ஈசி கிளெய்ம் கோரிக்கைகளை வழங்குவதற்காக பிரத்தியேகமான குழு செயற்படுகிறது.

வாகனம் விபத்துக்குள்ளாகி தேவையான அனைத்து விடயங்களை பூர்த்தி செய்திருக்கும் வாடிக்கையாளர்களுக்கு 12 மணித்தியாலத்திற்குள் சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்தப் பிரத்தியேக குழுவினர் செயற்பட்டு வருவதாக ஜனசக்தி அறிவித்துள்ளது.

ஜனசக்தி இன்சூரன்ஸ் என்பது மோட்டார் காப்புறுதி பிரிவில் பல்வேறு புத்துருவாக்கங்களை உருவாக்கிய நிறுவனமாகும். இந்தப் புதிய கோரிக்கை கொடுப்பனவு அறிமுகம் ஊடாக வாடிக்கையாளருக்குச் சௌகரியமானதும், நம்பிக்கையானதுமான சேவையை வழங்க முடிந்துள்ளது. இந்தச் சேவை ஊடாக மோட்டார் கோரிக்கை கொடுப்பனவுகள் வழங்கும் விகிதத்தை அதிகரிப்பதே எமது குறிக்கோளாகும் என மோட்டார் பிரிவின் சிரேஷ்ட வர்த்தகநாம முகாமையாளர் கௌஷல்ய அமரசேகர தெரிவித்தார். (த)







# தனது வாடிக்கையாளர்களை மகிழ்வித்த கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கிக் கிளைகளில் வெளிநாட்டில் இருந்து அனுப்பப்படும் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களை மகிழ்வுறச் செய்யும் வகையிலான புத்தாண்டு நிகழ்வொன்று அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாரம்பரிய உணவு மற்றும் புத்தாண்டுச் சிறப்பு அம்சங்களோடு கிரிபத்கொடை கிளையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு சுபிட்சத்தைக் கொண்டு வரும் வகையிலான சிங்கள – தமிழ் புத்தாண்டு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்குவதற்கான ஒரு ஆரம்ப நிகழ்வாக இது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.


வங்கிக்கே உரித்தான ஈஎக்ஸ்சேன்ஜ் சேவைமுறையின் கீழ் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் சகல வாடிக்கையாளர்களும் அதேபோல் மணி கிராம், றியா, எக்ஸ்பிரஸ் மணி போன்ற சேவைகள் மூலம் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் சகல வாடிக்கையாளர்களும் இந்த சுபிட்சத்துக்கான விஷேட அடையாளச் சின்னத்தைப் பெற்றுக் கொள்வர்.

புத்தாண்டின் பாரம்பரிய உணவு மேசைக்கு மேலும் அலங்காரத்தையும் நறுமணத்தையும் அளிக்கக் கூடிய உன்னதமானதோர் எண்ணக்கருவாக இது அமைந்துள்ளது.

கொமர்ஷல் வங்கியின் தனியார் வங்கிப் பிரிவுப் பிரதி பொது முகாமையாளர் சந்தனகுணசேகர, செயற்பாடுகள் பிரிவு உதவி பொதுமுகாமையாளர் பாலித் பெரேரா, வங்கிப் பிரிவு பிரதான முகாமையாளர் பிரதீப் பந்துவன்ஸ ஆகியோர் உட்பட ஏனைய அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பாரம்பரிய புத்தாண்டுப் பழக்க வழக்கங்கள் பற்றி பிரபல கலைஞர் சரத்சந்திர எதிரிசிங்கவின் பிரதான உரை, வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் மற்றும் பிரபல கலைஞர் பந்துல நாணயக்காரவசம் ஆகியோரின் உரைகளும் இடம்பெற்றன. (த)

# வாசகர் திருமுகம்



## நியாயமான விலையில் மணல் கிடைக்குமா?

30 வருட நீடித்த போரின் பின்னர் மக்கள் தமது வாழ்விடத்துக்கு வருவதற்கு பல போராட்டங்களை நடத்திய பின்னர் அவர்களுக்கு வீட்டுத்திட்டம் ஒன்றை வெளிநாட்டு நிறுவனம் ஒன்று கொடுத்தது. அதற்கு ஐந்தரை லட்சம் ரூபா வழங்கப்பட்டது. ஆனால் இந்த நிதி போதாத காரணத்தால் தங்களிடம் இருந்த நகைகளை விற்றும், அடைவு வைத்தும், கடன்பட்டும் வீட்டைப் பூர்த்தியாக்க வேண்டிய நிலையில் மணல் கொள்ளை நடத்தியவர்கள் 40 ஆயிரம் ரூபாவுக்கு மணலை விற்றார்கள் ஒரு உழவு இயந்திர லோட் மணலை 5,500 ரூபாவிற்கு வாங்கினார்கள். இது தற்போது 14 ஆயிரமாக உயர்ந்துள்ளது. வீட்டுத்திட்ட அதிகாரிகள் வீட்டை உடனடியாகப் பூர்த்தி செய்யுமாறு துரிதப்படுத்துகின்றார்கள். இந்த மக்கள் ஓலை வீட்டில் இருந்த போது நிம்மதியாக இருந் தார்கள். எனவே பழைய நடை முறையின் கீழ் அரச அதிபர் ஊடாக பாரவூர்திச் சங்கத்தின் மூலம் மணலை விநியோகம் செய்ய வேண்டும். இதனால் 5 வருட காலம் தொழில் இல்லாமல் துன்புறுகின்ற பார வூர்தி உரிமையாளர்கள், உழவு இயந்திர உரிமை யாளர்கள் சாரதிகள் நடத் துநர்கள் மணலை ஏற்றி இறக்கும் கூலித் தொழிலாளர்கள் என்று பலரின் குடும்பங்கள் ஆடம்பர வாழ்க்கை இல்லாவிட்டாலும், அன் றாட வாழ்க்கை வாழ வழிவகுக்கும் என்பதை தெரியப்படுத்திக் கொள்கின்றேன். எனவே அதிகாரிகள் விரைந்து உடன் நடவடிக்கை எடுப்பீர்களாக.


*வ.திரவியம்*

## யார் குற்றம்?

கடந்த வாரம் வாசகர் திருமுகம் பகுதியில் விழிக்குமா கல்வயல் என்ற தலைப்பில் குறிப்பு ஒன்றை பிரசுரித்தமைக்கு அன்பார்ந்த நன்றிகள்
நமது கல்வயல் கிராமத்தில் பிரசித்தி பெற்ற பெருங்குளம் பிள்ளையார் ஆலயம் அமைந்திருப்பது சைவப் பெருமக்களுக்குப் பெருமை. அங்கே வருடம் ஒரு முறை பிள்ளையார் சாஸ்திர சம்பிரதாயங்களுடன் தேரேறி வீதி உலா வருவது கண்கொள்ளாக் காட்சி. புனிதம் நிறைந்த அவரின் தேர் முட்டியின் படிக்கட்டில் அமர்ந்து சில இளைஞர்கள் சாராயத் தவறணை நடத்துவது சமூகச் சீர்கேடாகும். இவற்றைக் கண்டும் காணாமல் வாய்மூடி மௌனம் சாதிக்கிறார்கள் பெரியவர்கள். 30 வருட காலம் போரில் நம் இனம் அனுபவித்தது போதும். சமூகச் சீரழிவை நோக்கிப் பயணிக்கும் நமது சில இளைஞர்களை நல்வழிப்படுத்துவது யார். சாதிப்பதற்கு நிறையவே உண்டு யாரைக் குற்றம் காண்பது பெற்றவர்களையா? நண்பர்களையா? சமுதாயத்தையா? இளைஞர்களே உங்களால் முடியாதது எதுவுமில்லை.

*சாவகச்சேரி சமூகம்*

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# எப்போது விடிவு?

வலி.வடக்கில் இரண்டாம் கட்ட மீள்குடியமர்வும் நடந்து முடிந்துள்ளது. ஆயிரத்து நூறு ஏக்கர் நிலப்பரப்பு இராணுவத்தினரிடமிருந்து மீண்டும் பொதுமக்களுக்கு கையளிக்கப்பட்டு விட்டதாக புதிய அரசு தம்பட்டம் அடித்துக் கொள்கின்றது. விடுவிக்கப்பட்ட நிலப்பரப்பில் எவ்வளவு பொதுமக்கள் மீளக்குடியமர முடியும் ? விடுவிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் குடியிருப்பு எவ்வளவு வீதம்? என்று ஆராய்ந்தால், ரணில் அரசின் மீள் குடியமர்வு நாடகம் வெட்ட வெளிச்சமாகத் தெரியும்.

விடுவிக்கப்பட்ட ஆயிரத்து நூறு ஏக்கரில் 20 சதவீதமானவையே பொதுமக்களின் குடியிருப்பு நிலங்கள் என்று வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் குறிப்பிட்டுள்ளார். 20 சதவீதமான பொது மக்கள் குடியிருப்பிலும், எத்தனை குடியிருப்புக்கள் இன்றும் குடியிருப்புக்களாக எஞ்சியிருக்கின்றன என்பது அடுத்த கேள்வியாக அமைகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக, வளலாய் மீள்குடியமர்வுக்குப் பின்னர் இடம்பெற்ற இரண்டு மீள்குடியமர்வு நடவடிக்கைகளும் பொதுமக்களுக்கு ஏமாற்றத்தையே பரிசாகக் கொடுத்திருக்கின்றன. வயாவிளான் கிழக்குப் பகுதியை விடுவிப்பதாக அறிவித்த அரச அதிகாரிகள், அன்றைய தினம் மக்களை அழைத்துச் சென்றனர். இதன் போது வயாவிளான் கிழக்கின் சிறு பகுதியும், பலாலி தெற்கின் ஒரு பகுதியும் விடுவிக்கப்பட்டது. இதனால் வயாவிளான் மக்கள் ஏமாற்றமடைந்தனர்.

இதன் பின்னர் கடந்த சனிக்கிழமை அடுத்த கட்ட மீள்குடியமர்வு இடம்பெற்றது. இதன் போது 7 கிராம சேவையாளர்கள் பிரிவுகள் விடுவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. 7 கிராம சேவையாளர் பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் ஆவலுடன் வந்த போதும், மக்கள் குடியிருப்புக்குரிய காணி விடுவிக்கப்படாமல் வெறும் கட்டாந்தரைகளே அதிகளவில் விடுவிக்கப்பட்டன. மக்கள் காணிகள், இராணுவத்தினர் வசமே உள்ளன.

கடந்த 2010 ஆம் ஆண்டு, 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வலி.வடக்கு மீள்குடியமர்வுகளின் போது இந்தப் பிரச்சினை எழவில்லை. அப்போது ஒரு கிராம சேவையாளர் பிரிவு விடுவிக்கப்படும் என்றால் அது முழுமையாக விடுவிக்கப்பட்டுவிடும். அங்கிருந்த இராணுவ முகாம் முழுவதுமாக அகற்றப்பட்டுவிடும். இதனால் மக்கள் அந்தக் கிராமத்தில் எந்தப் பிரச்சினையும் இன்றிக் குடியமர்ந்தனர். அத்துடன் அந்தக் கிராமங்களுக்குச் செல்லும் வீதிகளும் மக்களிடமே முழுமையாகக் கையளிக்கப்பட்டன.

ஆனால் தற்போது மேற்கொள்ளப்படும் மீள்குடியமர்வில், ஒரு கிராம சேவையாளர் பிரிவு விடுவிக்கப்படுகின்றது என்று சொல்லப்பட்டாலும், அதனுள் இராணுவ முகாம் இருக்கும். அதனை இராணுவத்தினர் அகற்ற மாட்டார்கள். அந்த இராணுவ முகாமைச்சுற்றி வேலி அடைத்திருப்பார்கள். இதனால் விடுவிக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட கிராம சேவையாளர் பிரிவில் குடியமரலாம் என்று வரும் மக்கள், அங்குள்ள இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதிக்குச் செல்ல முடியாததால் ஏமாற்றம் அடைய வேண்டியுள்ளது.

மேலும் இராணுவத்தினர், முகாம்களை அமைக்கும் போது வீதிகளைக் கணக்கில் எடுக்காமல் குறுக்கும் மறுக்குமாக முகாம் வேலிகளை அமைப்பதால், விடுவித்த பகுதிகளுக்குக்கூட மக்கள் செல்ல முடியாத நிலையே இருக்கின்றது. இதனாலேயே தற்போதைய மீள்குடியமர்வு ஏமாற்றமாக இருக்கின்றது.

அடுத்த கட்ட மீள்குடியமர்வின் போதாவது, அரச அதிகாரிகள் இராணுவத்தினர் சொல்வதற்குத் தலையாட்டாமல், விடுவிக்கும் பிரதேசத்தை முழுமையாக விடுவிக்கச் செய்ய வேண்டும். அதனை விடுத்து தொடர்ந்தும் இராணுவத்திற்கு சலாம் போட்டுக் கொண்டு காணிகள் விடுவிப்புச் செய்தால், வெறும் கட்டாந்தரைகளை மாத்திரம் படையினர் விடுவித்துக் கொண்டு, குடியிருப்பு நிலங்களைதம் வசமே வைத்துக் கொள்வார்கள்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஆந்திராவில் நடந்துள்ள ஒரு காட்டுதர்பார்

மக்கள் ஆட்சிக்கு உலகம் முழுவதற்கும் ஆசியா வில் ஓர் முன் உதாரணமாக விளங்குவதாக பலராலும் பாராட்டப்படும் பாரத நாட்டில் தான் இந்தக் கொடுமை நடைபெற்றுள்ளது.

ஆந்திர மாநிலத்துக்குரிய திருப்பதி வனப் பகுதியில் செம்மரக் காட்டில் கள்ளத்தனமாக மரங்களை தரிப்பதில் ஈடுபட்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 20 தமிழ் நாட்டு இளைஞர்கள் அந்தமாநில பொலிஸாரால் கடந்த 7 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆந்திர பொருளாதாரத்தின் மிகப் பெரிய சொத்தாகக் கருதப்படும் செம்மரங்கள் களவாக வெட்டப்படுவதை அந்த மாநில அரசு விரும்பவில்லை. அவ்வாறு செய்பவர்கள் எவராக இருந்தாலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதை யாரும் தடுக்க முடியாது. ஆனால் மரம் வெட்டுவதில் ஈடுபட்டிருந்த ஏழை கூலிகளான இளைஞர்களை கேள்விமுறையின்றி கண்மூடித்தனமாக சுட்டுக் கொன்றிருப்பது எந்த நாட்டின் நீதி? இது ஜனநாயக நாடொன்றில் நடக்கும் செயல் அன்று. இது ஒரு காட்டுதர்பார் என்றே சொல்ல வேண்டும். மரம் வெட்டியவர்கள் கூலிக்கமர்த்தப்பட்டவர்கள் என்றே தெரிகின்றது. அவ்வாறாயின் மரங்களை வெட்டுவித்தவர்களை அல்லவா கண்டு பிடித்து தண்டனைக்குட்படுத்தியிருக்க வேண்டும். அவர்களைப் பிடிக்க இந்த இளைஞர்களை எவ்வளவு சுலபமாக சாட்சிகளாக பயன்படுத்திக்கொண்டிருக்க முடியும்?

மரம் வெட்டியவர்கள் பொலிஸாரை எதிர்த்துப் போராடியதாகவும் அதனால் என்கவுன்டர் முறையில் திருப்பி தாக்கிய தாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். ஆனால் கொல்லப்பட்டவர் எவரிடமும் பொலிஸாரை எதிர்க்கும் ஆயுதங்கள் இருக்கக் காணப்படவில்லை, மேலும் பொலிஸார் எவரும் பாதிக்கப்பட்டதாகவும் தகவல் இல்லை. அத்துடன் கொல்லப்பட்டவர்கள் கும்பல் கும்பலாகக் கிடந் துள்ளனர். எதிர்த்த போராடி விட்டு தப்பி ஓட முயன்ற அடையாளங்களும் காணப்படவில்லை. அனைவரும் முகங்களிலும் மார்புப் பகுதிகளிலும் காயமுற்றுள்ளனர். அத்துடன் அவர்களின் மீது எரிகாயங்களும் காணப்பட்டுள்ளன. பொதுவில் இது முன்கூட்டியே திட்டமிடப்பட்டே நடத்தப்பட்டுள்ள காட்டுமிராண்டித்தனமான கொலைகள் என்றே கருதப்படுகின்றது.

இந்தச் சம்பவத்துக்கு வேறும் பல காரணங்கள் கூறப்படுகின்றன. சம்பவ தினத்துக்கு முன்னர் மரம் வெட்டுவதற்கென எட்டுப்பேர் கொண்ட குழுவொன்று திருவண்ணாமலையில் இருந்து வந்துள்ளது. இவர்களில் ஒருவரைத் தவிர்த்து ஏனையவர்களை ஆந்திர பொலிஸார் விசாரணைக்கென்று பிடித்துச் சென்று சுட்டுக்கொன்றுவிட்டு இப்பொழுது வேறுவிதமாக கதையை மாற்றி உள்ளார்கள் என்று சிவில் விடுதலை அமைப்பைச் சேர்ந்த லதா என்பவர் தெரிவித்துள்ளார். தப்பியுள்ளவரை மனித உரிமை ஆணையகத்தின் முன்நிறுத்தி உண்மையை வெளிப்படுத்தி நீதியைக் கோரப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆந்திரப் பொலிஸாரின் நடத்தை குறித்து அந்த மாநில அரசு அலட்டிக்கொண்டதாகவே தெரியவில்லை. அதைவிட மத்தியில் உள்ள பா.ஜ.கவும் அசட்டையாகவே இருக்கிறது. அதனால் தமிழ் நாடு கொந்தளிப்புக்குள்ளாகி இருக்கிறது. ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் நடைபெற்று வருகின்றன.

ஆந்திர அரசை மத்திய அரசு உடனடியாக தட்டிக்கேட்க வேண்டும். செம்மரங்கள் விலையுயர்ந்த பொருளாக இருக்கலாம். அதை விட மனித உயிர்களை ஆந்திர அரசும் அதன் பொலிஸ்துறையும் மலிவாகக் கருதுகின்றனவா என்று அவர்கள் குரல் எழுப்புகிறார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஆந்திர மாநில உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்பேரில் பொலிஸ்தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கத்தை அந்த நீதிமன்றம் நிராகரித்து, பொலிஸார் மீது வழக்குத் தாக்கல் செய்ய உத்தரவிட்டுள்ளது. பொலிஸாரின் நடத்தையில் உயர் நீதிமன்றத்துக்கு நம்பிக்கை இல்லை என்பதையே இது காட்டுகின்றது.

இந்த நிலைமையில் சம்பவம் குறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிடுவதும் சம்பந்தப்பட்ட பொலிஸாருக்கும் அதிகாரிகளுக்கும் எதிராக உடனடியாக மத்திய அரசு நடவடிக்கை எடுப்பதும் அவசியம். குறிப்பாக தமிழ் நாட்டுத் தலைவர்கள் கோருவது போல் சி.பி.ஐ. (குற்றவியல் புலனாய்வுப் பிரிவு) [illegible]ணைக்கு உத்தரவிடப்பட வேண்டும். பாதிக்[illegible] குடும்பங்களுக்கு நியாயமான இழப்[illegible] ஆந்திர [illegible] உத்தரவிடப்படு[illegible] அவசியம்.



# வடக்கு மாணவருக்கான உதவிகளை திரிபுபடுத்தி குழப்பும் முயற்சி

## தெற்கு சிங்கள ஊடகங்களின் புரளி

● வந்தியத்தேவர்

> புலம்பெயர் அமைப்புக்கள் சில மாணவர்களுக்கு வல்வெட்டித்துறை மாரியம்மன் கோயில் ஊடாக 200 சைக்கிள்களை வழங்கியதாக வும் இது ஈழக் கோரிக்கையை விதைக்கும் வகையிலான உதவி என்றும் சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டிருப்பது ஒரு புரளியே ஆகும்.

வடபகுதியில் உள்ள வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், மாணவர்களின் கல்வியை வளப்படுத்தக்கூடியதான நடவடிக்கைகளுக்கு உதவும் பொருட்டும் புலம்பெயர்ந்த நாடுகளில் வதியும் மக்கள் தம்மால் முடிந்த உதவிகளைத் தமது சொந்த ஊர் மக்களுக்கு வழங்குவதை பேரினவாதிகள் தவறான கண்ணோட்டத்துடன் நோக்குவது உகந்ததாகத் தெரியவில்லை. ஈழக்கோரிக்கையை விஸ்தரிக்கும் வகையில் வடக்கில் உள்ள மாணவர்களுக்குப் புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள அமைப்புக்கள் உதவுவதாக இனவாதம் பேசும் சிங்கள ஊடகங்கள் தகவல்களை வெளியிடுகின்றமை தவறான நடவடிக்கையாகும். இனவாதத்தினூடாக மீண்டும் இலங்கையைப் பேரழிவுக்கு இட்டுச் செல்லும் சுயநல நோக்காகவே இதனைக் கருத முடியும்.

புலிகளைப் போரில் அழித்துவிட்டோம் என்று கூறித் தமிழர்களின் கல்வி, பொருளாதாரம், வாழ்வியல் என்பவற்றை அழித்தவர்களே சிங்களத் தலைவர்கள். ஒரு தேசத்தின் பாதுகாவலர்களாக இருந்து கொண்டு அங்குவாழும்சிறுபான்மை இனத்தை அழிப்பதையே தமது கடமையாகக் கொண்டு செயற்பட்டவர்கள் இந்த நாட்டுப் படையினர். நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கான தகவல்களைவழங்குவதற்கு மாறாகநாட்டில் அமைதியின்மையை உருவாக்கக் கூடியதான, இனங்களுக் கிடையில் மோதல்களை உருவாக்குவதற்கான கருத்துக்களூடாக தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக் களைத் தூண்டிவிட்டவையே இந்தச் சிங்கள ஊடகங்கள்.

புலிகளை அழித்துவிட்டோம் என்று கூறுவது மீண்டும் புலிகளையே நினைவுபடுத்துகின்றது. தங்களின் பதவிக் கனவுகளை நனவாக்கும் முயற்சியாக தற்போது புலம்பெயர்ந்த அமைப்புக்கள் மீண்டும் ஈழக்கோரிக்கையை விதைத்து மாணவர்களைத் தூண்டிவிடுவதாக செய்திகளை வெளியிட்டு நாட்டில் ஒரு குழப்ப நிலையைத் தோற்றுவிக்கும் நடவடிக்கையில் இந்த ஊடகங்கள் ஈடுபட்டிருப்பது இனங்களிடையே மீண்டும் ஒரு பெரிய வெடிப்பு ஏற்படக் காரணமாக அமைந்து விடப் போகின்றது.

போரின் பின்னர் வடக்கு மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. விவசாய நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளதுடன் மீன்பிடி மற்றும் கைத்தொழில்கள் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. குடியிருப்புக்களை இழந்து கல்வி வாய்ப்புக்களைத் தொலைத்துவிட்டு எந்தவித உதவியுமின்றி அன்றாட சீவியத்துக்கே வழியற்றவர்களாக இன்னமும் முகாம்களில் முடக்கப்பட்டுக் கிடக்கும் தமிழ் மக்கள் மற்றும் மாணவர்களைச் சரியாகப் புரிந்து கொள்ளாத இனவாத ஊடகங்கள் இந்த மக்களுக்கு வழங்கும் சின்னச் சின்ன உதவிகளைக்கூட துரோகமாகச் சித்திரித்துக் காட்டுவதுதான் வேடிக்கையாகவுள்ளது.

வடக்கு எப்போதுமே கல்வி வளத்தாலேயே தனது வாழ்க்கையை வளப்படுத்தி வந்துள்ளது. தென் பகுதியில் உள்ள பல அரசியல்வாதிகள் உட்பட பிரபலங்களாக இருப்பவர்கள் வடக்கில் கல்வியைப் பெற்று வளர்ந்தவர்களே என்பதை இந்த ஊடகங்கள் மறுக்க முடியுமா? இந்த நாட்டுக்கே சிறந்த கல்விப் பாரம்பரியம் ஏற்படக் காரணமாக இருந்த வடக்கைச் சிதைத்து அதனைப் பாழ்படுத்தியவர்கள் எமது மக்கள் மீண்டும் தலைநிமிர்ந்து வாழ்வதற்காக புலம்பெயர் அமைப்புக்கள் எமது மாணவர்களுக்கு உதவுவதைத் தடை செய்ய முயற்சிப்பது எவராலும் அங்கீகரிக்க முடியாத ஒன்றாகும்.


வெளிநாட்டில் உள்ள புலம்பெயர் அமைப்புக்கள் மாணவர்களுக்கு கல்விக்கான உபகரணங்கள், சைக்கிள்கள் என்பவற்றையே அதுவும் பாடசாலைகள் ஊடாகவே விநியோகிக்கின்றன. இவை பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன. மாணவர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்குவதாகச் சில ஊடகங்கள் கூறுவது தவறானதாகும்.

புலம்பெயர் அமைப்புக்கள் சில மாணவர்களுக்கு வல்வெட்டித்துறை மாரியம்மன் கோயில் ஊடாக 200 சைக்கிள்களை வழங்கியதாகவும் இது ஈழக்கோரிக்கையை விதைக்கும் வகையிலான உதவி என்றும் சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டிருப்பது ஒரு புரளியே ஆகும். கடந்த காலங்களில் மாரியம்மன் கோயில் ஊடாக விடுதலைப்புலிகளின் வீடியோக்களை விநியோகம் செய்ததாக திவயின பத்திரிகை குற்றஞ்சுமத்தியிருந்ததை இதற்கு ஆதாரமாகக் காட்டப்பட்டுள்ளது.

தற்சமயம் ஈழக்கோரிக்கை குறித்து எவருமே பெரிதாக அலட்டிக் கொள்ளாத நிலையில் மாணவர்களின் கல்வியைப் பாழடிக்கும் வகையில் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய உதவிகளை எப்படியாவது தடுத்து நிறுத்தி வடக்கு மாணவர்களின் எதிர்காலத்தை மழுங்கடிக்கும் முயற்சியில் சில சிங்கள ஊடகங்கள் முனைவது ஒன்றுபட்ட எதிர்காலத்துக்கு ஏற்படக்கூடிய சகுனப் பிழையாகிவிடும்.

சேரலாதன்

# தமிழ் அரசியல்வாதிகள் ஒற்றுமையின்றி இயங்கினால்



# இல்லை மீட்சி

## திருசங்கு நிலையில் இன்று தமிழர்கள்

இலங்கையின் அரசியல் நிலவரங்களை அவதானித்துப் பார்க்கும்போது மக்களிடையே கலக்கம்நிறைந்தநிலையொன்றுஉருவாகியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. அரசியல்வாதிகளின் நேர்மையற்ற, தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் மக்களின் நலன்களைச் சிறிதும் கவனத்தில் கொள்வதாகவும் தெரியவில்லை.

போர் ஒன்றையே காரணம் காட்டி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற மக்கள் விரோதச் செயல்கள் இந்த நாட்டின் வரலாற்றிலேயே மிகவும் மோசமான பதிவுகளை ஏற்படுத்திவிட்டன. மஹிந்தவின் ஆட்சியில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் இந்த நாட்டின் பொருளாதாரத்தை விழுங்கி முழு நாட்டையும் அதலபாதாளத்தினுள் தள்ளிவிட்டது. இந்த நிலை நீங்குவதற்கு இன்னும் பல ஆண்டுகள் சென்றாலும் தீர்வு கிடைக்குமென எதிர்பார்க்க முடியாது. மேலும் முன்னைய அரசின் காலத்தில் வெளி நாடுகளிலிருந்து பெற்றகடன்களுக்குரிய வட்டியைச் செலுத்துவதே பெரும் சுமையாக மாறிவிட்டது. இந்த நிலையில் கடன்களைச் செலுத்துவது என்பது முடியாத காரியமாகவே இருக்கப்போகின்றது. அத்துடன் மக்களின் தலைகளின் மீது மேன்மேலும் சுமைகள் ஏற்றப்படுவதையே அவதானிக்க முடிகின்றது.

தென்பகுதி அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில் இனவாதத்தையே அவர்கள் மூலதனமாகக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. சிறுபான்மை மக்களுக்கு எதிராகச் செயற்படுவதன் மூலமாகவே பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்றுவிடலாமென இவர்கள் பெரிதும் நம்பியுள்ளனர். இதனால்தான் தமிழில் தேசிய கீதத்தைப் பாடக்கூடாது, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழர் ஒருவர் வகிக்கக்கூடாது, தமிழர்களின் ஆட்சியின் கீழ் உள்ள வடக்கு மாகாணசபைக்குரிய அதிகாரங்களை வழங்கக்கூடாது, புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழர்கள் சிலருக்கும், அமைப்புக்களுக்கும் விதிக்கப்பட்ட தடைகளை நீக்கக்கூடாது, வடக்கிலிருந்து இராணுவத்தை விலக்கிக் கொள்வதையோ அல்லது இராணுவ முகாம்களை அகற்றுவதையோ சிந்தித்துக்கூடப் பார்க்கக்கூடாது, உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றக்கூடாது, இராணுவத்தால் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களை வழங்கக்கூடாது, தமிழர் பிரதேசங்களில் சிங்களக்குடியேற்றங்களை வகைதொகையின்றி அமைத்தல் வேண்டும், இலங்கையொரு சிங்கள பௌத்த நாடு என்பதால் சகல இடங்களிலும் புத்த ஆலயங்கள் நிறுவுதல் வேண்டும், பெரும் பான்மையின மீனவர்கள் கட்டுப்பாடு எதுவுமின்றி கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என தமிழர்கள் விரும்பாத – அவர்களுக்கு இன்னல்கள் விளைவிக்கக் கூடிய சகலவற்றையும் தமது கொள்கைகளாக அமைத்துக் கொண்டிருக்கின்றனர். இனவாதத்தை விதைத்து அதன் மூலமாகத் தமது அரசியல் அறுவடையை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.



ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியானபோது; தமது தோல்வியைச் சற்றும் எதிர்பார்க்காத மஹிந்த ராஜபக்ஷ ஆடித்தான் போய்விட்டார். தான் விட்ட தவறுகள் அவருக்கு நன்கு தெரிந்ததால் தண்டனை நிச்சயம் கிடைக்கும் என்பதும் அவருக்குப் புரிந்திருக்கும். இதனால்தான் தேர்தல் முடிவுகள் வெளியாகிக்கொண்டிருந்த போது, இராணுவத்தின் உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்றுகின்ற யோசனையும் மஹிந்த தரப்பினரிடம் இருந்துள்ளது. இதற்கு இராணுவத் தளபதி உடன்படாததும், வெளி நாட்டுச் சக்திகள் சிலவற்றின் கடும் அழுத்தங்களும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டன.

இறுதிப் போரின்போது தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகளை சர்வாதிகாரி ஹிட்லரிடம் யூத மக்கள் எதிர்கொண்ட கடுமையான துன்பங்களுக்கு ஈடாகக் கூற முடியும். அங்கு அறுபது லட்சத்துக்கும் அதிகமான யூதமக்கள் அழிக்கப்பட்டனர். இங்கு பல ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் துடி துடித்து மாண்டு போயினர். ஆனால் தமிழர்களுக்கு நேர்ந்த அவலங்களை மூடி மறைத்து விடுவதில் ராஜபக்ஷ அரசு முழுமையாக ஈடுபட்டது. இன்று அதற்கு உதவி புரிவதில் மைத்திரி தலைமையிலான அரசு முழுவீச்சுடன் செயற்படுவதைத் தான் பார்க்க முடிகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கை வெளிவருவதில் ஏற்பட்ட தாமதத்துக்கு இலங்கை அரசே காரணமாக இருந்துள்ளது. மேலும் சர்வதேச போர்க்குற்ற விசாரணை வேண்டவே வேண்டாம், நாமே அதனைச் செய்து முடிக்கின்றோம் எனக்கூறி சர்வதேசத்தைத் திசை திருப்பி நிற்கின்றது. இதனைவிட முக்கியமான போர்க்குற்ற வாளியென வர்ணிக்கப்படும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு பீல்ட் மார்ஷல் என்ற உயரிய பட்டத்தை சூழ்நிலை அறியாது வழங்கி தமிழர்களுக்கு வேதனையை ஏற்படுத்திவிட்டது. பொன்சேகாவுக்கு இந்தப் பட்டத்தை வழங்குவதற்கு இத்தனை அவசரம் காட்டவேண்டிய தேவை என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. போர்க்குற்ற விசாரணைகள் இடம் பெற்று பொன்சேகா அதிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தால் இந்தப் பட்டத்தை வழங்குவது பொருத்த மானதாக இருந்திருக்கும். ஆனால் இனவாதமும், சந்தர்ப்பவாத அரசியலும் நிலைமையை மாற்றி விட்டன.




இந்த நிலையில் தென்பகுதியின் அரசியல் குழப்பநிலை சிறுபான்மை மக்களைத்தான் பெரிதும் பாதித்துவிட்டது. மஹிந்தவிடமிருந்து கிடைக்காதவற்றை மைத்திரியிடமிருந்தாவது பெற்றுவிடுமோமென நினைத்து அவருக்கு வாக்களித்த அந்த மக்கள் பெரும் ஏமாற்றத்தையே எதிர்கொண்டு வருகின்றனர். மைத்திரி அரசால் அறிவிக்கப்பட்ட பல விடயங்கள் ஏதோவொரு வகையில் இழுபறியான நிலையிலேயே உள்ளன. தென்பகுதியைச் சேர்ந்த இனவாதிகள் இவற்றை செயற்படுத்தவிடாது முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். பண்டாரநாயக்க காலம் தொடக்கம் இதுதான் இந்த நாட்டின் சாபக்கேடாக மாறி நிற் கின்றது. சிங்களத் தலைமைகளிடம் எதையும் கேட்டுப் பெறமுடியாது என்பது தான் இன்றைய யதார்த்த நிலையாகும். சுருக்கக் கூறினால், "சட்டியில் இருந்து அடுப்பில் விழுந்த கதை தான்" தமிழர்களுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் நாட்டின் ஆபத்தான சூழ்நிலையை இன்னமும் கவனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. ஏதோ நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மாகாணசபை உறுப்பினர் பதவி, உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியுரிமை என்றே அவர்களின் அரசியல் நிகழ்வுகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. அதிலும் கட்சிகள் ரீதியான பிளவுகள் வேறு தலைதூக்கி நிற்கின்றன. போராளிகள் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து செயற்பட்டதன் காரணமாகவே முப்பது ஆண்டுகளாக இடம்பெற்ற பேரழிவுகளைத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்திய ஆயுதப் போராட்டம் இறுதியில் ஒரு துன்பியல் நிகழ்வாக அமைந்ததைக்கூட இவர்கள் எண்ணிக்கூடப்பார்க்கத்துணியவில்லை. ஆளுக்கொரு பக்கமாகப் பிரிந்து இருந்து கொண்டு பதவிகளுக்கான போட்டிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். ஒற்றுமை இல்லாததன் காரணமாகவே தமிழர்கள் தொடர்ந்தும் அவலங்களை எதிர்கொண்டும் வருகின்றனர் என்பதை இவர்கள்முதலில்உணர்ந்துகொள்ள வேண்டும். வெற்றுக் கோஷங்களும், உணர்ச்சிகளை ஊட்டும் அறிவிப்புக்களும் இனிமேலும் தமிழர்கள் மத்தியில் எடுபடாது என்பதையும் இவர்கள் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் அரசியல்வாதிகளிடம் இனியும் ஏமாறமாட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. ஆகவே தமிழ் அரசியல்வாதிகளே உங்களின் சொந்த அபிலாசைகளை ஒருகணம் மறந்துவிட்டு, ஒரே யொரு முறையாவது அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படுவோமெனச் சபதம் எடுத்துக் கொள்ளுங்கள். அப்போது தான் தமிழ் மக்களின் ஆதங்கமும், தவிப்பும் உங்களுக்குத் தெரிய வரும்.

# சளியை போக்கும் நொச்சி இலை

நொச்சி இலையின் பயன்பாடுகள் மிக அளப்பறியது. நொச்சி இலையை நான்கு அல்லது ஐந்தைப் போட்டு, நன்றாகக் காய்ச்சி அந்தச் சாற்றை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இரவு படுக்கப்போகும் முன்பு அரை டம்ளர் குடித்தால் நுரை யீரலில் இருக்கக்கூடிய சளி எல்லாம் கட்டி கட்டியாக வெளியே வந்துவிடும். கடும் காய்ச்சல் வந்தால் நொச்சி இலையைச் சாப்பிட்டு வர காய்ச்சலுக்கு காரணமான அந்த வைரஸ் கிருமிகள் அழிந்து விடும். உஷ்ணம் அதிகம் இருப்ப தால் நொச்சி இலையைச் சாப்பிட்டால் அடிக்கடி வரக்கூடிய காய்ச்சலைத் தடுக்கலாம். அதே போன்று தும்மலுக்கு, மூக்கில் தொடர்ந்து தண் ணீர் வருபவர்களுக்கு வேறு ஒன்றும் தேவை யில்லை. மஞ்சள், நொச்சி இலை, வேப்பிலை பச்சையாகப் போட்டுப் புகை போடுங்கள், அதை நுகருங்கள். தும்மல் சரியாகி விடும். ஆஸ்து மாவுக்கு, வாத நோய் எல்லாவற்றுக்குமே இந்த நொச்சி இலையைச் சாப்பிட்டாலே சரியாகும். இப்படி நொச்சி இலை பல்வேறு பயன்பாடு கொண்டது. அனைவருக்கும் பல விதங்களில் பயன்படும் நொச்சி இலையை உங்கள் வீட்டிலும் வளர்க்கலாம்.



## நாளை மன்மத வருஷப் பிறப்பு

**சித்திரை-01**
**செவ்வாய்க்கிழமை**
**14.04.2015**

திதி: தசமி பி.ப.12.38 வரை
நட்சத்திரம்: அவிட்டம் மு.இ.11.51 வரை
சுபநேரம்: 10.35–12.05 வரை
இராகுகாலம்: 03.05–04.35 வரை

# மாட்டு இறைச்சியின் தீமைகள்

அசைவ உணவுகளில் ஒன்றான மாட்டு இறைச்சியில் புரோட்டீன் மற்றும் தாதுப் பொருள்கள் அதிகம் உள்ளன. அதேசமயம், எண்ணெய்த் தன்மையும் நிறைய உள்ளது. மாட்டுக்கறியை அதிகமாக உண்பதால் நமது வாழ்நாள் குறையும் என்று புதிய ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிக அளவு மாட்டுக்கறியை உண்பதால் இதய நோய் ஏற்படும். ஏனெனில் அந்த இறைச்சியில் அதிகமான அளவு கொழுப்புகள் நிறைந் துள்ளன. அதனால் இதயத்தில் இருந்து பல பாகங்களுக்கும் செல்லும் இரத்தத்தின் அளவு குறைவதோடு, வீரியம் குறைந்து நாள்பட்ட நோயையும் ஏற்படுத் தும். அதேசமயம், மற்ற இறைச்சிகளைப் போல இதையும் அளவோடு எடுத்துக் கொள் ளலாம் என்கிறார்கள். அரிசி, வெண்ணெய், சீஸ் போன்றவற்றில் கூட கொழுப்புகள் உள்ளன. இருப்பினும் அவற்றை எவ்வாறு சாப்பிடுகிறோமோ, அது போலவே அந்த மாட்டுக்கறியையும் அளவோடு உண்ண வேண்டும். ஏனெனில் மிருகத்தின் கொழுப் பானது இதயத்தில் இருந்து பல பாகங்களுக்கும் தங்கி, இரத்த ஓட்டத்தை தடுக்கும். அதனால் மாரடைப்புகள் கூட ஏற்படும். மாட்டுக்கறியில் உள்ள கார்சினோஜென், புற்றுநோயை ஏற்படுத்தும் பொருள். ஆகவே அளவுக்கு அதிகமாக மாட்டுக்கறியை உண்டால் உடலில் கார்சினோஜென்னின் அளவு அதிகரிக்கும். மாட்டுக்கறியில் கலோரி அதிகமாக உள்ளது. ஆகவே இவற்றை அதிகமாக உண்டால் உடலானது அதிக எடைகூடும் வாய்ப்பு உள்ளது.

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 40 | 40 | 30 | 60 | 40 |
| கத்தரி | 40 | 30 | 40 | 40 | 20–30 | 40 | 50–60 |
| கரட் | 100 | 110 | 120 | 110 | 80–100 | 120 | 100–120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 30–40 | 60 | 40–50 |
| பயிற்றை | 70 | 50 | 70 | 50 | 60–70 | 90 | 40–60 |
| பாகல் | 70 | 80 | 100–110 | 70 | 80–70 | 80 | 80–90 |
| கருணைக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 | – | – | 60–80 |
| பெ.வெங்காயம் | 80 | 70– 80 | 90–100 | 80 | 80–90 | 80 | 80–90 |
| சி.வெங்காயம் | 50 | 60–80 | 70 | 70 | 50–60 | 80 | 80–100 |
| பூசணி | 30 | 30 | 40 | 20 | 25–30 | 60 | 40–50 |
| தக்காளி | 40 | 40 | 30 | 40 | 30–40 | 40 | 50–80 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 40 | 60–70 | 60 | 60–80 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20–30 | 20 | 30–40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20–30 | 20 | 10–15 |
| பச்சை மிளகாய் | 40 | 50 | 40 | 40 | 40–50 | 60 | 60–70 |
| புடோல் | 30 | 40 | 40 | 30 | 30–40 | 40 | 40–60 |
| கோவா | 30 | 40 | 40 | 20 | 25–30 | 30 | 80–90 |
| வெண்டி | 50 | 40 | 40 | 40 | 40–50 | 30 | 30–40 |
| போஞ்சி | 90 | 100 | 80 | 80 | 70–80 | 120 | 40–60 |
| லீக்ஸ் | 140 | 150 | 140 | 120 | 140–150 | 200 | 60–70 |
| தேங்காய் | 60 | 35–55 | 60 | 50–60 | 50–60 | 70 | 35–50 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80–90 | 80 | 80–90 | 100 | 80–100 |
| தேசிக்காய் | 90 | 80 | 90 | 60 | 100–120 | 80 | 80–100 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 | 30 | 20 | 10–15 |
| கறிமிளகாய் | 100 | 70 | 60–100 | 80 | 70–80 | 120 | 80–100 |
| இராசவள்ளி | 120 | – | 120 | 80 | 100–120 | 120 | 140–180 |

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 650 | 800 | 600 | 500 |
| நண்டு | 350 | 300 | 450 | 250 | 450 |
| கணவாய் | 550 | 550 | 650 | 600 | 400 |
| பாரை | 400 | 400 | 600 | 450 | 350 |
| சுறா | 500 | 500 | 600 | 550 | – |
| சீலா | 450 | 400 | 500 | 350 | 300 |
| விளை | 450 | 400 | 550 | 430 | 300 |
| முரல் | 350 | 350 | 500 | 350 | 270 |
| கும்பிளா | 400 | 300 | 550 | – | – |
| கிழாக்கன் | 350 | 600 | 500 | – | – |
| ஒரா | 300 | 350 | 400 | – | – |
| திரளி | 250 | 250 | 300 | 250 | – |
| நகரை | 250 | 250 | 400 | 300 | – |
| சூடை | 130 | 150 | 200 | – | 100 |
| ஒட்டி | 180 | 200 | 250 | 200 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 250 | 130 |
| பாலை | 300 | 300 | 350 | 250 | – |
| வாளை | 180 | 150 | 250 | 300 | 200 |
| கொய் | 80 | 150 | 80 | 100 | – |
| மதனம் | 300 | 250 | 350 | 300 | 250 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### வலிமையான சிந்தனை

சிந்தனைக்கும் வாக்குக்கும் எட்டாதவர் கடவுள். அவருக்கென தனியாக குணம் ஏதும் கிடையாது. எத்தனை பிறவி எடுத் தாலும் நமக்கு உற்ற துணையாக வரும் நல்ல நண்பன் நல்லொழுக்கம் மட்டுமே. மனக்கட்டுப்பாடு மகத்தான ஆற்றலை உண் டாக்குவதற்கு உற்ற துணையாக இருக்கும். பலவீனத்துக்குரிய பரிகாரம் எப்போதும் வலிமையைக் குறித்து சிந்திப்பது தான். மனிதன் தாழ்ந்த உண்மையில் இருந்து மேலான உண்மைக்குப் பயணம் செய்து கொண்டிருக்கிறான்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 3 | 1 | 9 | 2 | 8 | 4 | 6 |
| 1 | 2 | 9 | 6 | 4 | 8 | 7 | 5 | 3 |
| 6 | 4 | 8 | 7 | 5 | 3 | 9 | 1 | 2 |
| 3 | 9 | 7 | 4 | 1 | 6 | 5 | 2 | 8 |
| 2 | 1 | 4 | 8 | 7 | 5 | 3 | 6 | 9 |
| 8 | 5 | 6 | 2 | 3 | 9 | 1 | 7 | 4 |
| 9 | 6 | 1 | 3 | 2 | 7 | 4 | 8 | 5 |
| 4 | 8 | 5 | 9 | 6 | 1 | 2 | 3 | 7 |
| 7 | 3 | 2 | 5 | 8 | 4 | 6 | 9 | 1 |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 3 | | | 6 | 1 | 9 | |
| | | | | | | 6 | 4 | 3 |
| | 5 | | 9 | | | | | 8 |
| | 1 | 4 | 8 | 7 | | 5 | | |
| | 7 | | | | | | 8 | |
| | | 8 | | 5 | 2 | 7 | 3 | |
| 7 | | | | | 4 | | | |
| 5 | 8 | 6 | | | | | | |
| | 4 | 2 | 6 | | | 9 | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள். இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண் டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# சித்திரை மாத ராசி பலன்கள்



## கும்பம்

போலியாக வாழாமல், ஆடம்பரத்துக்கும் ஆசைப்படாமல் இருப்பதை வைத்து சந்தோஷப்படும் நீங்கள் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்பவர்கள். புதிய முயற்சிகள் நிறைவேறும். சகோதர, சகோதரிகளால் நிம்மதியிழப்பீர்கள். செல்வாக்கும் கூடும். பணவரவு அதிகரிக்கும். தங்கம் மற்றும் வெள்ளி ஆபரணங்கள் வாங்குவீர்கள். உங்களின் புதிய திட்டங்களைப் பெற்றோர் ஆதரிப்பார்கள். மகளுக்கு தள்ளிப்போன திருமணம் கூடி வரும். பிள்ளைகளால் வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஒரு வீட்டை விற்று மற்றொரு வீடு வாங்கும் சந்தர்ப்பமும் உண்டாகும். சவாலான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். தடைகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். சிலருக்கு பரிசும், பாராட்டுகளும் கிடைக்கும். போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவீர்கள். மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம்.



**மாணவர்கள்**

சுற்றுலாப் பயணங்கள் சென்று வருவீர்கள். பழைய நண்பர்களுடன் மனம் விட்டுப் பேசுவீர்கள்.

**பெண்கள்**

முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். கல்யாணம் கூடி வரும். வேலை கிடைக்கும்.

**உத்தியோகத்தர்கள்**

உத்தியோகத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். ஆனாலும், ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமை இருக்கும். குடும்பத்தினருடன் செலவிடக் கூடிய நேரம் குறையும். மூத்த அதிகாரி உங்களுக்கு ஆதரவு தந்தாலும் உங்களுக்கு மேலதிகாரியால் பிரச்சினைகள் வந்துபோகும்.

**கலைஞர்கள்**

வருமானம் உயரும். உங்களுடைய படைப்புகள் பரிசு, பாராட்டுகள் பெறும். தர்மம் தலை காக்கும் என்பதை உணரும் மாதமிது.








# ஆண்களின் நட்பால் சிதையும் வாழ்க்கை

நட்பாய்ப் பழகும் போதே மொத்தத்தில் ஆண் நண்பர்களின் மனநிலையை புரிந்து கொள்ளுங்கள். தவறான நட்பை ஆரம்பத் திலேயே துண்டித்து விடுங்கள். சமூகத்தைப் புரிந்து கொண்டு பழகுங்கள். பருவ வயது ஆரம்பிக்கும் டீன்ஏஜ் பருவத்தில் தான் எதிர்பாலினர் மீது கூடுதல் ஈர்ப்பு தொடங்குகிறது. பாடசாலை செல்லுதல் டியூசன் செல்லுதல் போன்ற நேரங்களில் தான் பெண்களுக்கு ஆண்களைச் சந்திக்கும் வாய்ப்பு அதிகமாகக் கிடைக்கிறது. இயல்பாகப் பழகியும் விடுகிறார்கள். பாடசாலை வயதில் ஒரு கட்டுபாட்டுக்குள் இருக்கும் அவர்கள் கல்லூரிக்கு சென்றதும் சுதந்திரமாக ஆண் நண்பர்களுடன் பழக வாய்ப்புக் கிடைக்கிறது. சிலருக்கு பெற்றோரை விட்டு தங்கிப் படிக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படுகிறது. நட்பு என்கிற ரீதியில் கல்லூரிக்குள் கூட்டமாக அமர்ந்து அரட்டையடிப்பதில் கிடைக்கிறது புதுப்புது நண்பர்களின் பழக்கம். இது மட்டுமல்லாமல் கல்லூரியை விட்டு பெண்கள் வரும் வழியிலும், அவர்கள் அடிக்கடி செல்லும் இடங்களிலும் சந்திக்க நேரும், நட்பாய் பழகநேரும் ஆண்களுடனும் பழக்கம் ஏற்படுகிறது. கல்லூரி வட்டத்தைத் தாண்டி வெளியில் ஏற்படும் பழக்கம்தான் நிறையப் பேரின் வாழ்க்கையைச் சிதைக்கிறது. இப்படி ஒன்றுக்குமேற்பட்ட ஆண் நண்பர்களுடன் பழகும் வாய்ப்பு கல்லூரிக்குள்ளும், கல்லூரிக்கு வெளியிலும் இயல்பாகவே பெண்களுக்குக் கிடைக்கிறது. சில காலத்துக்குப் பிறகு இந்த ஆண் நண்பர்கள் வட்டத்தில் யாராவது ஒருவன் தனக்கு மிகவும் பிடித்தமானவனாக இருக்க, அவன் அவளுக்கு நெருங்கிய நட்பாக மாறி விடுகிறான். நல்ல வேலையில் இருக்கிறான், நன்றாக படிக்கிறான், என்னை நேசிக்கிறான், எனக்காகக் காத்திருக்கிறான், பரிசு வாங்கித் தருகிறான், நல்ல நேரத்தில் உதவினான் என்று அவர்களுக்குச் சாதகமான ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லிக் கொண்டு அன்பை வளர்க்கிறார்கள். இந்த நட்பு எல்லை மீறி ஏமாறும்போது தான் பெண்களுக்குப் பிரச்சினை ஏற்படுகிறது. இவர்களுக்கு சிக்கல் ஏற்படுவதே திருமணத்துக்குப் பிறகுதான். இவர்களை மணந்து கொள்ளும் ஆண்கள், திருமணத்துக்கு முந்தைய தங்கள் மனைவியின் ஆண் நட்பு வட்டம் பற்றி இயல்பாகப் பேசித் தெரிந்து கொள்கிறார்கள். பெண்களின் ஆண் நட்பை அப்படியே ஏற்றுக் கொள்ளும் கணவர்கள் எவருமில்லை. மனைவி இயல்பாகவே தன் ஆண் நண்பனை கணவனிடம் அறிமுகப் படுத்தினாலும், அவர்களுடன் பழகநேர்ந்த தருணங்களை நினைவு படுத்தினாலும் கண வருக்கு உள்ளூர சந்தேகம் வலுத்துக் கொண்டே போகிறது. இதற் குப் பிறகு கணவன்– மனைவிக்குள் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால், முதலில் கணவன் ஆரம்பிப்பது அவனைப் பற்றிய பேச்சைத்தான். அடிக்கடி நடக்கும் இதுபோன்ற பிரச்சினை நேரங்களில் எல்லாம் கூசாமல் மனைவி மீது சந்தேக அம்பை வீசி விடுகிறான் கணவன். இதனால் ஏராளமான பெண்களின் வாழ்க்கை பாழாகி இருக்கிறது. இப்படிப்பட்ட சந்தேகப் பிரச்சினைகளால் தகராறு ஏற்பட்டு விவாகரத்துக்குச் செல்பவர்கள்தான் ஏராளம்.









# நன்றி மறப்பது நன்றன்று

கண்ணனும் ...முருகனும் நல்ல நண்பர்கள்.ஒரு நாள் கடற்கரைக்குச் சென்ற இவர்கள்..மணலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்..அப்போது நடைபெற்ற விவாதத்தில் முருகனின் பேச்சு கண்ணனுக்குக் கோபத்தை உண்டாக்க..

அவனது கன்னத்தில் பளாரென அறைந்தான் கண்ணன். அடியை வாங்கிக்கொண்ட முருகன்..சற்று நேரம் திகைத்துவிட்டான்.பின் கடற்கரை மணலில் 'கண்ணன் என்னை அடித்தான்' என எழுதினான். பின் இருவரும் மௌனமாக வீடு திரும்பினர்.. அப்போது வேகமாக வந்த கார் ஒன்று முருகனை இடிக்குமாறு வர..உடனே கண்ணன்...முருகனை இழுத்து..நடக்க இருந்த விபத்தைத் தவிர்த்தான். நன்றியுடன் முருகன்...பக்கத்தில் இருந்த கல் ஒன்றை எடுத்து..பெரியபாறாங்கல்ஒன்றில்'இன்றுகண்ணன்என்உயிரைக்காப்பாற்றினான்'எனச்செதுக்கினான். இதைக் கண்ட கண்ணன்..'நான் உன்னை அடித்ததை மண்ணில் எழுதினாய்..காப்பாற்றியதை கல்லில் எழுதினாயே..ஏன்'என்றான். அதற்கு முருகன் ..'ஒருவர் செய்த தீங்கை மணலில் எழுதினால் ...அதை அடுத்த நிமிடம் காற்று கலைத்துவிடும்...அதே வேளையில் செய்த நன்மையை கல்லில் எழுத ..அது அழியாமல் என்றும் நிற்கும்'என்றான். ஒருவர் செய்த தீமையை உடனே மறந்து விடவேண்டும்.அதே வேளையில் அவர்கள் செய்த நன்மையை என்றென்றும் மறக்கக்கூடாது என்பதையே இச் செயல் நமக்கு தெரிவிக்கிறது.



# காகம்!

அதிகாலையில் கரையும் காகம்
அலாரமாய் எழுப்பும் காகம்
பகல் முழுவதும் காணும் காகம்
பொழுது சாய்ந்தால் மறையும் காகம்!
அண்டமெல்லாம் வாழும் காகம்
அண்டார்டிகாவில் இல்லை காகம்
அகிலத்தைச் சுத்தம் செய்யும்
ஆகாயத் தோட்டி என்பார்!
கூட்டமாய் வாழும் காகம்
கூட்டில் முட்டையிடும் காகம்
அடைகாத்து காக்கும் காகம்
அண்டவிடாது எவரையும் காகம்!
ஒரே துணையுடன் வாழும் காகம்
இருபது ஆண்டுகள் ஆயுள்காலம்
விருந்தினர் வருகையைக் கூற
வாசலில் கரையும் காகம்!

# வர்ணம் தீட்டலாம் வாங்க...





# நம்பினால் நம்புங்கள்!

சில பனிச்சறுக்கு வீரர்கள் மணிக்கு 161கிலோமீற்றர் வேகத்தில் பயணிப்பதுண்டு.

நாம் சுமார் 10 ட்ரில்லியன் செல்களால் உருவாகியிருக்கிறோம்.

சராசரி குழந்தை வளரும் அதே வேகத்தில் தொடர்ந்து ஒருவர் வளர்ந்துகொண்டே இருந்தால், 10 வயதில் 1,87,469 கிலோ எடையை எட்டி விடுவார்.

2004ஆம் ஆண்டு வரை, சிங்கப்பூரில் 'சூவிங்கம்' தடை செய்யப்பட்டிருந்தது.

பனிச்சிறுத்தைகளால் கர்ஜனை செய்யவோ, பேரொலி எழுப்பவோ முடியாது.

வட அமெரிக்காவின் மிக வெப்பமான பகுதி கலிபோர்னியா மாகாணத்தில் உள்ளது. அந்த இடத்துக்கு மரணப் பள்ளத்தாக்கு எனும் பொருள்படும் 'டெத் வெலி' என்ற பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

பெண் தேனீக்கள் மட்டுமே கொட்டும்.

சில வகை வண்ணத்துப்பூச்சிகளின் கண்கள் அதன் இறக்கைகளில் உள்ளன.

# அருமையான சந்தர்ப்பம் கிடைக்கும்



வாழ்க்கையில் நீங்கள் நினைத்தபடி நடக்கும் அருமையான சந்தர்ப்பம் கிடைத்தே தீரும். உங்களுடைய திறமையும் ஆற்றலும் ஒன்று சேரும் அந்தச் சமயத்தில் உங்களுக்காக வெற்றிக் கதவுகள் திறக்கப்படும். அதனுள்ளே நுழைவதற்கு எப்போதும் தயாராக இருக்கவேண்டும். நீங்கள் எப்போது முழுமையாகத் தயாராகிறீர்களோ அப்போது தான் வெற்றிக்கான சந்தர்ப்பத்தை சந்திப்பீர்கள். அப்போது தான் உங்களைத் தேடிவரும் பெரிய பதவியையும், பொறுப்பையும் பயமில்லாமல் ஏற்றுக்கொள்ள முடியும். வெற்றி வாய்ப்பு கிடைத்த பிறகு தயாராகிக் கொள்ளலாம் என்றிருந்தால் அந்த வெற்றி வாய்ப்பும் உங்களைவிட்டு நழுவிச் சென்றுவிடும். பின்பு அத்தகைய அரிய பெரிய வாய்ப்புக் கிடைத்தும் அதனைப் பயன்படுத்திக் கொள்ள முடியாமல் நீங்கள் தோல்வி அடைவீர்கள். ஆகவே வாய்ப்புகளை எதிர் நோக்குங்கள்! அதற்கு முன் அவற்றை எதிர்கொள்ள தயார்படுத்திக் கொள்ளுங்கள்!



வருடப்பிறப்பு
ஏப்ரல் மாதம் 14ம் திகதி
செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.47இற்கு
உணவு சமைத்தல்
ஏப்ரல் மாதம் 14ம் திகதி
செவ்வாய்க் கிழமை முற்பகல் 9.23இற்கு
விருந்துண்ணல்
ஏப்ரல் மாதம் 14ம் திகதி
செவ்வாய்க் கிழமை முற்பகல் 10இற்கு



இனிய புதுவருட வாழ்த்துக்கள்

பிறக்கவிருக்கும் சிங்கள மற்றும் இந்து புதுவருடம் இலங்கையர் உங்கள் அனைவருக்கும் சௌபாக்கியம் நிறைந்த இனிய புதுவருடமாகட்டும்
களனி கேபிள்ஸ் முகாமைத்துவம் மற்றும் ஊழியர் குழு



KELANI CABLES
KELANI LIGHTING

# மூர்க்கத்தனமான மும்பையை பணியவைத்தது பஞ்சாப்




பெய்லியும் சேவாக்கும் அதிரடியில் வெளுத்துவாங்க, ஜோன்சனும் சன்டீப்பும் பந்துவீச்சில் கலக்க மும்பையை 18 ஓட்டங்களால் தோற்கடித்து முதல் வெற்றியை பதிவுசெய்தது பஞ்சாப்.

சேவாக், மக்ஸ்வெல், மில்லர், பெய்லி, முரளி விஜய், ஜோன்சன் இப்படி பார்க்கத்தான் அதிரடி பட்டாளம் ஆனால் எதுவும் வேலைக்கில்லை என்றவாறான விமர்சனங்கள் கடந்த சில நாட்களாக உலாவுகின்ற நிலையில் களங்கத்தைத் துடைத்தெறியும் நோக்கில் மும்பையை பிரித்து மேய்வது என்ற எண்ணத்தில் களமிறங்கியது பஞ்சாப். கடைசி ஆட்டத்தில் கொல்கத்தாவிடம் தோல்வியடைந்த காரணத்தினால் பஞ்சாப்பை பஞ்சாக பறக்க விடுவது என்ற எண்ணத்தில் களமிறங்கியது மும்பை.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை களத்தடுப்பை தீர்மானிக்க களத்தில் தேசியஅணிக் கனவுகளுடன் சேவாக் மற்றும் முரளி விஜய். 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தின் பின்னர் சேவாக்கின் உண்மை முகம் நேற்று மீண்டும் ஒரு தடவை அரங்கேறியது. ஆரம்பமுதலே அடித்து நொறுக்கினார். தருணத்துக்கேற்ற பாணியில் ஆடிக்கொண்டிருந்தார் விஜய். ஆரம்பம் அசத்தல் தொடக்கத்தைக் கொடுத்தது. பந்துப்பரிமாற்றங்கள் செல்லச்செல்ல பந்துகள் பறக்கும் வாய்ப்புக்களும் அதிகரித்தது. 17 பந்துகளில் 36 ஓட்டங்களைக் குவித்து விடைபெற்றார் சேவாக். சிறிது நேரத்தில் 35 ஓட்டங்களுடன் சேவாக்கின் பாதையில் நடந்தார் விஜய். அளவுகளில் நீளமான மக்ஸிமம் சிக்சர்களை விளாசுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட மக்ஸ்வெல் கடந்த ஆட்டத்தைப்போலவே இந்த ஆட்டத்திலும் கைவிட்டார். மில்லருக்குகில்லராக மாறினார் மலிங்க. தற்பொழுது பஞ்சாப் 134-4 (15.3). இறுதிக் கட்ட அதிரடியைத் தொடங்கினார் பெய்லி. 27 பந்துகளில் அரைச்சதத்தையும் எட்டினார் முடிவில் பஞ்சாப் 177-5.

120 பந்துகளில் 178 ஓட்டங்கள். சர்மா, பின்ஞ், அண்டர்சன், ராயிடு, பொலார்ட் இந்தப்பட்டாளத்தில் எவருக்கும் ஒருவருக்கு போர்ம் கிடைத்தால் நிச்சயம் பஞ்சாப் முறையாக வாங்கிக்கட்டும். ஆனால் முதல் பந்துப்பரிமாற்றத்திலேயே சர்மாவைடக்கில் வெளியேற்றி பஞ்சாப்புக்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்தினார் சன்டீப். பதின்ம ஓட்டங்களைத்தாண்ட கல்லில் நாருரிப்பதுபோல் படாதபாடுபட்டனர் மும்பை வீரர்கள். சன்டீப் சர்மா, ஜோன்சன் இருவரும் இணைந்து மும்பையை ஆட்டிப்படைத்தார்கள். என்னசெய்வது என்பது தெரியாமல் திகைத்துநின்றனர் மும்பை வீரர்கள். இலக்குகள் இழப்பையும் எவராலும் தடுக்க முடியவில்லை. பின்ஞ் 8, ரறி 7, அண்டர்சன் 5 என்று ஒற்றையிலக்கங்களுடன் ஓடி ஒளித்துக்கொண்டனர். ராயிடு பெற்ற 13 ஓட்டங்களே முதல் 12 பந்துப்பரிமாற்றங்களில் மும்பை சார்பாக பெற்ற அதிகூடிய ஓட்டங்களாக இருந்தன. ஒரு கட்டத்தில் மும்பையின் நிலைமையோ 59-6. வந்தார் ஹர்பஜன். நடப்பு ஐ.பி.எல். தொடரில்அப்பிடியொரு அதிரடியை யாரும் கண்டிருக்க முடியாது. அனுபவமான ஆரம்பத்துடுப்பாட்ட வீரனைப் போல அடுத்தடுத்து சிக்சர்களை விண்ணுக்குஏவினார். ஹர்பஜன் அடித்த பவுண்டரி, சிக்சர்களே அதிகம். 19 பந்துகளில் அரைச்சதத்தை அடைந்தார். 22 பந்துகளில் 6 சிக்சர்கள் 5 பவுண்டரிகள் அடங்கலாக 64ஓட்டங்களை அடித்து நொறுக்கி ஆட்டமிழந்தார். 59 ஆவது ஓட்டத்தில் சென்ற ஆறாவது இலக்குக் குப்பின்னர் 159 ஆவது ஓட்டங்களிலேயே 7ஆவது இலக்கு வீழ்த்தப்பட்டது. மும்பை பெற்ற மொத்த ஓட்டமும் இதுதான். படுதோல்வியடையவிருந்த மும்பையை கௌரவத் தோல்வியடையச் செய்த பெருமை ஹர்பஜனையே சாரும். ஆட்டநாயகனாக பெய்லி தெரிவானார்.

(ரி)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## கண்ணீர் அஞ்சலி



எமது அன்புச் சகோதரன்
**சுப்பிரமணியம் இரத்தினம்**
அவர்கள் கனடாவில் காலமானதையிட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

திருமதி துரைராஜா
குணபூபதி (குஞ்சு)
குடும்பத்தினர்.

## நெஞ்சத்தில் நீங்கா நினைவுகளுடன் ஆண்டு ஒன்று

மண்ணில்
1992 . 04 . 11



விண்ணில்
2014 . 04 . 13

### அமரர் செல்வி ஜெறோம் கொன்சலிற்றா

பொன்னை இழந்தோம் போகட்டும்
என்றிருந்தோம்
கண்ணை இழந்திருந்தால்
விதியென்று விட்டிருப்போம்
உன்னை இழந்து விட்டோம்
நடைப் பிணமாய் வாழ்கின்றோம்
நாள்களை மட்டும் தான்
நகர்த்த முடிந்தது இதுவரை.....
நாவில் உன் பெயர் சொல்லி மகிழ்ந்த நாள்களை
நடிப்பாகக் கூட நகர்த்தி விட முடியவில்லை....

கல்லறை உன்னை அழைத்த நாளில் -சிந்திய எம்
கண்ணீர் துளிகள் கல்லாகி உறைந்தாலும்
கனிவான உன் காலத்தின் நினைவுகள்
கனிவிலும் கதை பேசி செல்கிறது

நீ விண்ணப்பிக்காமலே அமர்ந்து கொள்ளலாம்
காத்திருக்கின்றன எத்தனையோ கருவறைகள்
அழைப்பு மணிகளும் அவசியமில்லை
உன் அழகான புன் சிரிப்புக்காய்
ஏங்குகின்றன எத்தனையோ இதயங்கள்

ஆண்டு ஒன்றல்ல ஆயிரம் கடந்தாலும்
எம் நினைவுகளில் அழியாத பொக்கிசம் நீ....
கர்த்தரின் பாதத்தில் உன் ஆன்மா
பணிவாக சாந்தி பெற வேண்டி நிற்கின்றோம்
கலைந்து விடாத உன் அன்பான
கனவுகளோடு....

அடப்பன் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.


## விற்பனைக்குண்டு

பாவித்த வீட்டு பனைமரம், தீராந்தி, ஓடு, கதவு, நிலை விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 077 2247768

## வேலையாள் தேவை

பண்டத்தரிப்பில் இயங்கும் பார்மசி ஒன்றுக்கு (அனுபவம் உள்ள) பெண்பிள்ளை தேவை.
தொடர்பு:- 077 8672805



## காலத்தால் மறவாத நினைவுகள்



20 ஆம் ஆண்டு
ஏரம்பு சோதிலிங்கம்
([illegible])



5 ஆம் ஆண்டு
மங்கையர்க்கரசி
சோதிலிங்கம்



6 ஆம் ஆண்டு
சோதிலிங்கம்
பஞ்சலிங்கம்



4 ஆம் ஆண்டு
சோதிலிங்கம்
இலட்சுமி காந்தன்
(B.A, J.P, ஆசிரியர்)

அன்பு, வீரம், புகழ் நிறைந்த ஆல விருட்சமான தந்தை பாசத்தின் திருவுருவமான அன்பு அன்னை
இதிகாச இராமன் போல் சகோதர பாச மிகு அண்ணன் அனைவரின் அன்புக்கு பத்திரமான இளையவன்
இவர்களை விரைந்து கவர்ந்தான் காலனவன் ஆனாலும் என்றும் மறவோம் யாம்......

27/1, கருவேலடி லேன்,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

# ஐ.தே.கவின் வாலாக இருக்கவே மாட்டேன்

## பந்துல குணவர்தன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.13
பதவியிலிருந்து நீக்கினாலும், நான் செத்தாலும் ஐக்கிய தேசிய கட்சியின் வாலாக மாட்டேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.
செய்திச் சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் எனக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. சிறிலங்கா சுதந்திர கட்சியின் மத்திய செயற்குழுவில் இருந்து என்னை நீக்கிவிட்டதாகவும், மத்திய செயற்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக நான் செயற்படுவதாகவும் அக்கடித்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.
ஐக்கிய தேசிய கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திர கட்சி ஒன்றிணைந்த பின்னர் தமக்கு தேவையில்லை என எண்ணும் உறுப்பினர்களை வேட்டையாடும் முதற்கட்டமே எனது பதவி நீக்கம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அமைச்சர், உறுப்பினர் பதவிகள் இல்லை என்றாலும் நாடு, நாட்டின் பொருளாதாரம் மற்றும் அப்பாவி மக்களுக்கு துணையாக நான் இருப்பேன் எனவும் செத்தாலும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைய மாட்டேன் – என்று அவர் அதில் கூறியுள்ளார். (ற)

# போதையில் வாகனம் செலுத்திய 173 பேர் கைது

கொழும்பு, ஏப்.13
மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகளில் 175 பேரை 24 மணி நேரத்துக்குள் கைது செய்துள்ளதாக பொலிஸ் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது. 11 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிமுதல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி வரையிலான 24 மணிநேரத்துக்குள்ளே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தலைமையகம் அறிவித்துள்ளது. (ற)

# கண்ணிவெடி அகற்றலுக்கு புதிய ஒப்பந்தம் கைச்சாத்து


கொழும்பு, ஏப் 13
கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களுக்கும் மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கொள்ளுப்பிட்டியிலுள்ள அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதுவரை காலமும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கி வந்த கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் தற்போது புதிய அமைச்சரவையின் விசேட தீர்மானத்துக்கு அமைவாக மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திருமதி ரஞ்சினி நடராஜபிள்ளை, ஹலோ ரஸ்ட் தலைவர் டமியன் ஒப்ரின் மற்றும் பிரிகேடியர் ஆனந்த சந்திரசிறி ஆகியோருக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. கண்ணிவெடி அகற்றும் நிகழ்ச்சித் திட்டத்துக்குப் பொறுப்பாக அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.எம். நயீமுதின் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, விடுவிக்கப்பட்ட காணிகளிலுள்ள கண்ணிவெடிகளை மிகவும் துரிதகதியில் அகற்றி மக்களை விரைந்து குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடம் அமைச்சின் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கென நிதி வழங்குகின்ற நிறுவனங்களிடம் மிக விரைவில் பேச்சு நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (த–10)

# ஒட்டுசுட்டானில் பட்டப்பகலில் அச்சுறுத்தும் யானைகள்



மாங்குளம், ஏப்.13
மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதியில் பட்டப்பகலில் யானை நடமாடுவதால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்வோர் பீதியுடனேயே செல்ல வேண்டியுள்ளது. குறித்த வீதியில் மக்கள் குடியிருப்புக்கு அண்மையாக காட்டுப்பகுதியில் நேற்றுலாவகமாக யானை நடமாடியது. இதனை பலர் வேடிக்கையாகப் பார்த்துச் சென் றனர். எனினும் சைக்கிள், முச்சக்கரவண்டிகளில் செல்வோர் பீதியுடனேயே சென்றதை அவதா னிக்க முடிந்தது. அண்மைக்காலமாக வன்னிப்பகுதிகளில் காட்டு யானைகள் பயன்தருமரங்களை சேதப்படுத்திவருகின்றன. (ற)

# எம்.பிக்களுக்கு புதிய வாகனம்

## தேர்தலுக்கு முன்னர் வழங்கக் கோரிக்கை

கொழும்பு, ஏப். 13
நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சுங்கத் தீர்வையின்றி வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக அனுமதிப் பத்திரங்களைத் துரிதமாக வழங்கும் நோக்கில் நாடாளுமன்ற விவகார அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த் தன கடந்த முதலாம் திகதி அமைச்சரவைக்கு யோசனை ஒன்றை முன்வைத்துள்ளார்.
நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கோரிக்கை விடுக்காத நிலையில், நாடாளுமன்ற விவகார அமைச்சர் தனது சுயவிருப்பத்தின் பேரில் இந்த யோசனையை முன்வைத்துள்ளதாக தெரியவந்துள்ளது.
இதனடிப்படையில் 55 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனங்களை இறக்குமதி செய்ய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது. துறைமுகத்துக்கு வந்தடையும் போது சுமார் 71 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த வாகனத்தின் உள்நாட்டுச் சந்தை பெறுமதி இரண்டு கோடி ரூபாவையும் தாண்டும் என கூறப்படுகிறது.
தேர்தல் நடத்தப்பட உள்ள சந்தர்ப்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அனுமதிப் பத்திரங்களை விற்றுச் சுமார் ஒரு கோடி ரூபாவுக்கும் மேல் இலாபத்தை பெற முடியும் என்பதுடன் அந்தப் பணத்தைத் தேர்தலுக்குச் செலவிட முடியும். இதன் காரணமாக அவசரமாக இந்த அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதாகப் பேசப்படுகிறது.
அரசின் இந்த தீர்மானம் காரணமாக திறைசேரிக்கு 225 கோடி ரூபா இழப்பு ஏற்படும் என மதிப்பிடப்படுகிறது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த 26 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அண்மையில் அமைச்சு மற்றும் பிரதியமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன. இந்த பதவிகளுக்காக அவர்களுக்குப் பொதுமக்களின் நிதியில் இருந்து வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்படுகின்றன.
மஹிந்த ராஜபக்ஷ அரசு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இப்படியான வசதியைக் கொடுத்து அவர்களை தம் பக்கம் தக்கவைத்து கொண்டது போல், தற்போதைய அரசும் இப்படியான வசதி வழங்குவது மக்கள் வழங்கிய ஆணையை புறந்தள்ளிவிடும் நடவடிக்கை என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (த)

# போலி வைத்தியர் தம்புள்ளவில் கைது

கொழும்பு, ஏப்.13
தம்புள்ள ஆதார வைத்தியசாலையில் போலி வைத்தியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் வழங்கிய தகவலுக்கு அமைய, அவர் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.
சந்தேகநபர் வைத்தியசாலையின் 3 ஆம் இலக்க விடுதியில் நோயாளர்களை பார்வையிட்டுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.
25 வயதான இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்த போலி அடையாள அட்டையும், சான்றிதழ்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபரிடம் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

# 20 ஐ ஆராய்வதற்கு ஐவர் கொண்ட குழு

## நியமித்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப் 13
தேர்தல் முறைமை மாற்றத்தை 20ஆவது அரசமைப்புத் திருத்தமாகக் கொண்டுவருவதற்காக ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின்போதே ஜனாதிபதி மைத்திரிபால இந்த ஐவரடங்கிய குழுவை நியமித்துள்ளார்.
எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அநுர பிரியதர்ஷன யாப்பா, டிலான் பெரேரா, மஹிந்த சமரசிங்க ஆகிய ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களிக்கவேண்டுமாயின், தேர்தல் முறைமை மாற்றத்தை 20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலமாகக் கொண்டுவரவேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்படி ஐவரடங்கிய குழுவை நியமித்துள்ளார். (த)

# சிறிலங்கன் விமானங்களுக்கு எரிபொருள்கள் வழங்கப்படா

கொழும்பு, ஏப் 13
சிறிலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் மிஹின் லங்கா விமானங்களுக்கு எதிர்வரும் 15 ஆம் திகதியில் இருந்து எரிபொருள் வழங்குவதை இடைநிறுத்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இந்த விமான நிறுவனங்கள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்க வேண்டிய 15 பில்லியன் ரூபா நிலுவைப் பணத்தில் 50 வீதத்தை வழங்கினால், மாத்திரமே மீண்டும் எரிபொருள் விநியோகிக்கப்படும் எனவும் கூட்டுத்தாபனம் கூறியுள்ளது.

செலுத்த வேண்டிய இந்தப் பணத்தைச் செலுத்துமாறு விமான நிறுவனத்துக்கு அறிவித்துள்ளதாக கூட்டுத்தாபனத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மிஹின் லங்கா நிறுவனம் 1.5 பில்லியன் ரூபாவையும், சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் 13.5 பில்லியன் ரூபாவையும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திற்குச் செலுத்த வேண்டியுள்ளதாக கூட்டுத்தாபனம் அறிவித்துள் ளது. (த)


## மரண அறிவித்தல்

### குமாரசாமி நடேசன்

(பிரபல வர்த்தகர் கம்பளை)



காரைநகர் களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் கம்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி நடேசன் நேற்று (12.04. 2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் பாக்கியம் தம்பதியரின் புதல்வரும், காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், இராசபூபதியின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான சரஸ்வதி, சுந்தரமூர்த்தி மற்றும் பூரணம், பத்மநாதன் (கம்பளை), சந்திரமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளானை, களபூமி, காரைநகர்.
077 5884589.

தகவல் :
மனைவி.

## பொதுமன்னிப்புக் காலத்தில் 10 ஆயிரம் பேர் மீள வந்தனர்

கொழும்பு, ஏப்.13

விடுமுறை பெறாது, இராணுவத்தை விட்டு வெளியேறியவர்களுக்காக வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலப்பகுதியினுள் 10 ஆயிரத்து 200 பேர் மீள திரும்பியுள்ளனர் என்று இராணுவம் தெரிவித்துள்ளது.

இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜயவீர இதனை தெரிவித்துள்ளார். இந்த பொது மன்னிப்பு காலம் ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நடைமுறையில் உள்ளது.

அதற்கமைய, நேற்றுமுன்தினம் வரை மீள திரும்பியவர்களில் 7 ஆயிரத்து 500 பேருக்கு விலகல் கடிதம் வழங்க முடிந்துள்ளது என்று இராணுவ ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ற)

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்து பேச்சு

கொழும்பு, ஏப்.13

நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் தாம் மீண்டும் சபாநாயகருடன் பேச்சு நடத்த விருப்பதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொது செயலாளர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சித் தலைவர் பதவியை தங்களுக்கு வழங்குமாறு இலங்கை தமிழரசு கட்சி சபாநாயகருக்கு கடிதம் ஒன்றை வழங்கியுள்ள நிலையிலேயே இந்த தீர்மானத்தை மேற்கொண்டதாக அவர் கூறியுள்ளார். (ற)

## தேசிய அரசொன்றில் இணைய மாட்டோம்

*ஜே.வி.பி. கூறுகின்றது*

கொழும்பு, ஏப்.13

தேசிய அரசொன்றில் அங்கம் வகிக்கும் சாத்தியங்கள் எதுவும் கிடையாது என ஜே.வி.பி. கூறியுள்ளது.

தேசிய அரசில், நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் இணைந்து கொண்டு செயற்பட்டால்,எதிர்க்கட்சி என்று ஒன்று இல்லாமல் போய்விடும் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மே மாதம் முதல் வாரம் வரையில் நாடாளுமன்ற அமர்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே ஜே.வி.பி.யின் நிலைப்பாடாகும். 19ஆம் திருத்தச் சட்டம் போன்ற முற்போக்கான ஓர் சட்டமொன்றைக் கூட நிறைவேற்றிக்கொள்ள முடியாவிட்டால், தற்போதைய நாடாளுமன்றின் ஊடாக வேறும் ஆக்கபூர்வமான யோசனைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாது.– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்குத் தேவையான அரசியல் அமைப்பை புதிய நாடாளுமன்ற மேனும் கொண்டுவர வேண்டும். ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படா விட்டால் எப்போது நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்பதனை ஜனாதிபதி முன்கூட்டியே அறிவிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழி ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (ற)

# வெளிநாடுகளுடனான உறவு வலுப்பெற்றுள்ளது

அரசு கூறுகின்றது

கொழும்பு, ஏப்.13

வெளிநாடுகளுடன் பேணப்பட்டு வந்த உறவுகள் வலுப்பெற்றுள்ளன என்று அரசு அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் விரிசல் நிலையில் காணப்பட்ட பல நாடுகளுடன் புதிய அரசு சாதகமான உறவுகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் ஆட்சிக் காலத்தில் ஊழல் மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம், மோசமான வெளியுறவுக் கொள்கை போன்ற காரணிகளினால் பல நாடுகளுடன் சீரான உறவைப் பேண முடியவில்லை என குறிப்பிட்டுள்ளது.

ஆட்சிப் பொறுப்பை ஏற்று 90 நாள்களிலேயே பல நாடுகளுடன் சுமுகமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடிந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இந்த நிலைமை நீடிக்குமாயின் உலக நாடுகளுடன் மிகச் சிறந்த உறவுகைள பேண முடியும் என வெளிவிவகார அமைச்சு தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளது. (ற)

## குடும்ப உறுப்பினர் எவரும் தேர்தலில் போட்டியிடார்கள்

ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.13

தமது குடும்ப உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிட மாட்டார்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது தமது குடும்ப உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிட மாட்டார்கள். தமது குடும்ப உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிட்டால் நாடாளுமன்ற ஆசனம் கிடைக்கும் சாத்தியம் உண்டு என்ற போதிலும் தேர்தலில் குடும்ப உறுப்பினர்கள் போட்டியிடமாட்டார்கள். – என்று அவர் கூறியுள்ளார்.

உள்நாட்டு அரசியலில் குடும்ப அரசியலை இல்லாமல் செய்ய விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். பிள்ளைகளோ சகோதரர்களோ தேர்தலில் போட்டியிட மாட்டார்கள் எனவும் சிறந்த முன்னுதாரணத்தை வழங்க இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச நிறுவனங்களில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும அவர் குறிப்பிட்டுள்ளார்.(ற)

## ‘19’ஐ எதிர்ப்போருக்கு தேர்தல் வாய்ப்பில்லை

தீர்மானித்துள்ளதாம் சு.க.

கொழும்பு, ஏப்.13

19ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்கத் தவறும் உறுப்பினர்களுக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்பட மாட்டாது என சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

19ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என ஜனாதிபதியும் பிரதமரும் பொது இணக்கப்பாடொன்றுக்கு வந்துள்ளனர். இதன்படி, எதிர்வரும் 20ஆம் திகதி குறித்த உத்தேச யோசனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

அதேவேளை 19ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக வாக்களிக்க சில சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஏனைய தரப்பினருடன் இரகசிய பேச்சு நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## பௌத்த மதக் கோட்பாடுகளை பின்பற்ற வேண்டும் ஞானசாரர்

பீல்ட் மார்ஸல் சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.13

பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் பௌத்த மத கோட்பாடுகளை பின்பற்ற வேண்டுமென ஜனநாயக கட்சி தலைவர் பீல்ட் மார்ஸல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பதவி விலகுமாறு கோரும் அதிகாரம் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை ஊடகத்திடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதுகெலும்பற்ற தலைவர் எனவும் அவர் பதவி விலக வேண்டும் எனவும் ஞானசார தேரர் குறிப்பிட்டிருந்தார்.

ராஜபக்ஷ அரசு போன்று நல்லாட்சி அரசு எவரையும் பழிவாங்காத காரணத்தினாலேயே ஜனாதிபதியை, ஞானசார தேரர் இவ்வாறு விமர்சனம் செய்ய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என அவர் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளாக ஞானசார தேரரும், அவரது அமைப்பினரும் எவ்வாறான நிலைப்பாட்டை பின்பற்றி வருகின்றனர் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் குறித்து ஞான சாரதேரர் எதுவும் குறிப்பிட வில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## களவுகள், கொள்ளைகளை ஒரேநாளில் நிறுத்தமுடியா

பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.13

நாட்டில் இடம்பெற்று வரும் களவு, கொள்ளைகளை ஒரேநாளில் நிறுத்திவிட முடியாது என பிரதி நீதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

மாலம்பே பிரதேசத்தில் நேற்று முன்தினம நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகள் மற்றும் விழுமிய விரோத செயற்பாடுகளை ஒ்ரே நாளில் தடுத்து நிறுத்திவிட முடியாது. நல்லாட்சியுடன் எதிர்காலம் மாற்றமடையும். 100 நாள் திட்டமென்பது மிகவும் கடினமான ஓர் செயற் திட்டமாகும். – என்று அவர் தெரிவித்துள்ளார்.

அழுக்கடைந்த் தேசத்தை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளிலேயே நாம் ஈடுபட்டுள்ளோம். எனக்கு எதிராக சேறு பூசவும் பலர் முயற்சித்து வருகின்றனர். ஓர் நடிகை தற்போது எனக்கு எதிராக குற்றம் சுமத்தி வருகின்றார். இந்தக் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது. மாற வேண்டிய அனைத்தும் நல்லாட்சியுடன் மாற்றமடையும்– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## நாடாளுமன்றத்தில் பூட்டான் பிரதமர்

கொழும்பு, ஏப் 13

இலங்கைக்கு உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டுள்ள பூட்டான் பிரதமர் ஷோரின் டோப்கென் உட்பட தூதுக்குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்திற்கு பயணம் செய்தனர்.

பூட்டான் பிரதமர் உட்பட பிரதிநிதிகள், நாடாளுமன்றத்தில் சபாநாயகரின் விசேட அதிதிகள் அமரும் கலரியில் அமர்ந்து கொண்டதுடன் அவர்களைப் பிரதிச் சபாநாயகர் சந்திம வீரக்கொடி வரவேற்றார்.

அதேவேளை, காலமாகியுள்ள அஸ்கிரிய பீடத்தின் மாநர்யக்கர் உடுகம சிறி புத்தரக்கித்த தேரரின் மரணம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரங்கல் தெரிவிக்கப் பட்டதுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர். (த)

# வெளிநாட்டுக்கு அனுப்பிய பொதி தவறிய பின்னும் ஏமாற்றிய நிறுவனம்

யாழ்.பாவனையாளர் அதிகாரசபை பெற்றுக் கொடுத்தது நட்ட ஈடு

யாழ்ப்பாணம், ஏப். 13

வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட பொதி தொலைந்துவிட்ட போதும் அதனை உரியவருக் குக் கூறாது ஒரு மாதமாக ஏமாற்றி வந்த நிறுவனத்துக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபையினிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதை அடுத்து குறித்த நிறுவனம் உண் மையை ஏற்றுக் கொண்டு, பார்சலுக்குரிய பணத்தையும் அதனை அனுப்புவதற்காக அறவிட்ட பணத்தையும் உரியவருக்கு வழங்குவதாகக் கூறியுள்ளது.

பருத்தித்துறையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: –

அந்த இடத்தை அண்மித்துள்ள தாய் ஒருவர் வெளிநாட்டில் உள்ள தனது மகளுக்குப் பொதி ஒன்றை அனுப்பி வைத் துள்ளார். 31 ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான அந்தப் பொதியை அனுப்புவதற்கு பருத்தித்துறையில் உள்ள பொதி களை அனுப்பும் முகவர் நிறுவ னம் ஒன்று 5 ஆயிரத்து 600 ரூபாவைப் பெற்றுள்ளது. ஆனால் அந்தப் பொதி ஒரு மாதம் கடந்துவிட்ட போதும் வெளிநாட்டிலுள்ள அவ ரது மகளுக் குக் கிடைக்கவில்லை. அது தொடர்பில் பருத்தித்துறை யைச் சேர்ந்த குறித்த தாய் குறித்த நிறுவனத்துக்கு அலைந்து திரிந்துள்ளார். குறித்த நிறுவனத்தினரும் அது தொடர் பான உரிய பதிலை வழங்காது இழுத் தடித்து வந்துள்ளனர்.

அது தொடர்பில் தமது கவனத்துக்குக்கொண்டுவரப்பட்டதாகபாவனையாளர் அதிகார சபையின் யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள இணைப்பாளர் த.வசந்தசேகரன் தெரிவித்தார். அதனை அடுத்து இரண்டு தரப்பினரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். அதன்போது குறித்த பொதி அனுப்பட்ட போதும் அது தொலைந்து விட்டதாக குறித்த நிறுவனத்தினர் உண்மையை ஏற்றுக் கொண்டனர். அதனை அடுத்து அந்த விடயம் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்படவில்லை.

குறித்த பொதியின் பெறுமதிக் குரிய பணத்தையும் அதனை அனுப் புவதற்கென அறவிடப்பட்ட பணத்தையும் சம்பந்தப்பட்ட தாயா ருக்குச் செலுத் துவதாகக் குறித்த நிறுவனம் ஏற்றுக் கொண்டது. அதன்படி முதற்கட்ட மாக 17 ஆயி ரத்து 200 ரூபாவை நிறுவனத் தினர் செலுத்தியுள்ளனர்.

எதிர்வரும் 20 ஆம் திகதி மிகுதிப் பணமான 20 ஆயிரம் ரூபாவைச் செலுத்துவதாக அந்த நிறுவனத்தினர் கூறியுள்ளனர் என்று வசந்த சேகரன் தெரிவித்தார்.

இவ்வாறான சம்பவங்கள் பல இடம் பெறுவதாகக் கூறப்படுகிறது. எனவே அவ் வாறு வெளிநாட்டுக்குப் பொதி அனுப்பி பாதிக்கப்பட்டவர்கள், ஏமாற்றப்பட்டவர்கள், அது போன்ற ஏதாவது நிறுவனத் தினரால் உரிய தீர்வு இன்றி ஏமாற்றப்பட்டு வருபவர்கள் தமக்கு அறிவியுங்கள். 021 321 9000 என்ற இலக்கத்துக்கு நீங்கள் அறிவிப்பதன் மூலமாக இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும். இணக்கப் பாட்டுக்குவராத நிறுவனத்தினருக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு பெற்றுத் தரமுடியும். அதற்கு, நீங்கள் எந்த நிறுவனத்தினூடாக பொதிகள் அனுப்பினாலும் அதனுடன் தொடர்புடைய பற்றுச்சீட்டுக்களைக் கவனமாக வைத்திருங்கள். கட்டாயம் அது உதவும் என்று வசந்தசேகரன் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (வ–4)

# எதிர்வரும் தேர்தலில்போட்டியிடவுள்ளேன்

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.13

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு நடத்தப்படும் பொதுத்தேர்தலில் தான் போட்டியிடப் போவதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பு தனியார் தொலைக் காட்சியொன்றில் இடம்பெற்ற அரசியல் விவாத நிகழ்ச்சி யொன்றிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனது கட்சியான ஜனநாயகக் கட்சியில் தனித்து போட்டியிடப்போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசின் காலத்தில் சரத் பொன்சேகாவின் பதவிகள், பட்டங்கள் என்பன பறிக்கப்பட்டதோடு சிறையில் அடைக்கப்பட்டிருந்த வேளை தாம் அரசியலில் இருந்து ஒருபோதும் இறங்கப்போவதில்லை என்றும் தெரிவித்திருந்தார். (ற)

# செயற்குழுவிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## எஸ்.எம். சந்திரசேன கூறுகின்றார்

கொழும்பு, ஏப்.13

கட்சியின் மத்திய செயற்குழுவிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக முன்னாள் அமைச்சரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் மத்திய செயற்குழு உறுப்பினருமான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.சுதந்திரக் கட்சியின் சில முக்கிய உறுப்பினர்கள் நேற்றைய தினம் மத்திய செயற்குழு விலிருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் பதிவுத் தபாலில் மத்திய செயற்குழுவிலிருந்து நீக்கப்படுவது குறித்து தமக்கு அறிவிக்கப்பட்டதாக சந்திரசேன தெரிவித்துள்ளார். இந்த கடிதத்தில் ஜனாதிபதியும் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன கையொப்பமிட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

என்ன காரணத்திற்காக பதவி விலக்கப்பட்டோம் என்பது பற்றிய விளக்கம் அளிக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். மத்திய செயற்குழுவிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் நிவாரணம் பெற்றுக்கொள்ள நீதிமன்றின் உதவியை நாட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தமையே இவ்வாறு மத்திய செயற்குழுவிலிருந்து நீக்கப்பட்டமைக்கான காரணம் என்பது தமது ஊகம் என அவர் தெரிவித்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நியமித்தால் எந்தவொரு பிரச்சினையும் ஏற்பட வாய்ப்பு கிடையாது என அவர் தெரிவித்துள்ளார். (ற)

---

## ஐக்கியத்தையும்

கொண்டாடும் சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்."–

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தான் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:–

சூரியன் மீன இராசியிலிருந்து மேச இராசிக்கு மாறும் சுபவேளையில் இயற்கையின் புதிய வசந்தகால புத்தெழுச்சியுடன் உதயமாகும் சிங்கள, தமிழ் புத்தாண்டு வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் புதிய நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் கொண்டுவருகிறது.

எமது மக்கள் புத்தாண்டு கொண்டாட்டங்களில் சமய, கலாசார பாரம் பரியங்களுக்கும் சிறந்த சமூகப்பெறுமானங்களுக்கும் முக்கியத் துவமளித்து, எமது வாழ்வை வளப்படுத்திய தொன்மைமிக்க மானிடப்பெறுமானங்களுக்கு மதிப்பளிக்கின்றனர். இப்பெறுமானங்களில் மக்கள் மத்தியில் ஐக்கியம், சமாதானம், பகிர்தல் உணர்வு மற்றும் அனைவர் மீதும் நல்லெண்ணம் கொள்ளுதல் என்பன சிறப்புவாய்ந் தவையாகும்.

இன, மத, சாதி வேறுபாடுகளின்றி நல்லாட்சிக்கான அர்ப்பணத்துடன் எமது நாட்டில் வாழும் எல்லா இனங்களுக்கு மத்தியிலும் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுவரும் முக்கிய முன்னேற்றப்படிகளுக்கு மத்தியில் இவ்வருட புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் நடைபெறுவது விசேடமானதாகும். பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கத்தின் அடிப்படையில், எமது தாய்நாட்டைப் பாதுகாப்பதற்காக ஒரு தேசமாக நாம் எழுந்திருந்தமை வரலாறு நெடுகிலும் எம்மிடமிருந்த மிகப்பெரும் பலம் என்பதை புரிந்துகொள்வதற்கான தருணம் இதுவாகும். அதேபோன்று இன்றும் நாம் இன வேறுபாடுகளின்றி இலங்கையர்களாக ஒன்றிணைந்து புத்தாண்டைக் கொண்டாடுவதும் உறவினர்களை சந்திக்கச் செல்தல் போன்ற புத்தாண்டுப் பாரம் பரியங்களில் பங்குபற்றுவதும் எல்லோர் மத்தியிலும் ஐக்கியத்தையும் சமாதானத்தையும் பலப்படுத்த உதவும்.

எமது தேசத்தின் பிள்ளைகள் எல்லோரும் ஒன்றிணைந்து ஒருமித்த மனதுடனும் ஒரே நோக்குடனும் எமது தாய்நாட்டை சுபீட்சத்தின் பால் இட்டுச் செல்வதற்கு பெறுமதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள ஒரு சந்தர்ப் பத்தில், இந்தத் தேசிய கலாசார பண்டிகை அந்த நோக்கத்தை அடைந்து கொள்ள ஒரு சிறந்த சந்தர்ப்பத்தைத் தருகிறது. இப்புத்தாண்டுக் கொண்டாட்ட மகிழ்ச்சியில் நாம் எல்லோரும் ஐக்கியத்துடன் ஒன்றிணைவோம்.

இப்புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் மதுபானம், புகையிலைப் பாவனையிலிருந்து முற்றாகத் தவிர்ந்துகொள்ளுமாறு உங்களைக் கேட்டு க்கொள்வதோடு, பிறந்திருக்கும் இந்த சிங்கள, தமிழ் புத்தாண்டு எல்லா இலங்கையர்களுக்கும் மகிழ்ச்சியையும் சுபீட்சத்தையும் கொண்டுவர பிரார்த்திக்கின்றேன். (ற–சி)

## பரிந்துரைகளை

பப்லோ டி கிரேய்ப் தெரிவித்துள்ளார்.

நன்றாகக் கையாளப்பட்டால் பிராந்தியத்துக்கும் – உலகத்துக்கும் நிலையான அமைதியை எட்டுவது என்பதில் இலங்கை விவகாரம் ஒரு முன்னுதாரணமாக அமையும் – என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையை ஊக்குவித்தல், நீதி, நல்லிணக்க த்துக்கான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரான பப்லோ டி கிரேய்ப் அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

அவர் தனது பயணத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி முதல் இம்மாதம் 3ஆம் திகதிவரை அவர் இலங்கையில் தங்கியிருந்தார். அதன்போது பல அதிகாரிகளைச் சந்தித்திருந்த அவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளுக்கு நேரடியாகச் சென்றிருந்தார்.

பயணத்தின் முடிவுற்றுள்ள நிலையில் அவர் தனது அவதானங்கள் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இலங்கை விசாரணை ஆணைக் குழுக்கள் குறித்து நம்பிக்கை இடைவெளி உள்ளது. சில ஆணைக் குழுக்கள் பரந்தளவிலான பரிந்துரைகளுடன் பயனுள்ள அறிக்கைகளை வெளியிட்டுள்ளன. வேறு சில அறிக்கைகள் பகிரங்கப்படுத்தப்படவில்லை. போதுமான பரிந்துரைகளைச் செய்வதில் அல்லது செயற்படுத்துவதில் அவை தோல்வி கண்டுள்ளன– என்று பப்லோ குறிப்பிட்டுள்ளார்.

"பாதிக்கப்பட்டோரின் உண்மை, நீதி, பரிகாரம், மீண்டும் ஏற்படாதென்ற உத்தரவாதம் ஆகிய உரிமைகளைப் பாதுகாக்கத் தவறியுள்ளதால் ஆணைக்குழுக்கள் மீது அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது."– என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

"நல்லிணக்கத்துக்கு குறுக்கு வழிகள் இல்லை. மீறல்கள் நடந்துள்ளன. அவற்றை மறந்துவிடும்படி நாம் சாதாரணமாக எதிர்பார்க்க முடியாது."– என்றும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ற)

## மறைமுக

வால் முன்னெடுக்கப்பட்ட பல திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இலங்கைக்கு உதவும் நோக்கம் மட்டுமே சீனாவுக்கு இருந்தது. ஆனால் சில சீனத் திட்டங்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் சீனாவில் நன்மதிப்பைக் கெடுக்கும் வகையில் அமைந்துள்ளன."– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு வார இதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"துறைமுக நகரத் திட்டப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியாவிட்டால் இருததரப்புக்கும் ஒரு சட்ட ரீதியான உடன்பாடு உள்ளது என்ற வகையில் நீதிமன்றம் சென்று தீர்த்துக் கொள்ள முடியும். அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்." – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"இலங்கையின் முன்னாள் ஆட்சியாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவரது அரசுக்கும் சீனா நெருக்கமான நண்பராக இருந்தது என்று சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை. இலங்கையின் நண்பனே சீனா. அங்கு யார் ஆட்சியில் இருக்கின்றார்களோ அவர்களுக்கு நாம் சாத்தியமான வகையில் உதவுகின்றோம். போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் இலங்கையைக் கட்டியெழுப்ப நாம் உதவினோம். அப்போது மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்தார். அவரைத் தெரிவு செய்தது இலங்கை மக்களே.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ அதிகாரத்தில் இருந்திருந்தாலும் கூட சீனா உதவியிருக்கும்."– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## இன ஒற்றுமையை

புத்தாண்டு இலங்கை மக்களின் மிக முக்கியமான கலை, கலாசாரப் பண்டிகையாகும். தொன்றுதொட்டு இயற்கையுடன் ஆன்மிக ரீதியாகப் பின்னிப்பிணைந்து உழவுத் தொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்வதற்குப் பழக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு புத்தாண்டு என்பது தேசிய ஒற்றுமை, சகோதரத்துவம், சமத்துவம், மகிழ்ச்சி, சௌபாக்கியம் என்பவற்றை விருத்திசெய்யும் தேசியத் திருநாள்.

புதியதொரு கலாசாரத்திற்குள் காலடி எடுத்துவைத்துள்ள – நுழைந்துள்ள இச்சந்தர்ப்பத்தில் இன,மத, கட்சி பேதங்களைப் புறந்தள்ளிவிட்டு இலங் கை சமூகம் என்ற உணர்வுடன் வருங்காலத்தை எதிர்பார்த்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் அழுத்தங்கள் மற்றும் கட்டுப்பாட்டு உணர்வுகளில் இருந்து மீண்டு புத்தாண்டைக் கொண்டாடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தமையானது மிக முக்கியமான விடயமாகும்.

## தமிழர்

தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

"2015ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நாம் ஆட்சி மாற்றத்தையும் அரசியல் தீர்வையும் எதிர்பார்த்தோம். நாம் எதிர்பார்த்த மாதிரி நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. அனைவரையும் ஒன்றிணைத்து சமத்துவத்துடனும் சமாதானத்துடனும் நீதியைக் கட்டியெழுப்பக் கூடிய நல்ல சூழல் ஓரளவுக்கு வந்துள்ளது. இதனை நாட்டில் உள்ள அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்."– என்றும் அவர் தெரிவித்தார்.

"இந்த நல்லாட்சி முழுமை பெற வேண்டும் என்றால் வாக்குறுதிகள் அனைத்தையும் அரசு நிறைவேற்றியே ஆகவேண்டும். சில வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றபோதிலும் அரசியல் தீர்வு சம்பந்தமான வாக்குறுதிகளுக்கு கால அவகாசம் வேண்டும் என்பது உண்மைதான். அதற்காக தீர்வு சம்பந்தமான விடயத்தை கிடப்பில் போடுவதை நாம் அனுமதிக்கமாட்டோம்.

இந்த நாட்டில் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களின் அபிலாஷைகள் நிறைவேறவில்லை. அவர்கள் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளினால் ஏமாற்றப்பட்டு வந்தார்கள். இந்நிலைமை இந்த ஆட்சியில் மாறவேண்டும். எதிர்வரும் வருடத்திற்குள் இந்த நிலைமை மாறவேண்டும். மாறக் கூடிய சூழலும் இல்லாமல் இல்லை. இதனை அரசு புரிந்துகொண்டு செயற்படவேண்டும்"– என்றும் அவர் குறிப்பிட்டார்.(ற–சி)

## ஒபாமாவும்

கொள் வதற்கான வாய்ப்புகளுண்டு என்று வொஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் தகவல் அனுப்பியுள்ளது. மேலதிகமாக அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூட இலங்கை வருவதற்கான வாய்ப்புகள் உண்டு என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது."– என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள் ளார்.

"இதற்குக் காரணம் கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தலை அடுத்து ஏற்பட்ட ஆட்சி மாற்றம் மட்டுமல்ல."– என்று குறிப்பிட்டுள்ள அமைச்சர், "அரசியலமைப்பு மாற்றங்களுடன் ஜனநாயகம் திரும்பியமை, நல்லாட்சி, திட்டமிடப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல் ஆகிய அமெரிக்க உயர் பிரமுகர்களிடையே இலங்கைக்கான பயணங்களை ஊக்குவிப்பதில் முக்கியமான பங்காற்றியுள்ளன."– என்றும் கூறியுள்ளார். (ற)

## பயங்கரவாத

"ஏனைய விவகாரங்கள் எல்லாம் அதற்குப் பின்னர்தான். சில மனித உரிமை அமைப்புகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று கோரி வருகின்றன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் சில விதிகள் மனித உரிமைகள் பற்றிய தரநியமங்களுக்கு ஏற்ற வாறு இல்லை என்றும், அடிப்படை உரிமை மீறல்களை ஊக்குவிக்கின்றன என்றும் அவை சுட்டிக்காட்டுகின்றன."– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## ஹைஏஸ்

வர பஸ்ஸின் பின்பகுதியூடாக வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் இந்த விபத்து நடந்துள்ளது. கிளிநொச்சிக்கு சென்று கொண்டிருந்த ஹைஏஸ் வான் மோதி தூக்கி வீசியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

ஹைஏஸ் வாகன சாரதியை கைது செய்த கொடிகாமம் பொலி ஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். உயிரிழந் தவரின் சடலம் சாவகச்சேரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ற–9,122)

## ஊடகங்களுக்கு

கலந்துரையாடலில் செய்தி சேகரிப்புக்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. ஆளுநர் அலுவலகத்தால், வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே ஊடகவியலாளர்களை கூட்டத்தி னுள் அனுமதிக்கவில்லை என்று யாழ். மாவட்டச் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனிடம் கேட்ட போது, தாமோ ஆளுநரோ அவ்வாறு எந்த அறிவுறுத்தலையும் வழங்கவில்லை என்றும், யாழ்.மாவட்டச் செயலகத்தினரே கூட்டத்தை ஒழுங்கமைத்தனர் என்று குறிப்பிட்டனர்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனிடம் இதுபற்றிக் கேட்ட போது, இந்தக் கூட்டத்தின் முடிவுகள்தான் ஊடகங்களுக்குத் தேவை என்பதாலேயே அனுமதிக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

ஆனால் முதலமைச்சர் இந்தக் கூட்டத்தில் சகலரையும் கலந்து கொள்ளுமாறு அழைத்திருந்தாரே என்று கேட்ட போது, "இது முதலமைச்சர் கூட்டிய கூட்டமல்ல. ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைய கூட்டப்பட்ட கூட்டம் இது. மக்களுக்கு வெவ்வேறு தகவல்கள் செல்வதால் அவர்கள் குழம்புகின்றனர். முடிவு வந்தன் பின்னர் ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தப்படும்"– என்றார். (ற–5)

## இறுதி

"கூட்டத்தில், நிபுணர் குழுவினர் பல்துறை சார்ந்தவர்கள் கலந்து கொண்டார்கள். குடிதண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் போராட்டங்களில் ஈடுபட்டவர்களும் கலந்து கொண்டனர். பிரச்சினைகள் பற்றி பேசிக் கொண்டோம். அதன் மூலம், தவறான புரிந்துணர்வு காரணமாகவே இந்தப் பிரச்சினை அணுகப்பட்டமையை அறிய முடிந்தது."– என்று முதலமைச்சர் கூறினார்.

"சாதாரண கண்ணில் பார்க்கும் போது, எண்ணெய் – கிறிஸ் என்பன இருக்கின்றன. ஆனால் அவற்றில் உயிரை பாதிக்கக் கூடிய ஐதரோக் காபன்கள் இல்லை. நீரில் மாசு இருக்கின்றது. இது தொடர்பிலான இறுதி அறிக்கை வரும் வரையில், மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் தொடரும். தற்போதுள்ள நிபுணர் குழுவுக்கு மேலதிகமாக நிபுணர்களையும் இணைத்துக்கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை விட, வடக்கு மாகாண குடிதண்ணீர் பிரச்சினை தொடர்பில் நிபுணர்களின் ஆலோசனைகளையும் கேட்டுள்ளோம்."– என்றும் முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(ற–5)

# தமிழர் வாழ்வியல் உயர வேண்டும்

## உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் டென்மார்க் கிளைத் தலைவர் தர்மகுலசிங்கம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப்.13
போர் மற்றும் இடர்களால் அழிந்து, நலிந்து, கலாசார பண்பாடுகளை இழந்திருக்கும் தமிழ் சமூகத்தின் வாழ்க்கை மற்றும் பொருளாதாரம் உயர்த் தப்பட வேண்டும். அப்போது தான் தமிழ் வாழும். இதற்குக் கடின உழைப்பும் கல்வியாளர்களின் ஆலோசனையும் தேவை. இதனை ஏற்படுத்தத்தான் நான் இலங்கைக்கு வந்தேன் என்று தெரிவித்தார் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் டென் மார்க் கிளையின் தலைவரும் டென்மார்க் தமிழ்ச் சங்கத்தின் தலைவருமான நெல்லியடி கர வெட் டியைச் சேர்ந்த தறுமன் தர்மகுலசிங்கம்.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்க உறுப்பினர்கள் மற்றும் இலக் கிய ஆர்வலர்களுக்குமான சந்திப்பு வெள்ளிக்கிழமை மாலை மட்டக்களப்பு கலை இலக்கிய பேரவையின் முக்கியஸ்தகர் த. ஈஸ்வரராஜாவின் வதிவிடத் தில் நடைபெற்றது. பேராசிரியர் எஸ். மௌனகுருவின் தலை மையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரி வித்ததாவது:

'மகளிர் விவகார மற்றும் சிறு வர் அபிவிருத்தி அமைச்சின் இணைப்புச் செயலாளர் எம். எஸ்.சதிஸ்குமாரின் 5 நூல்க ளின் வெளியீடு கடந்த 31 ஆம் திகதி பண்டார நாயாக்கா சர்வ தேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றபோது, அதில் பங்கு கொள்வதற்காக இலங்கை வந் தேன். அதைத் தொடர்ந்து மட்டக் களப்புக்கு வந்துள்ளேன். டென் மார்க்கில் உள்ள சமூக ஜனநா யகக் கட்சியில் இணைந்து பணிபுரிகின்றேன். அரசியல் இல்லாமல் வாழ முடியாது. தமிழர்கள் தார்மீக ஜனநாயகப் பண்புகளோடு வாழவேண்டு மாக இருந்தால் சமூக, அரசியல், பொருளாதார சிந்தனை இல் லாமல் தமிழை வளர்க்க முடி யாது. 1967இல் மட்டக்களப்பில் தமிழ்சங்கம் உருவாக்கப்பட்டும். அதற்கென ஒரு கட்டடம் இல்லா மல் உள்ளது கவலையே. உல கில் புலிகள் பதிவு செய்யப்பட் டது டென்மார்க்கில் மட்டும் தான். 1983-1985 வரையான காலப் பகுதியில் மட்டும் தான் இலங் கையிலிருந்து புலம்பெயர்ந்து தமிழர்கள் வந்தார்கள். இலக் கியத்தை வளர்ப்பதற்கு மொழி ஒரு ஊடகமாகும். புலம்பெயர்ந் தவர்களின் வீடுகளில் தமிழ் இருக்க வேண்டும் ஏன் இலங் கையில் கூட படித்த கல்வியிய லாளர்களின் வீடுகளில் கூட இந்தியாவில் உள்ளது போல் ஆங்கிலம் கலந்த தமிழைப் பேசுகின்றார்கள். புலம் பெயர் தமிழர்களின் பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாமல் உள்ளது பெரும் சாபக்கேடு. இலக்கியச் செம்மல் எஸ். பொன்னுத்துரை யின் (எஸ்போ)இறுதிச்சடங்கு ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற போது, ஆங்கிலத்தில் நினைவஞ் சலி உரை ஆற்றியதைக்காண முடிந்தது. எஸ்போவுக்கும் எனக் கும் உள்ள அனுபவங்களை தமி ழில் நூலாக வெளியிடவுள் ளேன். சமூகம், அரசியல், இலக் கியம் பற்றிப் பேசுகின்றோம் புலம் பெயர் நாடுகளில் உள்ள அடுத்த தலைமைத்துவத்துக்கு தமிழ் ஊட்டப்பட வேண்டும்' -என்றார். (வ)

## வடக்கைப்போல் கிழக்கும் சாதனை படைக்க வேண்டும்

### மேலதிகக் கல்விப் பணிப்பாளர் கூறுகிறார்

மட்டக்களப்பு, ஏப்.13
வட மாகாணம் கல்வியில் பல சாதனைகளைப் படைத்துக் கொண் டிருக்கின்றது. அந்த நிலைமை கிழக்கு மாகாணத்திலும் வலுப் பெறவேண்டும் என்று கிழக்கு மாகாண மேலதிகக் கல்விப் பணிப் பாளர் எஸ்.மனோகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, குருக்கள்மடம் ஸ்ரீகிருஷ்ணன் கோவில் சமூக மேம்பாட்டு மையம் நடத்திய விருதளிப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மட். குருக்கள்மடம் கலைவாணி மகாவித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்று கையிலே அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில்:

'கல்விப்பணி செய்யப் பிறந்தவர்கள் பாக்கியவான்கள். ஆனால், அந்தப்பணியைச் செய்பவர்கள் அர்ப்பணிப்புடன் செய்ய வேண் டும். எமது பிரதேசத்திலுள்ள பெற்றோர், தங்களது பிள்ளைகளின் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் காட்டும் அக்கறை கல்விப் பொதுத்தர சாதாரணதரப் பரீட்சையிலும் உயர்தரப் பரீட்சையிலும், காட்டுவதில்லை. இதில் பெற்றோர் விழிப்புடன் இருக்க வேண்டும். எதிர்காலத்தில் மாணவர்கள், வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் கற்கவேண்டும். இவற்றை விடவும் தொழில்நுட்பக் கல்லூரியிலும் பல பாடவிதானங்களைக் கற்று முன்னேறலாம். 2014ஆம் ஆண்டு நடைபெற்றுமுடிந்த கல்விப் பொது சாதார ணதரப் பரீட்சையில் 48 சதவீதமான மாணவர்கள் இலங்கை யில் கணித பாடத்தில் சித்திபெறத் தவறியிருக்கின்றார்கள். இது தான் இன்றைய கல்வியின் நிலைமை. இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களில் மாணவர்களைச் சித்தியடைய வைக்க வேண்டும் என்ற துரித நடவடிக்கையை மத்திய அரசிலிருக்கின்ற கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளதும்-என்றார். (வ)

## அழிவடையும் சதுப்பு நிலத் தாவரங்கள் குறித்து ஆய்வு



மட்டக்களப்பு, ஏப்.13
இலங்கையின் 2ஆவது மிகப் பெரிய வாவியான மட்டக்களப்பு வாவியோரங்களில் காணப் படும் சதுப்புநில தாவரங்கள் அழிந்து வருகின்றன. 350 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இவ் வாவியோரங்களில் காணப்பட்ட பெரும் எண்ணிக் கையிலான சதுப்புநில கண்டல் தாவரங்கள் அழிவடைந்துள் ளதாக சுற்றாடல் அமைச்சின் கரையோரம் பேணல் திணைக் கள மட்டக்களப்பு மாவட்ட பணிப் பாளர் கே.கோகுலதீபன் தெரி வித்தார்.

குறித்த சதுப்பு நிலத் தாவரங்கள் அழிவடைவதால் வாவியில் மீனினங்கள் அழிந்து வருகின் றன. இந்தத்தாவரங்களுக்குள் ளேயே அதிகமான மீனினங்கள் சினைப்படுத்தல் செய்து இனப் பெருக்கத்தில் ஈடுபட்டு வந்தன. அவை மனிதர்களின் மண்ணை மாசுபடுத்தும் நடவடிக்கைக ளினால் பல வகையான மீனி னங்கள் அழிவடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இதனால் இந்தத்தாவரங்கள் அழிவடைவதற்கான காரணங் களைக் கண்டறியும் மண் ஆய்வுகளை சுவீடன் பல்கலைக் கழக மாணவர்கள் மேற்கொண் டுள்ளனர்.

சதுப்பு நிலத் தாவரங்கள் அதி களவில் அழிவடைந்துள்ள கொக்கடிச்சோலை பகுதியில் குறித்த சதுப்புநில தாவரங்கள் அழிவடைந்த மண் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. சுவீடன் ஜொதன்பேக் பல் கலைக் கழக புவியியல் மற்றும் மண்ணியல் விஞ்ஞான பிரிவு மாணவிகளான அஸட்ரிட் ட்லெட்மேன் மற்றும் மஜா ஜொன் சன் ஆகியோர் கிழக்கு பல்கலைக் கழக விஞ்ஞான பிரிவு மாண வர்களுடன் இணைந்து இந்த ஆய்வு நடவடிக்கையை மேற் கொண் டுள்ளனர். (வ)

## வாழைக்குலை திருட்டு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப் .13
புன்னாலைக் கட்டுவன் வடக்கு பகுதியில் உள்ள வாழைத் தோட்டங்களில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வாழைக்குலைகளைக் கள வாடிச் செல்வதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த ஒரு வார காலமாக இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக நள்ளி ரவு வேளைகளில் வாழைத் தோட்டங்களுக்குச் செல்லும் திருடர்கள் அங்கு கதலி, இதரை போன்ற வாழைக் குலைகளை வெட்டிகளவாடிச் செல்கின்றனர். இதனைவிட நவக்கிரி, ஈவினை, கோப்பாய் இராச வீதி, சிறுப் பிட்டி போன்ற பகுதிகளில் உள்ள வாழைத் தோட்டங்களிலும் திருடர்கள் வாழைக்குலைகளை திருடிச் செல்வதாக செய்கை யாளர்கள் தெரிவித்தனர்.

தற்போது வாழைப் பழத்தின் விலை திடீரென சூடு பிடித்துள் ளது. ஆலய மகோற்சவங்கள், சுபகாரியங்கள் மற்றும் நிகழ் வுகள் இடம்பெறும் மாதம் என் பதால் வாழைப்பழத்தின் பாவனை அதிகரித்துள்ளது.

இதனால் திருடர்கள் வாழைத் தோட்டங்களையும் விட்டு வைக் காது அவற்றிலும் தமது கைவரிசையைக் காட்டி வரு கின்றனர். (வ-17)



*வவுனியா நெடுங்கேணிப்பகுதியில் அரசின் 100 நாள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள 'நாவலர்' முன்பள்ளிக்கான அடிக்கல் நடும் நிகழ்வில் அடிக்கல்லை வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் நட்டார். (வ-402)*

## கட்டாக்காலிகளால் தொல்லை; இரவிலும் காவல்

தென்மராட்சி,ஏப்.13
கட்டாக்காலி மாடுகளால் இரவு வேளையில் பயிர்கள் நாசமாக் கப்படுவதால் மாடுகளைத் துரத்த இரவுக் காவல் மேற் கொள்ள வேண்டிய அவல நிலை தோட்டங்களில் பயிர் களை வைத்துள்ளவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

பெருங்குளம், கிராம்புவில் பகுதியில் காலபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட 200 இற்கும் மேற்பட்ட ஏக்கர் வயல்களில் சிறுதானியப் பயிர் களும் மரக்கறிப் பயிர்களும் பயிரிடப்பட்டன. அவை தற்போது அறுவடையை அண்மித்த நிலையில், இரவு வேளை களில் தினமும் கூட்டமாக வரும் 15 இற்கும் மேற்பட்ட மாடுகள் தோட்டங்களுக்குள் புகுந்து பயிர்களை அழித்து வருகின் றன. இதனால் பெரும் பயிரழிவு தினமும் ஏற்பட்டு வருகிறது.

மாடுகளைக் கட்டி வளர்க்கு மாறு பல தடவைகள் அறிவிக் கப்பட்டுள்ளபோதிலும் சாவகச் சேரி நகர் மற்றும் நுணாவில் கிழக்கு ஆகிய பகுதிகளைச்சேர்ந்த மாடுகள் இரவு 10 மணிக்குப் பின்னர் தோட்டங்களுக்குள் புகுந்து பயிர்களை அழித்து விட்டு அதிகாலை 5 மணியள வில் வெளியேறி விடுகின்றன.

அந்தப்பகுதி கமக்கார அமைப் புகள் மற்றும் சாவகச்சேரி நகரசபை ஆகியவற்றுக்கு முறை யிட்டும் பயன் கிடைக்காததால் 200 இற்கும் மேற்பட்ட விவசாயி கள் சுழற்சி முறையில் வீதிக ளில் காத்திருந்து மாடுகள் வரா மல் தடுத்து வருவதாகத் தெரி விக்கப்பட்டது.

தோட்டங்களுக்குள் இரவுவேளை யில் மாடுகள் சென்றால் துரத்த முடியாது என்பதால் வீதியோ ரங்களில் காத்திருந்து பாது காத்து வருகின்றனர். (வ-9)

# சென்றலைட்ஸ், கே.கே.எஸ் கிண்ணத்தைக் கொண்டுசென்றன

யாழ்ப்பாணம்.ஏப். 13

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்பட்ட தொடர்களில் ஆண்கள் பிரிவில் சென்றலைட்ஸ் கழகமும், பெண்கள் பிரிவில் கே.கே.எஸ் கழகமும் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றின.

யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கத்தினால் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் இரு பாலருக்குமாக நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் மின் ஒளியில் இடம்பெற்றது.

**ஆண்களுக்கான இறுதியாட்டம்**

இந்தத்தொடரில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 46:45 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது. ஆட்டநாயகனாக சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் சசிந்திரனும் தொடர்நாயகனாக ஜொலிஸ்ரார் வீரன் சயந்தனும் தெரிவானார்கள்.

**பெண்களுக்கான இறுதியாட்டம்**

பெண்களுக்கான இறுதியாட்டததில் கே.கே.எஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் கே.கே.எஸ் விளையாட்டுக்கழக அணி 45:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. பெண்களுக்கான தொடரின் ஆட்ட நாயகியாக கே.கே.எஸ் விளையாட்டுக் கழகத்தின் கமலினியும், தொடர்நாயகியாக அதே கழகத்தைச் சேர்ந்த துசாராவும் தெரிவானார்கள்.

(ரி-23)





# தேறுவார்களா தேசியத்தெரிவில்

யாழ்ப்பாணம் ஏப். 13

வலைப்பந்தாட்ட தேசிய அணிக்கான இரண்டாம் கட்ட பரிசீலிப்புக்காக 12 வீராங்கனைகள் யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆஸ்திரேலியாவின் சிட்னி நடைபெறவிருக்கும் உலகக்கிண்ண வலைப் பந்தாட்டத் தொடரில் பங்கு பற்றுவதற்காக இலங்கை வலைப்பந்தாட்ட அணியைத் தெரிவு செய்யும் முகமாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வடமாகாணத்திலுள்ள வீராங்கனைகளை அடையாளம் காணும் நிகழ்வில் இரண்டாம் கட்ட பரிசீலிப்புக்காக தெரிவு செய்யப்பட்ட 12வீராங்கனைகளின் விவரம் வருமாறு.

கேதுஷா சர்வதன் (உடுவில் பிரதேச செயலகம்), சக்தி சிவராசா (யாழ். பி.செ), கஜானனி கேதீஸ்வரன் (யாழ். பிரதேச செயலகம்), துஸ்யந்தி குணசீலன் (நல்லூர் பி. செ), ஜீவிதா பரமானந்தராஜா (உடுவில் பிரதேச செயலகம்) ஜாமினி அருந்தவராஜா (சாவகச்சேரி பிரதேச செயலகம்), அபித்தா தருமராஜா (தெல்லிப் பழை பிரதேச செயலகம்), கீர்த்திகா செல்வராசா (தெல்லிப்பழை பிரதேச செயலகம்), திவ்வியா சண்முகநாதன் (நல்லூர் பிரதேச செயலகம்), சுபீசனா ஜெயராஜா (உடுவில் பிரதேச செயலகம்), சாரங்கா ராஜரட்ணம் (தெல்லிப்பளை பிரதேச செயலகம்), ஸ்ரீசக்தி சந்திரசோதி (சங்கானை பிரதேச செயலகம்).

இவர்களுக்கான இரண்டாம் கட்டத் தெரிவு எதிர்வரும் 25 ஆம் 26 ஆம் திகதிகளில் கொழும்பு சென். ஜோசப் உள்ளக விளையாட்;டரங்கில் நடைபெறும்.

இலங்கை வலைப்பந்தாட்டச் சங்க இடைக்கால நிர்வாகக் குழுவின் செயலானரும் முன்னாள் இலங்கை வலைப்பந்தாட்ட அணியின் தலைவருமாகிய திருமதி ஜெயந்தி சோமசேகரம் டி செல்வா மற்றும் றோகினி பெரேரா, திசாங்கனி கொடித்துவக்கு ஆகியோர் உள்ளடங்கிய தெரிவுக் குழுவால் இந்தத் தெரிவு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி-86-23)

# கைமாறியது கிண்ணம்

## வீரகத்தி மகா வித்தியாலயம் அசத்தல்



கரணவாய் ஏப்.13

பரபரப்பாக இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான ஆண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் பலம் மிக்க தொடர்சம்பியனை வீழ்த்தி இவ்வருட வலய சம்பியனாகியது தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம்.

வடமராட்சி வலயப்பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. 17 வயதுப் பிரிவினருக்கான இந்த ஆட்டத்தில் பல வருடங்களாக சம்பியனாக வலம்வந்த உடுப்பிட்டி அ.மி. கல்லூரியும் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும் மோதின. 3 செற்கள் இந்த இறுதியாட்டத்தில் பலத்தபோராட்டத்தின் மத்தியில் முதலாவது செற்றில் 26:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம் முன்னிலை வகித்தது.

இரண்டாவது செற்றிலும் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் ஆதிக்கம் தொடர் 25:20 என்ற அடிப்படையில் இரண்டாவது செற்றிலும் முன்னிலைவகித்து மூன்றாவது செற்றுக்கு வேலைவைக்காமல் 2:0 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்று இவ்வருட வலயச்சம்பியன் கிண்ணத்தை தட்டிச் சென்றது தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம். இப்பிரிவில் மூன்றாமிடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பெற்றுக் கொண்டது.

(ரி-108)

# கிண்ணங்களை கைப்பற்றின இந்து மகளிர், மெதடிஸ்த

கரணவாய் ஏப். 13

வடமராட்சிவலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்ட தொடர்களில் 15 வயதுப் பிரிவில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும், 17வயது மற்றும் 19 வய்துப் பிரிவுகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியும் வெற்றிபெற்று வலயச்சம்பியனாகின.

**15 வயதுப்பிரிவு**

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டத் தொடர்கள் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றன. இதில் 15 வயதுப் பிரிவினருக்கான இறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி மோதியது. இறுதிவரை விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தின் முதல்பாதியில் இரு அணியினரும் மாறி மாறி புள்ளிகளைக் குவிக்க மைதானம் அமர்க்களமாகியது. முதல் பாதியில் இரு அணியும் தலா 4 புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

ஆட்டத்தின் இரண்டாம் பாதியிலும் தலா 3 புள்ளிகளைப் பெற்று இரு அணிகளும் சமனான ஆதிக்கம் செலுத்த ஆட்டம் சமநிலையானது. இதனை அடுத்து வெற்றியாளரைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட மேலதிக நேரத்தில் அசத்தலாக விளையாடிய வட இந்து மகளிர் கல்லூரி தொடர்ச்சியாக 4 புள்ளிகளைப்பெற்று 11:7 என்ற அடிப்படையில் வலயச் சம்பியனாகியது. இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை நெல்லியடி மத்திய கல்லூரி அணி பெற்றது.

**17வயதுப்பிரிவு**

இந்தத் தொடரில் 17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி மோதியது. இந்த ஆட்டத்தில் முழுமையாக ஆதிக்கம் செலுத்திய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி 24:09 என்ற கோல்கள் அடிப்படையில் இலகுவாக வென்று வலயச் சம்பியனாகியது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் விளையாடிய உடுப்பிட்டி மகளிர் கல்லூரி தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தை 15 :10 கோல்கள் என்ற அடிப்படையில் வென்று மூன்றாமிடத்தைப்பெற்றது.

**19 வயதுப்பிரிவு**

அடுத்து இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியை எதிர்த்து வட இந்து மகளிர் கல்லூரி மோதியது. ஆரம்பம் முதல் அமர்க்களமாக இருந்த இந்த ஆட்டத்தில் 29:24 என்ற அடிப்படையில் வென்று சம்பியனாகியது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி.

இப்பிரிவில் மூன்றாமிடத்தை வல்வை மகளிர் கல்லூரி அணி பெற்றது. (ரி-108)

# ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தியது சென்.மேரிஸ்

யாழ்ப்பாணம் ஏப். 13

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் யாழ்.உதைபந்தாட்டலீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கிடையில்நடத்தும்ஏவ்.ஏகிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடர் சமீபகாலமாக நடைபெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் நேற்று முன்தினம் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலாங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி முழுமையாக ஆதிக்கம் செலுத்தி 2:0 என்ற கோல் கணக்கில் ஆட்டத்தை வழித்துத் துடைத்தது. (ரி-23)

# தேவிபுரம், செம்மலை, புதுக்குடியிருப்பு மத்தி முல்லைக்கிண்ணங்களை சொந்தமாக்கின

மாங்குளம் ஏப். 13

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டத் தொடர் நேற்று முன்தினம் சனிக்கிழமை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்தத் தொடர்களில் 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் தேவிபுரம் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து வள்ளிபுரம் வித்தியாலய அணி மோதியது. இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதல் தமது அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய தேவிபுரம் அ.த.க. பாடசாலை அணியினர் 14:6 என வெற்றி பெற்று சம்பியனாகியது. 3ஆம் இடத்தை செம்மலை மகா வித்தியால அணியும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

17வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் செம்மலை மகா வித்தியால அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின. இருந்தபோதும் ஆட்ட நேர முடிவில் செம்மலை மகா வித்தியால அணி 14:13 என்ற அடிப்படையில் ஒரு புள்ளி வித்தியாசத்தில்வெற்றிபெற்று சம்பியனாகியது. 3ஆம் இடத்தை தேவிபுரம் அ.த.க. பாடசாலை அணி பெற்றுக் கொண்டது.

19 வயதுப்பிரிவின் இறுதியாட்டத்தில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வள்ளிபுரம் வித்தியாலய அணி மோதியது. இதில் ஆட்டம் ஆரம்பம் முதல் தமது அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியினர் 15:08 என்ற புள்ளிகள்வெற்றிபெற்றுசம்பியனாகியது. 3ஆம் இடத்தை வித்தியானந்தாக்கல்லூரிபெற்றுக்கொண்டது (ரி-422)




# ஹைதராபாத் இன்று கதிகலங்குமாம்



ஐ.பி.எல் தொடரின் இன்றை லீக் ஆட்டத்தில் பெங்களூர் அணியும் ஹைதரபாத் அணியும் பலப் பரீட்சை செய்கின்றன. ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பதாகவே இந்த ஆட்டத்தில் பெங்களூர்தான் வெற்றிபெறும் என்று சமூக வலைத் தளங்களில் முடிவெடுத்து விட்டார்கள் ரசிகர்கள்.

ஒருவகையில் பார்த்தால் ரசிகர்களின் இந்த முடிவு சரியானதாகவே உள்ளது. ஏனெனில் எப்படிப்பார்த்தாலும் ஹைதராபாத்தைவிட பலமான அணியாகவே உள்ளது பெங்களூர். பெங்களூரின் துடுப்பாட்டத்தைப் பொறுத்த மட்டில் கெயில், ஹோக்லி, வில்லியர்ஸ், சமி, டினேஸ் கார்த்திக், மன்டீப் சிங் என்று பெரும் அதிரடிப்பட்டாளமே உண்டு. இவர்களில் கெயிலும் வில்லியர்ஸும் தற்போது மிகவும் போர்மில் இருப்பது ஹைதராபாத்தின் கெட்டகாலம் என்றே சொல்ல வேண்டும். ஆனால் ஹைதராபாத்தில் அதிரடி வீரர்கள் என்றால் அது தவானும், வோர்ணரும் நுவான் ஓயாவும்தான். இவர்களைவிட சற்று நிதானிக்கக் கூடியவர்களாக வில்லியம்சனும் போபாராவும் உள்ளனர்.

பெங்களூரின் பந்துவீச்சு வரிசையும் வரூன் ஆரோன், சமி, அப்பொட்,பட்டேல் என்று திறமையான வீரர்களை கொண்டு பலமாக உள்ளது. ஹைதராபாத்தின் பந்துவீச்சு வரிசையையும் பலமற்ற வரிசை என்று சொல்லிவிட முடியாது. புவனேஸ்குமார், போல்ட், இசாந்சர்மா என்று சவால்விடக்கூடிய பந்துவீச்சு வரிசை உள்ளது. ஆனாலும் இந்தப் பந்துவீச்சால் பெங்களூரின் அதிரடிப் பட்டாளத்தை கட்டுப்படுத்த முடியாதென்பதும் வெளிப்படை. இவை அனைத்தையும் வைத்துப் பார்த்தால் சமூக வலைத்தளத்தில் ரசிகர்களின் முடிவு சரியானதாகவே படுகின்றது. (ரி)

# முடிவுக்கு வந்தது வெற்றிப்பயணம்



ஐ.பி.எல் தொடர்களில் தொடர்ச்சியாக பத்து வெற்றிகளைக் குவித்த கொல்கத்தாவின் வெற்றிப்பயணம் பெங்களூரிடம் அடைந்த தோல்வியுடன் நிறைவுக்கு வந்துள்ளது.

நடப்பு ஐ.பி.எல் தொடரிலும் கடந்த ஐ.பி.எல். தொடரிலுமாக கொல்கத்தா அணி தொடர்ச்சியாக பத்து வெற்றிகளை குவித்து வந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் நடை பெற்ற லீக் ஆட்டமொன்றில் கொல்கத்தாவும் பெங்களூரும் பலப் பரீட்சை செய்தன. இந்த ஆட்டத்தில் கொல்கத்தா 178 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்த ஒரு கட்டத்தில் வெற்றி பெறும் என்ற நிலையில் இருந்த போதிலும் கெயில் மற்றும் வில்லியர்ஸின் அபார ஆட்டத்தினால் பரிதாபமாக தோல்வியடைந்து தனது வெற்றிப் பயணத்தை நிறுத்திக் கொண்டது. இந்த ஆட்டத்தில் கெயில் 56 பந்துகளில் 96 ஓட்டங்களை குவித்தமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# சும்மா சொல்லக்கூடாது சுப்பர் பிடி



ராஜஸ்தான் ரோயல்ஸ் எதிர் பஞ்சாப் அணிகளுக்கிடையே நடைபெற்ற லீக் ஆட்டத்தில் பெய்லியின் பிடியெடுப்பு ஐ.பி.எல் வரலாற்றில் சிறந்த பிடியெடுப்பாக பதியப்பட்டுள்ளது.

பஞ்சாப் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த பொழுது பெய்லி பந்தை சிக்சருக்கு தூக்கியடித்தபோது, பவுண்டரி எல்லைக்கு ஓடிவந்த சவுத்தி, அந்த பந்தை லாவகமாக தட்டிவிட்டார். பந்து தட்டிவிடப்பட்டு அந்தரத்தில் நின்றபோது தனது வலது காலை பவுண்டரி எல்லைக்கு அப்பால் வைத்தார்: ஆனால், தட்டிவிடப்பட்ட பந்தை, மற்றொரு வீரரான கருண் நாயர், ஒற்றைக்கையால், பிடித்து அசத்தினார். இத்தனைக்கும், கருண் நாயர் அந்த பந்து தன்னிடம் வரும் என்று எதிர்பார்க்கவில்லை. ஒரு நிமிடம் திடுக்கிட்ட நாயர், சுதாகரித்துக் கொண்டு ஒரு கையால் அந்த பிடியெடுப்பை நிகழ்த்தினார். பவுண்டரி எல்லையில் டிம் சவுத்தி சமயோசிதமாக பந்தை தட்டியதும், அதேபோல கருண் நாயரும் சமயோசிதமாக பந்தை பிடித்ததும் அருமையான காட்சிகளாக இருந்தன. இந்தப் பிடியெடுப்பு உலகத்தரம்வாய்ந்த பிடியெடுப்பாக தற்பொழுது பேசப்பட்டு வருகிறது. (ரி)

# கங்குலியின் புதிய அவதாரம்

இந்திய அணியின் புதிய பயிற்சியாளராக முன்னாள் தலைவர் கங்குலி நியமிக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த 2011 முதல் இந்திய அணி பயிற்சியாளராக இருப்பவர் சிம்பாப்வேயின் டங்கன் பிளட்சர். இவரது பயிற்சியில் இந்திய அணி 2013இல் மினி உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியது. பிளட்சரின் ஒப்பந்தம் முடியவுள்ள நிலையில் இதனால், விரைவில் இந்திய அணிக்கு புதிய பயிற்சியாளரை ஏற்பாடுகள் நடக்கின்றன.

இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலியை பயிற்சியாளராக்க, இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் டால்மியா மிகவும் விரும்புவதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து பி.சி.சி.ஐ., நிர்வாகி ஒருவர் தெரிவிக்கையில்– இந்திய அணியின் போராடும் திறனை ரவி சாஸ்திரி அதிகரித்தார். இவருக்கு பயிற்சியாளர் பதவி மீது விருப்பம் இல்லை. தனக்குப் பதில் பாரத் அருண் பெயரை சிபாரிசு செய்தார். ஆனால், டால்மியா, கங்குலி மீது ஆர்வமாக உள்ளார். இதனால், கங்குலி, பயிற்சியாளராக அதிக வாய்ப்புள்ளது– என்றார். (ரி)



# ரெய்னாவிடம் இருந்து கம்பீரிடம்



ஐ.பி.எல் தொடர்களில் அதிக அரைச்சதம் அடித்த வீரர் என்ற சாதனைக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார் கம்பீர்.

ஐ.பி.எல் தொடர்களில் அதிக அரைச்சதம் விளாசியவர் என்ற பெருமைக்குச் சொந்தக்காரராக இருந்த ரெய்னாவை நடப்பு ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தாவின் முதலாவது ஆட்டத்தில் அரைச்சதம் அடித்து சமன்செய்திருந்தார் கம்பீர். இந்த நிலையில் கொல்கத்தாவின் இரண்டாவது ஆட்டத்திலும் அரைச்சதம் அடித்து ஐ.பி.எல் தொடரில் அதிக அரைச்சதம் என்ற சாதனைக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார் கம்பீர். கம்பீர் 25 அரைச்சதங்களுடன் முதல் இடத்திலும் ரெய்னா 24 அரைச்சதத்துடன் இரண்டாவது இடத்திலும் ரோகித் சர்மா 23 அரைச்சதங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# பேனாட்டின் மறைவுக்கு சச்சின், கிளார்க் இரங்கல்

கிரிக்கெட்டின் குரல் என்றழைக்கப்பட்ட பிரபல வர்ணனையாளரும், முன்னாள் ஆஸ்திரேலிய தலைவருமான ரிச்சி பேனாட் மிக அண்மையில் சிட்னியில் மரணமடைந்தார்.

பெனாடின் மரணத்தைத் தொடர்ந்து சிட்னி துறைமுக பாலத்தில் உள்ள தேசியக் கொடி உள்ளிட்ட அனைத்து கொடிகளும் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. ரசிகர்கள் அஞ்சலி செலுத்துவதற்காக பேனாட் விளையாடிய சிட்னி மைதானம் திறந்துவிடப்பட்டது. அங்குள்ள பெனாடின் வெண்கல சிலை முன்பு மலர் கொத்துகளை வைத்து ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினார்கள். இந்த நிலையில் பேனாட்டின் மறைவுக்கு சச்சின் தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

சச்சின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், பேனாட்டின் மறைவு சர்வதேச கிரிக்கெட்டுக்கு மிகப் பெரிய இழப்பாகும். கிரிக்கெட் பற்றிய அவருடைய நுண்ணறிவு அபரிமிதமானது. அவருடன் கலந்துரையாடிய இனிய நினைவுகள் எனக்குள் இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய டெஸ்ட் தலைவர் மைக்கல் கிளார்க், பேனாட்தான் எங்களுக்கு தூண்டுகோல். அவருடைய வர்ணனையை கேட்டுத்தான் நாங்கள் வளர்ந்தோம். அவர் மிகச் சிறந்த வீரர் மட்டுமல்ல, தலைவரும் கூட. அவர் ஒரு அற்புதமான தலைவர் என்பதை களத்தில் மட்டுமல்ல, களத்துக்கு வெளியேயும் காட்டினார் என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகம் முழுவதிலும் உள்ள கிரிக்கெட் ஜாம்பவான்கள் உள்ளிட்ட பலர் பேனாட்டின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர். ஐ.சி.சியும் இரங்கல் தெரிவித்துள்ளது. (ரி)

# டெல்லியை சல்லிசல்லியாக நொறுக்கியது ராஜஸ்தான்




கூடாவின் தொடர்ச்சியான வாண வேடிக் கைகளும், ரஹானேயின் நிதானமும் மொறிஸின் பந்துவீச்சும் கைகொடுக்க சிறந்த ஒரு குழுமுயற்சி

யால் பலமிக்க டெல்லியை வீழ்த்தி திரில் வெற்றியை பதிவு செய்தது ராஜஸ்தான்.

கடந்த ஆட்டத்தில் தோல்வியடைந்த காரணத்தினால் இந்த ஆட்டதில் ராஜஸ்தானை வீழ்த்தி வெற்றிக் கணக்கை தொடங்க வேண்டும் என்ற ஒரு வகைக்கூட்டாயத்தில் களமிறங்கியது டெல்லி. வெற்றிப் பாதையில் பயணித்துக் கொண்டிருப்பதால் எப்பாடு பட்டாவது டெல்லியை வீழ்த் திவிட வேண்டும் என்பதில் முனைப் புக்காட்டியது ராஜஸ்தான். என்னமோ தெரியவில்லை. ஆட்டம் ஆரம்பமாகும் முன்னரே மைதான வாக்கெடுப் பின்படிவெற்றிவாய்ப்பு டெல்லிக்கு 65 வீதமாகவும் ராஜஸ்தானுக்கு 35 வீதமாகவும் காட்டி யது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்றதும் சாதகமாய் அமைய களத்தில் டெல்லி ஆரம்பவீரர்களாக அகர் வாலுடன் ஐயர். ராஜஸ்தானின் பந்துவீச்சுக்கள் ஆரம்பம் முதல் அடிக் கொருதடவை பவுண்டரி வரை பறந்து விட்டு வந்தது. அணியின் ஓட்ட மும் எதிர் பார்ப்புக்களுக்கு இணங்க எகிறியது. ஆக மொத் தத்தில் டெல்லி 200 ஓட்டங்களை எட்டப்போகிறது என்பது பரவலான எதிர்பார்ப்புக்களில் ஒன்றாக மாறியது. நான்கு பந்துப் பரிமாற்றத்திலேயே 45 ஓட்டங்கள் எட்டப்பட்டது. ஆனால் இலக்குகளின் சரிவும் அதே பந்துப்பரிமாற்றத்திலிருந்து ஆரம்பமானது. அகர்வாலை, வாலைச் சுருட்டிக் கொள்ளுமாறுஅனுப்பி வைத்தார் ரம்பி. களத்தில் தலைமை இன்னிங்ஸிற்காக டுமினி. சற்று நிதானித்து விட்டார். ஐயரும் ஸ்தம்பித்துப் போனார் ஆக ஓட்ட விகிதம் சற்று குறையஆரம்பித்தது. தடுமாற்றம் அதிகரிக்க விடைபெற்றார் ஐயர். களத்தில் சாவினை வென்ற யுவ ராஜ். சரிவை சரியாக

மீட்டார் ஆனால் நிலைக்கவில்லை. தனக்கே உரிய பாணியில் உடலை முறையாக வளைத்து 2 வாண வேடிக் கைகளை ஒன்றன்பின்னர் ஒன்றாக ஏவினார். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த மோஷஸ் யுவியை நிற்க விடவில்லை. பவிலியனுக்கு திருப்பினார். இலங்கையின் தலைவர் மத்தியூஸ் யுவியின் இடத்தை பக்காவாக நிரப்பினார். இரட்டிப்பு அதிரடி காட்டினார். மறு முனையில் டுமினியும் ஆரம்பித்தார் ஓட்டங்கள் துரிதமாக ஓட ஆரம்பித்தன. முடிவில் டெல்லி 184–3.

120 பந்துகளில் 185 ஓட்டங்கள். கொஞ்சம் கடினம்தான் மைதான வாக்கெடுப்பு உய்மையாகும் சாத்தியக்கூறுகள் அதிகமாக இருந்தன. வெல்லலாமா என்ற கேள்விகள் முகத்தில் பிரதிபலிக்க களத்தில் ரஹானேயுடன் சாம்சன். 11 ஓட்டங்களுடன் களத்தில் சாம்சன். ஆஸியை தூக்கி நிறுத்தும் சிமித் ராஜஸ்தானை கைவிட மாட்டார் என்றே பலரும் எதிர்பார்த்தனர். எதிர்பார்ப்புக்களை பொய்யாக்கி ஏமாற்றிச் சென்றார் பதின்ம ஓட்டங்களுடன். சுப்பராக இல்லாவிட்டா லும் சுமாராக செயற்பட்டார் நாஜர். பின்னி எடுப்பார் என்று பார்த்தால் பெயரில் மட்டும்தான் பின்னி மற்றும்படி வேறொன்றும் செய்யவில்லை அவர். ஒருமுனையில் போராடிக் கொண்டிருந்த ரஹானேக்கு கரம் கொடுத்தார் கூடா. கூடாவின் விளாசல்களில் பந்து பவுண்ட ரியை நோக்கி கூவிக்கொண்டு சென்றது. அடுத்தடுத்து நான்கு சிக்கர்களை விண்ணில் பறக்க விட் டார். 25 பந்துகளில் அசத்தலான அரைச்சதத்தையும் காட்டினார். டெல்லியும் விடுவதாக இல்லை. ரஹானேயையும் கூடாவையும் மிகச்சொற்ப நேர இடைவெளிக்குள் வீழ்த்தி ஆட்டத்தை தம்மை நோக்கியும் சாய வைத்தது. போராட்டத்தின் உச்சக்கட்டம் ஆட்டத்தில் தெறித்தது. இறுதிப் பந்துப்பரிமாற் றத்தில் 12 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலைமை. குட்டித் தீவின் தலைவரிடம் பந்து கொடுக்கப்பட்டது. அணியின் நம்பிக் கைக் கேற்பவே முதல் இரண்ட பந்து களையும் ஓரிரு ஓட்டத்துடன் வீசினார். ஆனால் நான்காவது பந்தில் பவுண்டரியை விட்டுக்கொடுத்து விட்டார். இறுதிப்பந்தில் ஒரு மூன்று ஓட்டத்தைப் பெற்றால் வெற்றி. இரண்டு ஓட்டத்தைப் பெற்றால் சுப்பர்ஓவர் என்ற நிலைமை. சுப்பர்ஓவர் நிலைமையையே பலரும் எதிர்பார்த்தனர். எதிர் பார்ப்புக்களைப் பொய்யாக்கி மைதான வாக்கெடுப்புக்களையும் தவிடுபொடியாக்கி அசத்தலான பவுண்டரியை விளாசினார் மோறிஸ். மொத்தத்தில் இறுதிப் பந்தில் எதிர்பாராத வெற்றியை எட்டியது ராஜஸ்தான். ஆட்டநாயகனாக கூடா அறிவிக்கப்பட்டார்.

(ரி)




உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

SHAMROCK
ஈச்சமோட்டை
A/L - 2017
C.Maths
G. கண்ணன் B.Sc
ஆரம்பம்:
16.04.2015
3 pm

# சென்னைக்கு விசில் போடு




நடப்பு ஐ.பி.எல் தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சிறப்பான செயற்பாட்டை வெளிப்படுத்தி தொடர்ச்சியாக வெற்றிகளைக் குவித்துவரும் நிலையில் சென்னையின் ஆட்டத்தில் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் சென்னையை வீழ்த்துவது எந்த அணிக்கும் சவாலான காரியம் எனவும் சென்னையின் பயிற்சியாளர் பிளெமிங் தெரிவித்துள்ளார்.

சென்னை குறித்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் கூறியதாவது– ஐ.பி.எல் ஆரம்பிப்பதற்கு முன்பாக சென்னையின் ஆட்டம் துருப் பிடித்த நிலையில் இருந்தது. இதனால் அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் காணவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் இரண்டே ஆட்டத்தில் சென்னை அணி மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளது. இது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. எந்த குறையும் இல்லாமல் சகலதுறைகளிலும் சிறப்பான ஆட்டத்தை சென்னை அணி வெளிப்படுத்தி வருகின்றது. சென்னையின் தற்போதைய நிலையில் சென்னையை வெற்றிகொள்வதென்பது எந்த அணிக்கும் மிகவும் சவாலான காரியம் என்றார்.

டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் எதிர்வரும் 17 ஆம் திகதி மும்பை அணியை எதிர் கொள்கிறது.

(ரி)

தமிழ் புத்தாண்டை முன்னிட்டும், பாடசாலை விடுமுறையை பயனுள்ளதாக்கவும்

BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

Spoken English with Grammar - Quick Learning Course 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்காகவும் நடைபெறுகிறது.

இக் கற்கை நெறிகள் O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

Diploma In English 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
★ எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
★ Excellent Teacher's Panel & Individual Attention
★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாகவரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

Batches Starts On
15.04.2015@ 9.00am
17.04.2015@ 3.00pm
18.04.2015@ 8.30am
20.04.2015@ 9.00am
21.04.2015@ 3.00pm

எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேச கற்கை நெறி

IELTS 2½ Months (Academic & General)
International English Language Testing System
Student/Settlement Vi...
மூலமாக வெளி நா...
செல்பவர்களுக்கான...
WE GURANTEE BAND 6.0 AND ABOVE
Approved centre for Registering IELTS candidates in Jaffna

ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்களுக்கு கிழமை. வார இறுதி நாட்களில் பிரத்தியேக வகுப்புகள் நடைபெறும் Free Free Free Free

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550
HotLine(S) 0777585913, 0777222422 0714299935

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.